# புதிய கலாச்சாரம்

மே 2009
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 10.00



# போலி ஜனநாயகம் பெற்றெடுத்த மன்னராட்சி!

**கலை இலக்கியம்**
**யாவும் மக்களுக்கே!**

- புதிய கலாச்சாரம்
- மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

- போர் : **26**
- குரல் : **6-12**
- நவ.-டிச. 08, ஜன.-மே 09

உள்நாடு: ரூ. 10.00
ஆண்டுச் சந்தா: ரூ. 150.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா ரூ. 750.00

*சந்தா, படைப்புகள் அனுப்பவும் தகவல்களுக்கும்*



இரா. சீனிவாசன்,
16, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
(15-ஆவது தெரு அருகில்),
அசோக் நகர்,
சென்னை - 600 083.

தொலைபேசி: 044-23718706
9941175876

மின் அஞ்சல் முகவரி:
pukatn@gmail.com.



அலுவலக நேரம்:
காலை 10 முதல் மாலை 5 மணி வரை.

*அட்டை வரைகலை:* **அதிரடி**

*அட்டை வடிவமைப்பு:*
**ஸ்பார்ட்டகஸ்**


# இந்திய இராணுவமே, ஈழத்தை விட்டு வெளியேறு!

''புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டுச் சரணடைந்தால் அவர்களுடைய உயிர்களையும், மக்களின் உயிர்களையும் காப்பாற்றிக் கொள்ளலாம். இல்லாவிட்டால் அனைவருமே வேரோடு அழித்து ஒழிக்கப்படுவார்கள்'' என்று இனப்படுகொலையைப் பகிரங்கமாகப் பிரகடனம் செய்த ராஜபக்சே, தற்போது இரண்டு நாள் போர் நிறுத்தம் அறிவித்திருக்கிறார். சிங்கள இராணுவத் தாக்குதலில் உற்றார் உறவினரை இழந்து அநாதையாகி, கை கால்களை இழந்து முடமாகி, சோறும் தண்ணீரும் இன்றி நடைபிணமாகித் தவித்துக் கொண்டிருக்கும் ஈழத்தமிழ் மக்களுக்கு ராஜபக்சே வழங்கியிருக்கும் வெளியேற்ற நோட்டீசுதான் இந்தப் போர் நிறுத்தம்.

ஐரோப்பிய நாடுகளிலும் ஆஸ்திரேலியாவிலும் புலம் பெயர்ந்த ஈழத்தமிழ் மக்கள் நடத்திவரும் தொடர்ச்சியான போராட்டங்களின் விளைவாக மேலை நாட்டு அரசுகள் கொடுத்த அழுத்தம் காரணமாகத்தான் இந்தப் போர்நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளதேயன்றி கருணாநிதி கூறிக்கொள்வது போல இது இந்திய அரசின் தலையீட்டினால் நிகழ்ந்தது அல்ல.

இந்திய அரசின் தலையீடு என்பது, சிங்கள அரசின் கரத்தை வலுப்படுத்தும் நோக்கத்தில்தான் இருந்து வருகிறது. புதுக் குடியிருப்பில் வீசப்பட்ட விசவாயுக்குண்டுகள் இந்திய இராணுவத்தால் சப்ளை செய்யப்பட்டவை என்பதுடன், இலங்கை இராணுவத்தின் 58 வது, 59வது படைப்பிரிவுகளில் பாதிப்பேர் இந்திய சிப்பாய்கள் என்பதும், தற்போது இலங்கை இராணுவத்தைக் களத்தில் நின்று வழிநடத்துவது இந்திய அதிகாரிகள் தான் என்பதும் அம்பலமாகியிருக்கிறது.

எனினும் இவையெல்லாம் இப்போதுதான் தெரியவந்துள்ள இரகசியங்கள் அல்ல. ஈழ ஆதரவாளர்கள் அனைவருக்கும் முன்னமே தெரிந்த உண்மைதான். ஈழத் தமிழர் பிரச்சினையை இலங்கையின் மீது மேலாதிக்கம் செய்யும் தனது நோக்கத்துக்கு ஏற்பப் பயன்படுத்திக் கொள்வது, தேசிய இன விடுதலையை நசுக்குவது என்ற அணுகுமுறையைத்தான் கடந்த 25 ஆண்டுகளாகவே இந்திய அரசு கடைப்பிடித்து வருகிறது. ஒரு வார்த்தையில் சொல்வதானால் அன்றும் இன்றும் இந்திய அரசு, ஈழத் தமிழ் மக்களின் எதிரிதான்.

எனினும், நெடுமாறன், வைகோ முதலான ஈழ ஆதரவாளர்கள் ஈழ விடுதலையின் எதிரியான இந்திய அரசை, தொடர்ந்து நண்பனாகவே சித்தரித்து வருகிறார்கள். கடந்த சில மாதங்களுக்கு முன்பு வரை காங்கிரசு அரசை அவ்வாறு சித்தரித்து வேண்டுகோள் விடுத்தார்கள். இன்று காங்கிரசுக்கும் திமுகவுக்கும் மாற்றாக பா.ஜ.கவையும், அதிமுகவையும் வெற்றி பெறச்செய்யும் முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள். தான் ஆட்சிக்கு வந்தால் நூறு நாட்களில் ஈழப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமென்று அறிவித்திருக்கிறது பாரதிய ஜனதா. வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் புலிகளின் முற்றுகையில் யாழ் கோட்டைக்குள் சிக்கியிருந்த 40,000 சிங்கள இராணுவத்தினரைக் காப்பாற்றுவதற்காக, இலங்கையில் தலையிட்ட பா.ஜ.க.வினர் ஈழப் பிரச்சினைக்குத் தீர்வு காண்போமென்று கூறுவதும், அதை நம்புமாறும் பாரதிய ஜனதாவுக்கும் அதிமுகவுக்கும் வாக்களிக்குமாறும் மக்களை ஈழ ஆதரவாளர்கள் நம்பவைப்பதும் காணச்சகிக்க முடியாத துரோகங்கள்.

காஷ்மீர், வட கிழக்கிந்தியாவின் தேசிய இனங்கள் மீது இராணுவ அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டிருக்கும் இந்திய அரசு, ஈழத் தமிழ் மக்களின் இன உரிமையை மட்டும் ஆதரிப்பதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை. எதிர்ப்பதற்கான காரணங்கள்தான் இருக்கின்றன. இலங்கையிலும் தெற்காசியப் பகுதியிலும் இந்திய ஆளும் வர்க்கங்கள் கொண்டிருக்கும் அரசியல், பொருளாதார, இராணுவ நலன்கள் தான் டில்லி ஆட்சியாளர்களை வழிநடத்துமேயன்றி, ஈழத்தமிழ் மக்களின் கண்ணீரோ, தமிழக மக்கள் அளிக்கும் வாக்குகளோ அல்ல. டில்லியில் எத்தகைய ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் இந்தக் கொள்கையில் மாற்றம் ஏற்படப் போவதில்லை. இந்த உண்மையை நாம் நேருக்கு நேர் சந்திக்க வேண்டும். 'இந்திய இராணுவமே ஈழத்தை விட்டு வெளியேறு' என்று முழங்க வேண்டும்.

இலங்கைக்கு ஆசைப்பட்டால், தமிழகத்தை இழக்க வேண்டியிருக்கும் என்ற அச்சத்தை இந்திய ஆளும் வர்க்கத்துக்கு நாம் ஏற்படுத்த வேண்டும். நாடாளுமன்றத் தேர்தலைப் புறக்கணிப்பது என்பது இந்தப் போராட்டத்தின் ஒரு படி. ஈழமக்களுக்காகத் தமிழகம் விடுத்த ஒருமனதான கோரிக்கையை நிராகரித்த இந்திய அரசை, நிராகரிக்கிறார்கள் தமிழ் மக்கள் என்று உணர்த்தும் ஒரு அடி. ●

# போலி ஜனநாயகம் பெற்றெடுத்த புதிய மன்னராட்சி!

**உ**லகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டில் நடக்கும் தேர்தல், பல்வேறு மொழி, இன, மத, சாதி, பிரதேச வேறுபாடுகளால் சூழப்பட்டிருக்கும் நாட்டில் நடக்கும் பதினைந்தாவது பாராளுமன்றத் தேர்தல் என்றெல்லாம் இந்தியாவின் ஜனநாயக மாண்பைப் பார்த்து வெளிநாட்டினர் வியப்படைவதுண்டு. என்ன இருந்தாலும் ஜனநாயகமாயிற்றே! ஆனால் இந்த ஜனநாயகத்தின் மாண்பினை உள்ளிருந்து வேறு வழியில்லாமல் அனுபவித்துக் கொண்டிருக்கும் இந்திய மக்களைப் பொறுத்தவரை, இந்தத் தேர்தல் ஐந்தாண்டுகளுக்கொரு முறை நடக்கும் கூத்து.

இந்தக் கூத்தில் நவவிரசங்களும் காட்டாறாய் பெருக்கெடுத்து ஓடும். காலை எழுந்ததும் அனிச்சைச் செயலாகப் பல் துலக்குவது போல மக்களும் வாக்கெடுப்பு அன்று ஏதோ ஒரு விட முடியாத சடங்கை நிறைவேற்றுவது போல வாக்களித்து வருகின்றார்கள். முன்பு முத்திரை குத்தியவர்கள் இப்போது எந்திரத்தில் பொத்தானை அமுக்கிவிட்டு வருகிறார்கள். வாக்களிக்கும் முறை மட்டுமல்ல, வாக்கு வாங்கும் அரசியல் தலைவர்களது விபச்சாரமும் புதிய வடிவங்களை எடுத்திருக்கிறது.

நேற்று முளைத்த விஜயகாந்தோ, முந்தைய நாள் குதித்த தி.மு.க.வோ எல்லாக் கட்சிகளும் தமது வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் நேர்காணலில் கேட்கும் முக்கியமான கேள்வி என்ன? தேர்தலுக்கு எவ்வளவு செலவு செய்ய முடியும். இதில் பலரும் நாலைந்து கோடிகளை இறைக்கலாம் என்று பேசியதைப் பார்த்து கருணாநிதியே வியப்படைந்து விட்டாராம். கோடிகளுக்குப் பதில் இலட்சங்களில் பதிலளித்த அனாமதேயங்களை கேப்டன் விரட்டி விட்டாராம். புரட்சித் தலைவியின் கட்சியில் மட்டும் கோடிகளோடு ஜாதகமும் பொருத்தமாக இருக்க வேண்டுமாம். ஆந்திராவில் தெலுங்கானா ராஷ்ட்ரிய சமிதி கட்சிக்கு பத்துக் கோடி ரூபாயை அளித்து ஒரு மக்களவைத் தொகுதியை ஏலமெடுத்த கதையைப் பெருமையாக பத்திரிகைகளில் பீற்றியிருக்கிறார் ஒரு முதலாளி.

மக்களைவைத் தேர்தலில் உங்கள் தொகுதியில் வெற்றி பெற்றால் மக்களுக்கு என்ன செய்வதாகத் திட்டம் என்பதையோ, கடந்த காலத்தில் அவர்கள் செய்த சமூக சேவை என்னென்ன என்பதையோ எந்தக் கட்சியும் கேட்கவில்லை. கோடிகள்தான் தகுதி என்றால் இது ஜனநாயகமா இல்லை பணநாயகமா? தேர்தல் ஆணையத்தின் விதிப்படி ஒரு தொகுதியில் 25 இலட்சம்தான் செலவழிக்க முடியுமென்றாலும் எல்லாக் கட்சிகளின் வேட்பாளர்களும் தலா பத்து கோடி செலவழிப்பதாக ஊடகங்கள் கூறுகின்றன. இவ்வளவு காஸ்ட்லியாக செலவழித்து இந்த சமூக சேவை செய்ய வேண்டிய அவசியமென்ன?



சூத்திரம் ரொம்பவும் சுலபமானது. ஏதோ ஒரு கட்சி ஓரிரு தொகுதிகளை வென்று யாருக்கும் பெரும்பான்மையில்லாத பட்சத்தில் இவர்களுக்கு கொண்டாட்டம்தான். ஏதோ ஒரு இணை அமைச்சர் பதவியைப் பெற்றுக் கொண்டு செட்டிலாகிவிட்டால் இருக்கவே இருக்கிறது சுவிஸ் வங்கி. சுவிஸ் வங்கிகளில் இருக்கும் ஊழல் பணம் 25 இலட்சம் கோடியை இந்தியாவிற்கு மீட்டுத் தருவதாக பா.ஜ.க முழங்குகிறது. ஏன் இவர்கள் ஆட்சியிலிருந்த போது முயற்சி மேற்கொள்ளாமல் இருந்ததின் மர்மம் என்ன? காங்கிரசு, பா.ஜ.க முதலான தேசியக் கட்சிகள் கருப்புப்பணம் வைத்திருக்கும் முதலாளிகளிடம் நன்கொடை வாங்கமாட்டோம் எனச் சவால் விட வேண்டியதுதானே?

இந்திய முதலாளிகள் நன்கொடை கொடுப்பதோடு பல அரசியல் கூட்டணிகளை உருவாக்கும் தரகர்களாகவும் செயல்படுகிறார்கள். பல இடங்களில் டெபாசிட் கூட கிடைக்காமல் தோல்வியுற இருக்கும் விஜயகாந்தின் தூதர்கள் டெல்லியில் காங்கிரசு நிர்வாகிகளைச் சந்திப்பதற்கு முகேஷ் அம்பானிதான் எல்லா ஏற்பாடுகளையும் செய்தாராம். இதுபோக பல முதலாளிகள் மேலவையின் உறுப்பினர்களாகவும் இருக்கிறார்கள். எல்லா தேசிய கட்சிகளிலும் இம்முதலாளிகளுக்கான தரகர்கள் முக்கியப் பொறுப்புக்களில்

உள்ளனர். அமர்சிங், அருண் ஜேட்லி, பண்ருட்டி ராமச்சந்திரன், தயாநிதி மாறன், சந்திரபாபு நாயுடு எனப் பலரும் முதலாளிகளுக்கு நெருக்கமானவர்கள் தான்.

தேர்தலில் பணம் செலவழித்துத் தான் 'சேவை' செய்ய முடியுமென்பது இருக்கட்டும். அதில் தெரிவாவதற்குக் கூட எந்தத் தகுதியும் தேவையில்லை என்பதே இந்த ஜனநாயகத்தின் யோக்கியதைக்கு சான்று பகரும். சென்ற மக்களவைத் தேர்தலில் காங்கிரசுக்காக மும்பை தொகுதியொன்றில் தெரிவான நடிகர் கோவிந்தா பெரும்பான்மை நாட்கள் பாராளுமன்றத்திற்கே செல்லவில்லையாம். தொகுதியிலும் அவர் தலை தென்படவில்லையென்பதால் இந்த அவப்பெயரை நீக்குவதற்காக நடிகை நக்மா இந்தத் தேர்தலில் காங்கிரசிடம் சீட்டு கேட்டாராம். உ.பி.யில் முலாயம்-இன் சமாஜ்வாதி கட்சிக்காக ஜெயா பச்சன், ஜெயப்பிரதா, சஞ்சய் தத் போன்றோரெல்லாம் வேட்பாளர் பட்டியலில் இருக்கிறார்கள். இதில் மும்பை குண்டு வெடிப்பு வழக்கில் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டு பிணையில் இருக்கும் சஞ்சய் தத் போட்டியிடக் கூடாது என உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்ததனால் முலாயம் கலங்கிப் போய் விட்டாராம். பா.ஜ.க.வில் தர்மேந்திரா, ஹேமமாலினி, வினோத் கன்னா, சத்ருகன் சின்ஹா முதலியோரெல்லாம் களமிறங்கக்கூடும். ஆந்திராவில் ரோஜா, விஜயசாந்தி, பாலகிருஷ்ணா, ஜூனியர் என்.டி.ஆர். என எல்லோரும் பிரச்சாரத்தில் முழுவீச்சாய் இறங்கியிருக்கிறார்கள். இதில் சிலர் வேட்பாளராகப் போட்டியிலும் இறங்கியிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டின் கதை நமக்குத் தெரியுமென்பதால் விவரிக்கத் தேவையில்லை. ஆனால் நாயகன் படத்தில் ஹீரோவாக நடித்த ஜே.கே.ரித்தீஷுக்கு தி.மு.க.வின் இராமநாதபுரம் வேட்பாளர் தகுதி கிடைத்திருக்கிறது. கந்து வட்டியில் பல கோடிகளைச் சம்பாதித்திருக்கும் இந்த நடிகர் தமது தொகுதி மட்டுமல்ல அருகிலுள்ள தொகுதிகளின் செலவுகளையும் பார்த்துக் கொள்வதாக உறுதி அளித்திருக்கிறாராம். இப்படி மரத்தைச் சுற்றி, தொப்புளைச் சுற்றி டூயட் பாடும் ஜிகினாக்களெல்லாம் நாடாளுமன்ற உறுப்பினராக அவதரிப்பதைப் பார்க்கும் போதே நமது ஜனநாயகத்தின் அவலட்சணம் பளிச்செனத் தெரிகின்றது.

அடுத்து மன்னராட்சி போய் வந்த மக்களாட்சியில் எப்படி மன்னராட்சி மீண்டு வருகிறது என்பதைப் பார்ப்போம். சில வருடங்களுக்கு முன்பாவது வாரிசு அரசியல் பற்றி சில விமரிசனங்கள் ஊடகங்களில் எழுந்தன. அப்போது இலை மறைவு காய்மறைவாக இருந்த வாரிசு அரசியல் இப்போது நீக்கமற எல்லாக் கட்சிகளிலும் இருப்பதால் மக்களும் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. அரசியலே ஒரு நேர்த்தியான தொழிலாக மாறி வருவதால் தந்தையின் இடத்தில் தனயர்கள் இயல்பாகவே முடிசூடிக் கொள்கிறார்கள்.



**தாத்தா நேரு முதல் கொள்ளுப்பேரன் ராகுல் காந்தி வரை தொடரும் 'மன்னராட்சி!' இந்த மேட்டுக்குடி குலக் கொழுந்து அடுத்த பிரதமராம்!**

**சில வருடங்களுக்கு முன்பாவது வாரிசு அரசியல் பற்றி சில விமரிசனங்கள் ஊடகங்களில் எழுந்தன. அப்போது இலைமறைவு காய்மறைவாக இருந்த வாரிசு அரசியல் இப்போது நீக்கமற எல்லாக் கட்சிகளிலும் இருப்பதால் மக்களும் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. அரசியலே ஒரு நேர்த்தியான தொழிலாக மாறி வருவதால் தந்தையின் இடத்தில் தனயர்கள் இயல்பாகவே முடிசூடிக் கொள்கிறார்கள்.**

விஜயகாந்த் கட்சியின் முக்கியப் பொறுப்புக்களிலும், முடிவுகளிலும் அவரது மனைவி பிரேமலதாவும், மைத்துனர் சதீஷும் இடம் பெற்றிருக்கிறார்கள். காங்கிரசு தலைவர்களிடம் கூட்டணி வைப்பது குறித்து மைத்துனரும், அ.தி.மு.க.விடம் கூட்டணி வைப்பது குறித்து மனைவியும் சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் திரைமறைவு பேச்சுவார்த்தைகளை நடத்தினார்கள். அதிலும் பண விவகாரம்தான் முக்கியமாகப் பேசப்பட்டது. தி.மு.க.வில் அழகிரி, தயாநிதி மாறன் முதலானோர் எந்தத் தடையுமின்றி வேட்பாளராகியிருக்கிறார்கள். அ.தி.மு.க.வில் மன்னார்குடி கும்பலின் குடும்பம் முடிவுகளை எடுக்கிறது. ப.சிதம்பரத்தின் மகன் கார்த்தி சிதம்பரம், வைகோவின் மகன் வையாபுரி, முன்னாள் காங்கிரசு தலைவர் கிருஷ்ணசாமியின் மகன் விஷ்ணுபிரசாத், தங்கபாலுவின் மனைவி, இப்படி மேல்மட்டம் மட்டுமல்ல கீழ்மட்டத்திலிருக்கும் மாவட்டப் பிரமுகர்களின் வாரிசுகளும் இப்போதைய தேர்தலுக்கு வந்திருக்கிறார்கள். தூத்துக்குடி மாவட்ட தி.மு.க செயலாளரான பெரியசாமியின் மகள் தமிழக அமைச்சரென்றால், மகனுக்கும் சீட் கேட்டிருக்கிறார் தந்தை. கொடுத்தால் குடும்பமே கட்சியை முழுங்கி விட்டதாக பேச்சுவருமென்று பெரியசாமியின் பினாமி ஒருவருக்கு சீட்டு கொடுத்திருக்கிறார்கள்.

கேரளாவில் கொட்டை போட்ட பெருச்சாளியான கருணாகரனின் மகனும், மகளும் இப்போது முழுநேர அரசியலில் இருக்கிறார்கள். ஆந்திராவில் சிரஞ்சீவியின் சகோதரர்களும், மைத்துனர்களும் கட்சியைக் கட்டுப்படுத்துவதோடு தேர்தலிலும் போட்டியிடுகிறார்கள். சந்திரபாபு நாயுடுவுக்காக என்.டி.ராமாராவ் குடும்பத்தைச் சேர்ந்த நடிகர்கள் தமது குடும்பத்தொழில் போல நினைத்து பிரச்சாரம் செய்கிறார்கள். மராட்டியத்தில் சரத்பவாரின் மகள் போட்டியிட, பால்தாக்கரே மகன் தந்தையின் ரிமோட் கண்ரோலரை வாங்கி சிவசேனாவை இயக்குகிறார். ஒரிசாவில் 90களின் இறுதியில் பிஜூ பட்நாயக் இறந்து போக அவரது மகன் வெளிநாட்டில் படித்துக் கொண்டிருந்த நவீன் பட்நாயக் நாடு திரும்பி பிஜூ ஜனதா தள் ஆரம்பித்து இரண்டாவது முறையாக முதலமைச்சராக தொடர்கிறார். ஆரம்பத்தில் இவருக்கு ஒரியா மொழி கூட தெரியாதாம்.

இவை போக இந்தி பேசும் மாநிலங்கள் முழுவதிலும் முன்னாள் மன்னர்கள், ராணிகள், நிலப்பிரபுக்கள், முதலாளி



களின் வாரிசுகள்தான் எல்லா கட்சிகளிலும் நிரம்பி வழிகிறார்கள். லாலுவின் மைத்துனர்கள், மனைவி, முலாயமின் மகன் எல்லாம் உ.பி, பீகார் அரசியலில் மையம் கொண்டுள்ள புதிய வாரிசுகள். சுய நிர்ணய உரிமைக்காக போராட்டம் நடக்கும் காஷ்மீரிலும் கூட தேசிய ஜன நாயகக்கட்சி எனும் பிழைப்புவாதக்கட்சியின் தலைமை ஷேக் அப்துல்ல அவரது மகன் பரூக் அப்துல்லா, இவரது மகன் ஓமர் பாரூக் என வாழையடி வாழையாக தொடர்கிறது. ஓமருக்கும் கூட ஆரம்பத்தில் காஷ்மீர் மொழி தெரியாதாம். இந்த வாரிசு புராணத்தில் சி.பி.எம் கட்சியும் விதிவிலக்கல்ல. கோவை தொகுதியில் நிறுத்தப்பட்டிருக்கும் சி.பி.எம் வேட்பாளர் முதுபெரும் தலைவர் ரமணியின் மருமகனாம்.

தாராளமயமாக்கத்தின் விளைவாக நாடும் மக்களும் ஒட்டச் சுரண்டப்பட்டாலும், இதன் ஆதாயத்தை பங்கு போடுபவர்களில் அரசியல் தலைவர்களும் உண்டு என்பதால் தனியார்மயத்திற்காக பன்னாட்டு முதலாளிகள் வீசும் எலும்புத் துண்டைக் கவ்வுதற்கு இப்போது வாய்ப்பு அதிகம் என்பதால் வாரிசுகள் சராமாரியாக களமிறக்கி விடப்படுகிறார்கள். ஸ்பெக்ட்ரம் ஊழலில் சில ஆயிரம் கோடிகள் யாரும் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு பாதுகாப்பான முறையில் சுருட்டப்பட்டிருப்பதும், மு.க.அழகிரி பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதும், திருமங்கலத்தில் ஊரார் அனைவருக்கும் கறி விருந்து நடைபெற்றதும், இனி டெல்லி கறி விருந்துகளில் அண்ணன் அழகிரி கலக்கப் போவதும் வெவ்வேறு விசயங்கள் அல்ல.

இந்தத் தேர்தலில்தான் கொள்கைக்காக கூட்டணி என்பது அட்சர சுத்தமாக தூக்கியெறியப்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் தேர்தல் என்றால் கூட்டணிக்கான ஆயத்தங்கள் எல்லாம் தேர்தலுக்கு சற்று காலம் முன்பே அதுவும் மேலோட்டமாக என்றாலும் ஏதாவது கொள்கையின் பெயரில் செய்யப்படும். தற்போதுதான் முதன்முதலாக தேர்தலுக்கு முந்தைய நாள்வரை கூட்டணிகள் உருவாகலாம், மாறலாம் என்ற நிலைமை உருவாகியிருக்கிறது. பா.ம.கவை எடுத்துக் கொள்ளுங்கள், கடைசி நேரம் வரை காங்கிரசு, அ.தி.மு.க. என இரண்டு கட்சிகளிடமும் பேரம் நடத்தி இறுதியில் தேர்தலுக்கு பின்னர் அ.தி.மு.க.வை காங்கிரசுக் கூட்டணிக்கு கொண்டு வருவதாக பேரம் பேசப்பட்டு பா.ம.க, அ.தி.மு.க அணியில் இடம் பெற்றிருக்கிறது.

ஒரிசாவில் கிறித்தவ மக்களை வேட்டையாடிய சங்க பரிவார கும்பலோடு கூட்டணி வைத்துக் கொண்ட பிஜூ ஜனதா தளம் தொகுதிப் பங்கீடில் வந்த முரண்பாடு காரணமாக பா.ஜ.கவை விட்டு பிரிந்து விட்டது. அடுத்த நாளே சி.பி.எம்.மின் சீதாராம் எச்சூரி புவனேஸ்வரம் சென்று நவீன் பட்நாயக்கை பார்த்து மூன்றாவது அணியில் சேர்க்கிறார். கூடவே மதச்சார்பற்ற கட்சி என பாராட்டும் வேறு! இப்படி நாடெங்கும் கூட்டணி உரசல்களினால் உருவான இடைவெளியில் புகுந்து கொண்டுதான் போலிக் கம்யூனிஸ்டுகள் மூன்றாம் அணியை உருவாக்கினார்கள். இதனுடைய ஆயுள் என்பது தேர்தல் முடியும் வரையிலும்தான். அதற்குப் பிறகு இந்தக் கட்சிகள் காங், பா.ஜ.க. இரண்டோடும் சேரலாம் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை!

**ஸ்பெக்ட்ரம் ஊழலில் சில ஆயிரம் கோடிகள் யாரும் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு பாதுகாப்பான முறையில் சுருட்டப்பட்டிருப்பதும், மு.க.அழகிரி பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதும், திருமங்கலத்தில் ஊரார் அனைவருக்கும் கறி விருந்து நடைபெற்றதும், இனி டேல்லி கறி விருந்துகளில் அண்ணன் அழகிரி கலக்கப் போவதும் வெவ்வேறு விசயங்கள் அல்ல.**

பார்ப்பன பாசிசத்தை கொள்கையாக வைத்திருக்கும் ஜெயலலிதாவும் மதச்சார்பற்றவர் என முத்திரை குத்தப்பட்டு சி.பி.எம்.மால் மூன்றாவது அணியில் சேர்க்கப்பட்டிருக்கிறார். இவரும் கடைசி நேரம் வரை காங் கூட்டணிக்கு முயன்று முடியவில்லை என்பதாலும், பா.ஜ.க.வுடன் சேர்ந்தால் சிறுபான்மையினர் வாக்குகள் கிடைக்காது என்பதாலும் மூன்றாவது கூட்டணிக்கு வேறு வழியின்றி வந்திருக்கிறார். ஆரம்பத்தில் மூன்றாவது கூட்டணிக்கு பிரதம வேட்பாளராக மாயவாதி இருக்கலாம் என்று பேசப்பட்ட போது, அந்த பதவிக்கு தானும் போட்டியிடுவதாக ஜெயா தெரிவித்ததால் நிலைமை மாறியது. தனது பெயர் அறிவிக்கப்படவில்லை என்பதால் மாயாவதி மூன்றாவது கூட்டணிக்கு வெளியே தனியே போட்டியிடுகிறார். இதே போல காங்கிரசு கூட்டணியில் இருக்கும் சரத்பவார் ஒரு மராட்டியர்தான் அதாவது தான் தான் பிரதமராக வரவேண்டுமென கூறியிருக்கிறார். சிவசேனாவும் இதேபோல கூறியிருக்கிறது. இதனால் பவாரும் மூன்றாவது கூட்டணியோடு பேசிக்கொண்டு தான் இருக்கிறார்.

காங்கிரசுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகள் போதாது என்ற காரணத்தினால் உ.பி, பீகார், ஜார்க்கண்டில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி உடைந்திருக்கிறது. நான்காவது கூட்டணியாக அல்லது ஐ.மு.கூட்டணிக்குள் உள் கூட்டணியை லாலுவும், முலாயமும், பஸ்வானும் அமைத்திருக்கிறார்கள். இவர்கள் காங்கிரசு மட்டுமே ஐ.மு.கூட்டணி அல்ல என்று பேசிவருகிறார்கள்.

இப்படி எல்லாக் கூட்டணிகளும் சந்தர்ப்பவாதங்களாலும், பிழைப்புவாதத்தினாலும், பொறுக்கித்தின்னவும் பச்சை




கருணாநிதியின் பேத்தி கயல்விழி. தி.மு.க.வை இனி கருணாநிதி குடும்ப முன்னேற்றக் கழகம் என அழைக்கலாம்.

யான முறையில் உருவாகியிருக்கின்றது. இதில் போலிக் கம்யூனிஸ்டுகள்தான் எல்லாப் பச்சோந்திகளுக்கும் அடைக் கலம் கொடுக்கும் மாமா வேலையை விவஸ்தை இன்றி செய்கிறார்கள்.

உலக வங்கியின் அடியாள் என்று இடதுசாரிகளால் விமர்சிக்கப்பட்ட சந்தி ரபாபு நாயுடு இப்போது மூன்றாவது அணியில் இருக்கிறார். சென்ற தேர்தலில் தனித் தெலுங்கானாவை எதிர்த்த நாயுடு இப்போது தெலுங்கானா ராஷ்ட்ரிய சமி தியுடன் கூட்டணி வைத்திருக்கிறார். இவையெல்லாம் கொள்கைக்காக அல்ல கூட்டணி மூலம் வெற்றி வாய்ப்பை பலப்படுத்தும் தந்திரம்தான்.

மூன்றாம் அணி சார்பாக பிரதம வேட்பாளர்களுக்கான போட்டியில் மாயாவதி, ஜெயலலிதா, தேவகௌடா போன்றோரும் முதல் கூட்டணியில் மன்மோகன் சிங்கும், சரத்பவாரும், முதல் கூட்டணியின் உள் கூட்டணியில் லாலு, முலாயம், பஸ்வான் ஆகியோர் உள்ளனர். மேலும் மூன்றாவது கூட்டணி ஆட்சியமைக்கும் பட்சத்தில் மார்க்சிஸ்ட் டும் பதவியேற்பதில் குறியாக உள்ளனர். யாருக்கு பிரதமர் பதவி என்ற சண்டை காரணமாகவே மூன்றாம் அணிக்கு பிரதம வேட்பாளர் அறிவிக்கப்பட வில்லை.

ஈழப்பிரச்சினையில் எதிரும் புதிரு மாக உள்ள கட்சிகள் எல்லாம் தமிழகத் தின் இரண்டு கூட்டணிகளிலும் உள்ளன. எனினும் கொள்கைகள் வற்றிப் போன இந்தத் தேர்தல் பாலைவனத்தில், தமிழ கத்துக் கட்சிகள் மெல்லுவதற்கு ஒரு சூயிங்கமாகக் கிடைத்திருக்கிறது ஈழப் பிரச்சினை.

இந்தத் தேர்தலில் தேசியக் கட்சிகள் பின்னுக்குப் போய் பிராந்தியக் கட்சிகள் முன்னுக்கு வந்திருப்பதாகவும் இது இந் தியாவின் பன்முகத் தன்மையை காண் பிப்பதாகவும் சில அறிவாளிகள் பேசி வருகின்றனர். தேசியக் கட்சிகளின் இடம் சுருங்கி வருவதென்னவோ உண்மை தான். இந்திய ஆளும் வர்க்கங்கள் உரு வாக்க முனைந்த இந்திய தேசியத்தை, நாடாளுமன்ற அராஜகமே அரித்துத் தின்றுவிட்டது.

இந்திய தேசியக் கட்சிகள் தோல்வி யடைந்ததை மொழி, தேசிய இனங்களின் வெற்றியாகவோ, ஜனநாயகத்தின் பன் முகத்தன்மை என்றோ எடுத்துக் கொள்ள முடியாது. ஏனெனில் எல்லா பிராந்தியக் கட்சிகளும் தமக்கென சில சமூக அடித் தட்டுக்களை உருவாக்கிக் கொண்டு சில பாராளுமன்ற உறுப்பினர்களை வைத்து தேசியக் கட்சிகளிடம் பேரம் பேசுகின் றன. அப்படிக் கிடைக்கும் அமைச்சர் பதவிகளை வைத்துக் கொண்டு ஆதா யத்தை அடைகின்றன. இதன் மூலம் தத்தம் சமூக அடித்தளங்களுக்கு எலும் புத் துண்டுகளை வீசி தமது கட்சியையே பிழைப்புவாதக் கட்சியாகப் பராமரிக் கின்றன.

எனவே இந்தியாவில் எவ்வளவு சாதிய, மத, மொழி, பிராந்திய வேறுபா டுகள் இருக்கின்றனவோ அவ்வளவு சந் தர்ப்பவாதங்கள் கட்சிகளாய் அவதரித்து இருக்கின்றன என்று சொல்லலாம். முன்பு நாட்டைக் கொள்ளையடிக்கும் உரிமை தேசியக் கட்சிகளுக்கு மட்டும் இருந்தது போய் இப்போது பிராந்தியக் கட்சி களும் பங்கு கேட்கும் நிலைமை வந்தி ருக்கிறது.

தேர்தல் முடிந்து கூட்டணி பேரங் கள், குதிரை வியாபாரங்கள் எல்லாம் முழு வீச்சில் நடக்கும். நாடு இதுவரை கண்டறியாத திரைமறைவு சதிகள் அப் போது அரங்கேறும். சில சதுரங்க ஆட் டத்திற்கு பிறகு அரசாங்கம் உருவானா லும் அது குறு நில மன்னர்கள் ஆட்டிப் படைக்கும் அளவிலேயே இருக்கும். முக்கிய அல்லது பணம் கொழிக்கும் அமைச்சகங்களை கைப்பற்றுவதற்கு நாய்ச் சண்டையே நடக்கும். இப்படி தெளிவான சந்தர்ப்பவாதத்தையே வெளிப்படுத்தித்தான் இந்தத் தேர்தல் நடக்கிறது. காங்கிரசும், பா.ஜ.க.வும், இடது சாரிகள் உருவாக்க நினைக்கும் மூன்றாம் அணியும் தேர்தலுக்கு பின்னர் இத்தகைய சாக்கடை வியாபாரத்தின் வழி யாகத்தான் ஆட்சியை அமைக்க முயலும்.

இந்திய ஜனநாயகத்தின் இந்த விரி வாக்கம், 'பணநாயகமே ஜனநாயகம்' என்ற வெளிப்படையானதொரு விளக்கத் திற்கு வழிவகுத்திருக்கிறது. இனிமேலும் இதில் புனிதம் ஏதுமில்லை, ஒளிவுமறை வில்லை, வெட்கப்படவும் யாருக்கும் எது வும் இல்லை. கூட்டணி தருமத்திற்கும், கூட்டுப் பங்குக் கம்பெனியின் தருமத் திற்கும் இடையிலான வேறுபாடுகள் அகன்று, ''கூட்டுப் பங்குக் கம்பெனியே கூட்டணி - கூட்டணிக் கட்சிகள் எனப்ப டுவோர் பங்குதாரர்களே'' என்ற பேருண்மை நிலையை நோக்கி முன்னே றிக் கொண்டிருக்கிறது இந்திய ஜனநாய கம்.

எந்தத் தொழில் நிறுவனத்தில் யார் எவ்வளவு பங்குகளை வைத்திருக்கிறார் கள் என்று தெரிந்து கொள்ள முடியாத இன்றைய தாராளமய காலகட்டத்தில், எந்தக் கூட்டணியை யார் ஆதரிக்கிறார் கள் என்ற உண்மையை மக்கள் தெரிந்து கொள்ள முடிகிறதே, அதுவே பெரிய சாத னைதான்.

எனவே இந்தப் பன்றித்தொழுவத்தில் அல்லது பங்குச்சந்தையில் நல்லதை தேடுவதும், மாற்றுக்களுக்காக ஏங்குவ தும், இருப்பதில் பரவாயில்லை என திருப்தி அடைவதும் எந்த மாற்றங்களை யும் தந்து விடாது. பச்சையான பிழைப் புவாதத்தையே தனது கொள்கையாக நெற்றியில் பொறித்துக் கொண்டிருக்கும் இந்த அமைப்பு முறையை தூக்கியெறி யாமல் உண்மையான ஜனநாயகத்தை கொண்டுவர முடியாது.

**● சாத்தன்**

# வாழத் துடிக்கும் பெண்ணினம்! வாழ்க்கை மறுக்கும் சமூகம்!!

மார்ச் 8 உழைக்கும் மகளிர் தினம். சமையலறையிலும், குழந்தைப் பேறு-வளர்ப்பிலும், பாலியல் இச்சைக்காகப் படுக்கையறையிலும் காலங்காலமாகக் கட்டிப் போடப்பட்ட பெண்கள், மனித குல வரலாற்றில் தங்களுக்கும் சரிபாதிப் பங்குண்டு என வர்க்கப் போராட்டத்தில் ஈடுபட்டு செந்நீர் சிந்தி, சில உயிர்களைப் பலிதானமிட்டு உணர்ந்த நாள் மார்ச் 8. ஆனால் 21 ஆம் நூற்றாண்டில் மனித சமூகம் அடியெடுத்து வைத்திருக்கும் இக்காலத்திலும், நவீன வாழ்க்கையின் அடையாளமாக எத்தனையோ வசதிகள் சகஜமாகிவிட்ட இச்சூழ்நிலையிலும் பெண்கள் தங்கள் தளைகளை அறுக்க முடியாமல் அடிமைகளாக நீடித்திருக்கும் நிலையே தொடர்கின்றது.

முக்கியமாக ஒரு பெண் தன் காதலை, திருமணத்தை, குடும்பத்தை, வேலையை, மொத்தத்தில் வாழ்வை தான் விரும்பியபடி தெரிவு செய்யும் சுதந்திரம் இல்லை. வேலைக்குச் சென்று தனது பொருளாதார சுயேச்சை நிலையை அடைந்திருக்கும் பெண்ணுக்குக் கூட முழுச் சுதந்திரத்தை இந்தச் சமூகம் கொடுத்து விடுவதில்லை. சமூகம் மரபாகப் பின்பற்றி வரும் எல்லாப் பிற்போக்குத்தனங்களுக்கும் பெண்தான் முதல் பலிகடாவாகின்றாள். சாதி, மத, இனங்களின் கவுரவமே ஒரு பெண்ணின் 'தூய்மையை' வைத்தே அளவிடப்படுகின்றது. கீழ்க்கண்ட இரண்டு உண்மைச் சம்பவங்களைப் பார்த்துவிட்டு இந்த விமரிசனத்தை மேற்கொண்டு பரிசீலிக்கலாம்.

•••

ஈரோடு மாவட்டம், குன்னத்தூரைச் சேர்ந்தவர் சங்கீதா. வெண்ணெய்க்குப் பிரபலமான ஊத்துக்குளியைச் சேர்ந்தவர் சதாசிவம். சொந்த மண்ணில் வாழ வழியில்லாதவர்களுக்கு சற்றே சிரமமென்றாலும், ஒரு குறைந்தபட்ச வாழ்வை உத்திரவாதம் செய்யும் திருப்பூருக்கு இருவரும் சில ஆண்டுகளுக்கு முன்பு பிழைப்பதற்கு வந்தனர். தமிழகத்தின் தெற்கு, கிழக்கு, மேற்கு என எல்லாப் பகுதிகளிலுமிருந்தும் இலட்சக்கணக்கான தொழிலாளிகள் திருப்பூரில் குவிந்துள்ளனர். பனியன் தொழிற்சாலைகளில் நூற்றுக்கணக்கில் ஆண்களும், பெண்களும் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு இருப்பதால் மற்ற ஊர்களில் சிரமப்படும் காதல் வாழ்க்கை இங்கே ஒப்பீட்டுரீதியில் சற்றே சுலபமானது எனலாம்.

அப்படித்தான் சதாசிவமும், சங்கீதாவும் காதலித்தனர். பிழைப்பதற்கு வந்த



நிறைமாதமாய் சங்கீதா

ஊர் காதலுக்கு வழியேற்படுத்தினாலும், அவர்களின் பிறந்த ஊர்கள் இந்தக் காதலை அடியோடு நிராகரித்தன. இந்த உண்மைக்கதையை வெளியிட்டிருக்கும் ஜூனியர் விகடனில் (28.01.09) அவர்களின் சாதி குறித்த விவரமில்லை. இருப்பினும் இருவரும் ஒரே தகுதி கொண்ட வெவ்வேறான சாதிகளாகவோ, அல்லது இருவரில் ஒருவர் சற்றே ஆதிக்கசாதியாகவோ இருக்கலாம். எப்படியும் இருவரின் குடும்பத்தாரும் இவர்களின் காதலுக்கு பச்சைக் கொடி காட்டவில்லை என்பதோடு உறவை அறுத்துக்கொண்டு தலைமுழுகினர். வேறுவழியின்றி இந்த ஜோடிகள் திருப்பூர் கோவிலொன்றில் திருமணம் செய்து கொண்டனர்.

திருமணத்திற்குப் பிறகாவது தன் குடும்பம் தன்னை ஏற்றுக் கொள்ளும் என்ற நம்பிக்கையில் தந்தைக்கு தொலைபேசியில் பேசினார் சங்கீதா. தந்தையோ ''உன் குடும்பத்தில் பிள்ளை பிறந்தாலும் எங்களுக்குச் சொல்லாதே! இழவு விழுந்தாலும் எங்கிட்ட வராதே'' என வெட்டு ஒன்று துண்டு இரண்டென பேசி முடித்துக் கொண்டார். சதாசிவம் வீட்டிலும் இதே கதைதான் என்பதால், இந்தப் புதுமணத் தம்பதியினர் திருப்பூரில் தங்கள் குடும்ப வாழ்க்கையைத் துவங்கினர். சொந்த பந்தங்களின் ஆதரவின்றி ஒருவருக்கொருவர் ஆறுதலாக அந்த வாழ்க்கை நகர்ந்தது.

முதல் வருடத்திலேயே சங்கீதாவுக்கு ஒரு குழந்தை மூளை வளர்ச்சியின்றி இறந்தே பிறந்தது. தலைப்பிரசவத்துக்கு ஒரு பெண் தயாராகும்போது சுற்றமும் உற்றமும் புடைசூழ பார்த்துக் கொள்ளும். ஆனால் சங்கீதாவுக்கு அவளது கணவனைத் தவிர யாரும் துணையில்லை, வந்து பார்க்கவுமில்லை. பேறுகாலச் சிரமங்களை மிகுந்த சிரமத்துடன் பொறுத்துக்கொண்ட சங்கீதா அதன் பின் நான்கு வருடங்களுக்குப் பிறகுதான் கர்ப்பமானார்.

உறவுகள் அற்றுப்போய் தனித்தீவுகளில் வாழ்வது போல தனிமைப்பட்டிருந்த அந்த ஏழைத் தம்பதியினருக்கு ஒரு குழந்தையின் மூலம் புதிய உறவு வரப்போகின்றது என அளவில்லாத மகிழ்ச்சி! தன் மனைவியை அவளது தாய் பார்ப்பது போல பராமரித்து வந்த சதாசிவம், சங்கீதா கர்ப்பமான ஒன்பதாவது மாதத்தில் அதிக இருமலும் சளியுமாக அவதிப்பட்டார். திருப்பூர் அரசு மருத்துவமனையில் காட்டிய போது அவருக்கு காசநோய் முற்றியிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு கோவை அரசு மருத்துவமனைக்கு செல்லுமாறு அறிவு

றுத்தப்பட்டார். ஏதோ ஒரு நோய், கோவை சென்றால் சரியாகிவிடும் என்று புரிந்து கொண்ட அந்தப் பெண் கணவனைக் கோவைக்கு அழைத்துச் சென்றாள்.

திருப்பூரின் சாயப்பட்டறைகளினால் நொய்யல் ஆறு ரசாயன ஆறாக மாறி உயர்நீதி மன்றம் அதற்கு பல உத்திரவுகளைப் பிறப்பித்து சரி செய்வதற்கு முயன்ற விசயம் வாசகர்களுக்கு தெரிந்திருக்கலாம். ஆனால் பனியன் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளிகள் பலருக்கு பஞ்சுத் தூசியினால் ஆஸ்துமாவும், காசநோயும், தோல் வியாதிகளும் இருக்கின்றது என்ற விசயம் அரசால் கூட கவனிக்கப் படவில்லை. திருப்பூர் மருந்துக் கடைகளில் இந்த நோய்களுக்கான மருந்துகள்தான் அதிகம் விற்பனையாகின்றது என்றால் இதன் பரிமாணத்தைப் புரிந்து கொள்ளலாம். அமெரிக்காவின் வால்மார்ட்டுக்காக ஆர்டர்கள் எடுத்திருக்கும் திருப்பூரின் முதலாளிகள் இப்படி தொழிலாளர்களின் நுரையீரலையும், எலும்புகளையும் சிதைத்துத்தான் ஆயத்த ஆடைகளைத் தயாரிக்கின்றனர் என்பது யாரும் கவலைப்படாத ஒன்று.

சங்கீதா நிறைமாதக் கர்ப்பிணியாய் தனக்கு எப்போது குழந்தை பிறக்கும் என்பது தெரியாமல் கணவனைக் கருத்தாகப் பார்த்துக் கொண்டாலும், கோவை அரசு மருத்துவர்கள் எவ்வளவோ முயன்றாலும் காசநோய் முற்றிய சதாசிவம் ஒரு சில நாட்களில் இறந்து போகின்றார். இந்த உலகில் தனக்கென இருந்த ஒரே உறவையும் தொலைத்து விட்ட அந்தப் பெண் அழுது புரண்டாள். பிறகு கணவனின் பிணத்தை எரிப்பதற்கு பணமில்லாமலும், தூக்குவதற்கு ஆளில்லாமலும் தவித்த அந்த அபலைப்பெண் பைத்தியமாய்ச் சுற்றியிருக்கின்றாள். சவக்கிடங்கில் இருக்கும் கணவனின் பிணத்தைத் தொட்டு அழுவதற்குக் கூட வாய்ப்பில்லாமல் தனது பெற்றோருக்கு தொலைபேசி மூலம் உதவுமாறு கேட்டிருக்கின்றாள் சங்கீதா.

எந்தச் சனியன் எக்கேடு கெட்டாலும் எங்களுக்கென்ன என குடும்பத்தினர் இரக்கமின்றி முறித்துக் கொண்டனர். பிறகு தோழமை அறக்கட்டளை என்ற தொண்டு நிறுவனத்தைக் கேள்விப்பட்டு அவர்களின் உதவியை நாடியிருக்கின்றாள் சங்கீதா. இந்தத் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் மூலம் கணவனது இறுதிச் சடங்கை முடித்த சங்கீதாவுக்கு தற்போது குழந்தை பிறந்திருக்கும். இருந்த ஒரே துணையையும் இழந்தவருக்கு ஆறுதலாக யாருமில்லை என்பதால் கைக்குழந்தையுடன் அவதிப்படப் போகும் சங்கீதாவின் எதிர்காலம் எப்படி நகரும்?

**சங்கீதா செய்த 'குற்றம்' சாதிமாறித் திருமணம் செய்தது, சண்டிகர் பெண் செய்த 'குற்றம்' மதம் மாறிக் காதலித்தது. சங்கீதாவின் பெற்றோரும், உறவினரும் அவளைப் புறக்கணித்து எந்த உதவியும் செய்யாமல் இருந்ததன் மூலம் அவளைத் தண்டித்தார்கள். சண்டிகர் பெண்ணின் குடும்பமோ அவளை வன்முறையின் மூலம் மிரட்டி அவளது காதலை நசுக்கித் தண்டிக்கின்றார்கள்.**

•••

புது தில்லியில் இருக்கும் ஜவஹர்லால் நேரு மேல்நிலைக் கல்வி நிறுவனத்தில் ஆராய்ச்சியாளராகப் பணிபுரியும் மீரா நந்தா அவரது சொந்த ஊரான சண்டிகரில் அவர் கண் முன்னே ஒரு இளம் பெண் கடத்தப்படுவதைப் பார்த்துவிட்டு அந்த அனுபவத்தை 'தி ஹிந்து' தினசரியின் ஞாயிறு மலரில் (01.03.09 ) எழுதியிருக்கின்றார்.

பிப்ரவரி மாதத்தின் துவக்கத்தில் சண்டிகருக்கு வந்த மீரா நந்தா ஒரு பகல் பொழுதில் தனது வீட்டிலிருந்து அருகாமையில் இருக்கும் நீதிமன்ற வளாகத்தைக் கடந்து கடைத்தெருவுக்கு சென்று கொண்டிருந்தார். அப்போது அவரைக் கடந்து ஒரு இளம்பெண் வேகமாகச் சென்று கொண்டிருந்தாள். திடீரென வந்த ஒரு வெள்ளை வேனில் இருந்து இறங்கிய நான்கைந்து இளைஞர்கள், அவர்களைப் பார்த்துப் பதறி ஓடிய அந்தப் பெண்ணை விரட்டுகின்றார்கள். கணப்பொழுதில் அவளைப் பிடித்து தரதர வென இழுத்து அடித்து வேனில் ஏற்றிச் செல்கின்றார்கள்.

அதிர்ச்சியில் உறைந்திருந்த மீரா நந்தா அந்த வண்டியின் எண்ணைக் குறித்துக் கொண்டிருந்தபோது, நீதிமன்றத்தில் இருந்த மக்கள் கூட்டம் இச்சம்பவத்தைப் பார்த்து கூடுகின்றது. அந்தப் பெண் கடத்தப்பட்டதைப் போலீசிடம் புகார் கொடுக்கலாம் என்று அவர்கள் பேசியபோது கூட்டத்தில் நடுத்தர வயதிலிருக்கும் ஒரு சீக்கியர் குறுக்கிடுகின்றார். அந்த பெண்ணுக்கு ஒன்றும் ஆபத்தில்லை எனவும், தான் அவளது தந்தை, வேனில் பிடித்துச் சென்றது அவளது சகோதரர்கள்தான் என்றும் அவர் நிதானமாகத் தெரிவிக்கின்றார்.

உடனே மீரா நந்தா பெற்ற மகளையே இப்படி அடித்துக் கடத்துகின்றீர்களே! நீங்களெல்லாம் ஒரு தந்தையா, உங்களுக்கு வெட்கமில்லையா என்று கோபத்துடன் கேட்கிறார். தனது மகள் பொறியியல் கல்லூரியில் படிக்கும் ஒரு புத்திசாலிப் பெண்ணென்றும், அவளை ஒரு முசுலீம் இளைஞன் காதலிப்பதன் மூலம் அவளது வாழ்க்கை பாழாகக் கூடும் என்பதால் நீதிமன்றத்தில் வழக்குப் போட்டிருந்த அந்தக் காதலர்களைப்




பிரிப்பதற்கு தான் எடுத்த நடவடிக்கை சரியானது என்றும் அந்தச் சீக்கியர் வாதிடுகின்றார்.

இதைக் கேட்டவுடன் கூட்டம் சமாதானத்துடன் கலைந்து செல்கின்றது. மீராவுடன் நான்கைந்து இளைஞர்கள் மட்டும் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கலாம் என முடிவு செய்கின்றார்கள். காவல் நிலையத்தில் பொறுப்பிலிருந்த அதிகாரி சீக்கியரின் விளக்கத்தைக் கேட்டவுடன் திருப்தி அடைகின்றார். இப்போது மீராவுடன் ஒரு இளைஞர் மட்டுமே இருக்கின்றார். அந்த இளம்பெண் ஒரு மேஜர் என்பதால் தனது வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பதற்கு அவளுக்கு முழு உரிமை உண்டென மீரா அதிகாரியிடம் வாதிடுகின்றார். உங்கள் மகளுக்கு இப்படி நடந்திருந்தால் என்ன செய்வீர்கள் என அந்த அதிகாரி மீராவின் பதிலுக்குக்கூட காத்திராமல் அந்தத் தந்தையின் செயலை நியாயப்படுத்துகின்றார். அந்தச் சீக்கியரோ தான் குறுகிய எண்ணம் கொண்டவனல்ல, தனது மகள் ஒரு தாழ்த்தப்பட்ட சாதிக்காரனைக் காதலித்திருந்தால் கூட அதை ஏற்றுக் கொள்வாரெனவும், ஆனால் ஒரு முசுலீமைத் தனது மகள் காதலிப்பதை ஏற்க முடியாது என்றும் வாதிடுகின்றார்.

இறுதியில் மீரா போலீசு இதில் நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் தான் இந்தப் பிரச்சினையை ஊடகங்களுக்குக் கொண்டு செல்வதாக மிரட்டியதும் அந்த அதிகாரி இதைப் பற்றிக் கண்டிப்பாக விசாரிப்பதாக உறுதியளிக்கின்றார். அவரது செல்பேசி எண்ணை வாங்கிவிட்டு மீரா திரும்புகின்றார். அன்று மாலையே அந்த இன்ஸ்பெக்டர் மீராவுக்கு தொலைபேசியில் பேசுகின்றார், அதன்படி அந்தப் பெண்ணைச் சந்தித்து விட்டதாகவும், அவள் தனது சொந்த விருப்பத்தில் குடும்பத்துடன் சேர்ந்து இருக்க விரும்புவதாகவும் கூறிவிட்டு அந்தப் பெண்ணையே பேச வைக்கின்றார். அந்தப் பெண்ணும் ஏதோ கடமைக்குப் பேசுவது போல தனக்கு ஒரு பிரச்சினையுமில்லை எனவும் சுரத்தில்லாமல் கூற, எந்தப் பிரச்சினை என்றாலும் தனது செல்பேசி எண்ணுக்கு அழைக்குமாறு கூறிவிட்டு மீரா இந்த சம்பவத்தை அசை போடுகின்றார். துயரம் தோய்ந்த அந்தப் பெண்ணின் முகம் அவரைத் தொந்திரவு செய்கின்றது.

•••



**ச**ங்கீதா செய்த 'குற்றம்' சாதி மாறித் திருமணம் செய்தது, சண்டீகர் பெண் செய்த 'குற்றம்' மதம் மாறிக் காதலித்தது. சங்கீதாவின் பெற்றோரும், உறவினரும் அவளைப் புறக்கணித்து எந்த உதவியும் செய்யாமல் இருந்ததன் மூலம் அவளைத் தண்டித்தார்கள். சண்டீகர் பெண்ணின் குடும்பமோ அவளை வன்முறையின் மூலம் மிரட்டி அவளது காதலை நசுக்கித் தண்டிக்கின்றார்கள். தாங்கள் விரும்பியபடி மண வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முயன்ற அந்தப் பெண்களுக்கு இந்தச் சமூகம் ஒப்புதல் தரவில்லை.

சாதிவெறியும், மதவெறியும் பெண்ணின் இரத்தக் கலப்பில்லாத தூய்மையை வைத்ததே தத்தமது கவுரவத்தைக் காப்பாற்ற நினைக்கின்றன. ஆனால் இந்தப் புனிதக்கடமை ஆண்களுக்கில்லை. ஆதிக்கசாதி ஆண்கள் ஊருக்கு வெளியே இருக்கும் தலித் பெண்களைப் பாலியல் வன்முறை செய்வது இந்தியா முழுவதும் நடக்கும் விசயம். இதை மட்டும் சாதியின் கவுரவக் குறைச்சலாகக் கருதாமல், ஆதிக்கசாதி ஆண்களின் கம்பீரமாக இந்தச் சமூகம் பார்க்கின்றது. மேலும் தன்மானத்துடன் வாழ நினைக்கும் தலித் மக்களைக் கேவலப்படுத்துவதற்கும் அடக்குவதற்கும் ஆதிக்கசாதி வெறியர்கள் செய்யும் முதல் விசயம் தலித் பெண்களைப் பாலியல் வன்முறை செய்வது தான். ஒரு ஆதிக்கசாதிப் பெண் ஒரு தலித் ஆணைக் காதலித்து திருமணம் செய்தால் ஊரே பற்றி எரியும். இந்தக் காதலை கனவில் கூட நினைத்துப் பார்க்க முடியாத சூழலே இந்தியாவெங்கும் இருக்கின்றது.

வட இந்தியாவில் ஒரு ஆதிக்கசாதி அல்லது பிற்படுத்தப்பட்ட பெண் ஒரு முசுலீமைக் காதலித்தால் மேற்கண்ட வெறியால் இன்னும் தீவிரமாக எதிர்க்கப்படும். இதைத் தடுப்பதற்கென்றே இந்தி பேசும் மாநிலங்களில் இந்து மதவெறியர்கள் தனி இயக்கமே நடத்துகின்றார்கள். சண்டீகர் பெண்ணின் தந்தை கூறியதைப் பாருங்கள், இந்துமதத்தில் இருக்கும் தலித் ஆணைக் கூட ஏற்றுக் கொள்வாராம், ஆனால் ஒரு முசுலீமை ஏற்றுக் கொள்ள மாட்டாராம். உண்மையில் அப்படி ஒரு தலித்தை அந்த சீக்கியப் பெண் காதலித்தாலும் இதுதான் நடக்கும். என்றாலும், முசுலீம் என்றால் அந்தக் கவுரவ வெறி சில மடங்கு அதிகமாக இருக்கின்றது.

உலகெங்கும் முசுலீம்களைப் பற்றிய வெறுப்பும், தவறான கற்பிதங்களும் திட்டமிட்டே பரப்பப்படுகின்றன. இதில் இந்தியாவைப் பொறுத்தவரை பிரிவினை காலந்தொட்டு நடந்துவரும், இந்துமத வெறியர்களால் இயக்கப்படும் இந்து - முசுலீம் கலவரங்கள் அந்த வெறுப்பைப்

**ஒரு பெண்ணுக்கு பஃப்புக்கு செல்வதற்கு சுதந்திரம் தேவை எனப் போராடுவதை விட சங்கீதாவும், சண்டீகரின் சீக்கியப் பெண்ணும் நடத்தும் போராட்டம் மிகவும் கடினமானது. மதுவறைகளுக்கு மேல்தட்டு பெண்கள் செல்வதை போலீசு உதவியுடன் கூட செய்து விடலாம். ஆனால் சங்கீதாவுக்கும், லட்சுமிக்கும் கறுப்புப் பூனைகள் போட்டாலும் பாதுகாக்க முடியாது. ஏனெனில் இங்கே முழுச் சமூகமுமே அந்த அபலைகளை எதிர்த்து நிற்கின்றது.**

பிரச்சாரம் ஏதுமின்றி ஒரு இந்துவின் மன தில் ஏற்படுத்தி விடுகின்றன. எனவே தான் இந்தி பேசும் மாநிலங்களில் இதற் காக அதாவது இந்து மற்றும் ஆதிக்கசாதி யின் கவுரவத்தைக் காப்பாற்றும் வித மாக யாரெல்லாம் அந்த எல்லையை மீறு கின்றார்களோ அவர்களெல்லாம் கொல் லப்படுவது சகஜமாக இருக்கின்றது. இந்தக் கவுரவக் கொலைகளில் பத்து சத வீதம் பஞ்சாப் மற்றும் ஹரியாணாவில் நடக்கின்றது. முக்கியமாக இந்தக் கொலைகளுக்கு ஆளாவதில் பெரும் பான்மையினர் பெண்கள்தான்.

•••

**வி**ஜய் டி.வியில் நீயா நானா நிகழ்ச்சி ஒன்றில் காதலைத் தீர்மானிப் பது அப்பியரன்சா, அப்ரோச்சா என ஒருமுறை விவாதிக்கும் போது எப்படி கடலை போடுவது, எதிர்பாலைக் கவரு வது அல்லது கவிழ்த்துவது, இன்ன பிற அயிட்டங்களையெல்லாம் பயங்கரமாக அலசினார்கள். ஆனால் கலப்பு மணம் செய்தால் அதைத் தீர்மானிப்பது அரி வாள்தான் என்பதை அங்கிருக்கும் நடுத் தர வர்க்க அறிவாளிகள் எவரும் மருந் துக்குக் கூட தொட்டுப் பேசவில்லை.

இந்த விவாதம் நடந்து சில மாதங் கள் இருக்கலாம். இதே காலத்தில் தஞ் சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த சிவாஜி ராவ் எனும் தலித் இளைஞரும், லட்சுமி எனும் கள்ளர் சாதிப் பெண்ணும் காத லிக்கின்றார்கள். கள்ளர் சாதி கோலோச் சும் இம்மாவட்டத்தில் இருக்கும் அபா யத்தைக் காதலர்கள் உணர்ந்திருந்ததால் யாருக்கும் தெரியாமல் திண்டுக்கல் சென்று ஒரு கோவிலில் திருமணம் செய்து கொண்டு வாழ்கின்றார்கள். இதை எப்படியோ மோப்பம் பிடித்த லட் சுமியின் மூன்று அண்ணன்கள் ஒரு டாடா சுமோவில் சில ரவுடிகளை ஏற்றிக் கொண்டு திண்டுக்கல் சென்று லட்சுமி கதறக் கதற அவளது கணவனை அடித்து வண்டியில் எற்றுகிறார்கள். சில நாட்கள் கழித்து அந்த தலித் இளைஞன் கொடைக் கானல் சாலையில் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டு பிணமாகக் கிடக்கின்றான்.

தனது அண்ணன்கள் கொலை செய் யுமளவு துணிய மாட்டார்கள் என நம் பிய அந்தப் பெண் இன்றும் அழுது கொண்டிருக்கின்றாள். சில ஆண்டுக ளுக்கு முன் விருத்தாச்சலம் அருகே ஒரு தலித் ஆணும் வன்னிய சாதிப் பெண் ணும் திருமணம் செய்து கொள்ள அந்தப் பெண்ணின் ஊர்க்காரர்கள் அதா வது வன்னியர்கள் முன்னிலையில் அந்தக் காதல் ஜோடி உயிரோடு எரித் துக் கொளுத்தப்பட்டது. வழக்கு இன்றும் நடக்கின்றது என்றாலும் மொத்த ஊரே இதில் சம்பந்தப்பட்டிருக்கும் போது யாரைத் தண்டிப்பது?

ஸ்ரீராம் சேனா என்ற இந்து மதவெறி இயக்கத்தினர் மங்களூர் பஃப்புகளில் இருந்த மேல்தட்டுப் பெண்களைத் தாக் கியதை வாசகர்கள் அறிந்திருக்கலாம். இதே போல காதலர் தினத்தில் சங்க பரி வாரங்கள் இந்தியா முழுவதும் செய்த அராஜகங்களையும் அறிவோம். ஆணா திக்கத்தினோடு இந்து மதவெறியும் சேரும்போது அதனுடைய வெறி தீவிர மாகத்தான் இருக்கின்றது. இங்கும் கூட கவனியுங்கள் பெண்தான் குறிவைக்கப் படுகின்றாள். ஆண்கள் டாஸ்மாக் தொட்டு நட்சத்திர விடுதி மதுவறைகள் வரை குடித்து விட்டு ஆடலாம். ஆனால் இதை இயல்பு எனக் கருதும் இந்து மனம் பெண்கள் குடிப்பதை மாபெரும் கவு ரவக் குறைச்சலாக நினைக்கின்றது. ஸ்ரீராம் சேனாவின் அத்துமீறலைக் கண் டித்து பல பெண்கள் அமைப்புக்கள் அந்த சேனாவின் தலைவருக்கு பிங்க் நிற ஜட் டிகள் அனுப்பித் தங்களது எதிர்ப்பைக் காண்பித்தன.

ஒரு பெண்ணுக்கு பஃப்புக்கு செல் வதற்கு சுதந்திரம் தேவை எனப் போரா டுவதை விட சங்கீதாவும், சண்டிகரின் சீக் கியப் பெண்ணும் நடத்தும் போராட்டம் மிகவும் கடினமானது. மதுவறைகளுக்கு மேல்தட்டு பெண்கள் செல்வதை போலீசு உதவியுடன் கூட செய்து விட லாம். ஆனால் சங்கீதாவுக்கும், லட்சுமிக் கும் கறுப்புப் பூனைகள் போட்டாலும் பாதுகாக்க முடியாது. ஏனெனில் இங்கே முழுச் சமூகமுமே அந்த அபலைகளை எதிர்த்து நிற்கின்றது.

மேலும் மாநகரங்களைச் சேர்ந்த நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த மக்களிடத் தில் - இவர்களில் ஐ.டி துறையில் பணி புரியும் இளைஞர்களும் உண்டு - எடுக் கப்பட்ட கருத்துக்கணிப்பின் படி 75% பேர் பெற்றோர் நிச்சயம் செய்யும் திரு மணத்தைத்தான் செய்யப் போவதாகத் தெரிவித்திருந்தார்கள். படித்து, சற்றே வச தியுடன் வாழும் இந்த வர்க்கத்துக்கே இதுதான் கதியென்றால் அந்த ஏழைப் பெண் சங்கீதா என்ன செய்ய முடியும்?

ஆகவே பெண்ணுக்கு உரிமை என் பது தனிநபர் உரிமையாக சுருக்கிப் பார்த்தால், பஃப்புக்கு செல்வது, மானாட மயிலாட அல்லது ஜோடி ஒன்று நிகழ்ச் சியில் பங்கேற்பது, பார்வையாளராகச் செல்வது, தனியாக ஸ்கூட்டரிலோ, காரிலோ ஓட்டிச் செல்வது, வேலைகளில் ஏற்றத்தாழ்வின்றி எல்லா வகை வேலை களுக்கும் செல்வது... இப்படித்தான் பல ரும் புரிந்து கொள்கின்றனர். ஆனால் இத்தகைய தனிநபர் உரிமைகளைப் பெற் றுள்ள பெண்கள் தமது மணவாழ்க் கையைச் சுயேச்சையாக முடிவெடுக்க முடியாது. அப்படி மீறி எடுத்தால் கொலைவெறியைச் சந்திக்க வேண்டும் எனும் போது இங்கே எது பெண்ணு ரிமை? ஏது பெண்ணுரிமை?

இந்தக் கட்டுரை எழுதும் சமயத்தில் சங்கீதாவுக்கு குழந்தை பிறந்திருக்கலாம், சண்டிகர் பெண்ணுக்கு வேறு மணம் கூட நடந்திருக்கலாம். ஆனால் அந்தப் பெண் கள் தனிமையில் கதறி அழுதவாறு இந்த வாழ்க்கையை எப்படி ஓட்டப் போகின் றோம் என விரக்தியில் உறைந்திருப்பார் கள். ஒருவேளை தற்கொலைக்குக் கூட முயற்சிக்கலாம். பரவாயில்லை, விரும்பியபடி வாழ்வதற்கு கதியில்லாத போது உயிரை முடித்துக் கொள்வது ஒன் றும் மோசமானதல்ல.

● வேல்ராசன்


**''புதிய கலாச்சாரம்'' உரிமையாளர் மற்றும் இதர விவரங்கள்**
**படிவம் IV (விதி 8-இன் படி)**

| | | |
|---|---|---|
| 1. | வெளியிடும் இடம் | : 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு சென்னை - 600 031. |
| 2. | வெளியிடும் காலம் | : மாதம் ஒருமுறை |
| 3. | அச்சிடுபவர் பெயர் | : இரா. சண்முகராசு |
| | இந்தியக் குடிமகனா? | : ஆம் |
| | முகவரி | : எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை - 600 024. |
| 4. | உரிமையாளர் மற்றும் வெளியிடுபவர் பெயர் | : வி. வல்லபேசன் |
| | இந்தியக் குடிமகனா? | : ஆம் |
| | முகவரி | : 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு சென்னை - 600 031. |
| 5. | ஆசிரியர் பெயர் | : வி. வல்லபேசன் |
| | இந்தியக் குடிமகனா? | : ஆம் |
| | முகவரி | : 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு சென்னை - 600 031. |

வி. வல்லபேசனாகிய நான், மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கின்றேன்.

(ஒப்பம்) வி. வல்லபேசன்
வெளியிடுபவர்.

# ரகுமானுக்கு ஆஸ்கர்: எல்லாப் புகழும் அமெரிக்காவுக்கே!

கடந்த பிப்ரவரி 22ஆம் தேதியன்று சிறந்த பின்னணி இசைக்கான ஆஸ்கர் விருதை ஸ்லம்டாக் மில்லியனர் (கோடீசுவரனான சேரி நாய்) திரைப்படத்திற்காக ஏ.ஆர்.ரகுமான் பெற்றார். அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள கோடாக் அரங்கத்தின் மேடையில் விருதைக் கையில் ஏந்தியபடி, 'எல்லாப் புகழும் இறைவனுக்கே!' எனத் தமிழில் உற்சாகமாக மொழிந்தார். அடுத்த கணம் இந்தியா முழுவதும் ஊடகங்கள், குறிப்பாக ஆங்கிலச் செய்தி ஊடகங்கள், ஒரே குரலில் 'ஜெய் ஹோய்' (வெற்றி உண்டாகட்டும்!) என ஆரவாரிக்க தொடங்கினர். ஒரு வாரத்திற்கும் மேலாக ஆரவாரம் அடங்கவில்லை. ஆஸ்கர் மேடையில் தமிழில் பேசினார், எனவே இது தமிழுக்கு, தமிழனுக்கு கிடைத்த வெற்றி என ஒரு பக்கம் கொண்டாட்டம். மற்றொரு புறம், ஒட்டுமொத்த இந்தியாவிற்கே இது ஒரு மாபெரும் அங்கீகாரம், யாரும் சாதிக்காத சாதனை என ஆரவாரம்.

ஒட்டு மொத்தமாக இவ்வாண்டு ஆஸ்கர் விழாவை இத்திரைப்படம் ஆக்கிரமித்துக் கொண்டு விட்டதாக மேலைநாட்டுப் பத்திரிக்கைகள் எழுதின. இத்திரைப்படத்தின் இணை இயக்குனராகப் பணியாற்றிய லவ்லீன் டாண்டன், ''ஏ.ஆர்.ரகுமான் போல இன்னும் பல திறமை மிக்கவர்கள் நம்மிடம் எப்போதுமே உள்ளனர். ஆனால் உலகம் இப்பொழுதுதான் விழித்துக் கொண்டுள்ளது'' எனக் குறிப்பிடுகிறார். அமெரிக்காவிற்கான முன்னாள் இந்தியத் தூதர் லலித் மான் சிங், ''இந்தியாவின் சக்தியை உலகம் அங்கீகரிக்கத் துவங்கி விட்டதன் வெளிப்பாடாகவே இத்திரைப்படத்திற்கு ஆஸ்கர் விருது கிடைத்ததை எடுத்துக் கொள்ள வேண்டும்'' எனக் கூறுகிறார்.

உலகத்தின் அங்கீகாரம் இருக்கட்டும். எந்த இந்தியாவைக் கதைக் களமாகக் கொண்டு எடுக்கப்பட்டதோ, அந்த இந்திய மக்கள் இத்திரைப்படத்தை அங்கீகரித்தார்களா? ரகுமானுக்கு விருது கிடைக்கும் வரை பெரும்பாலோனோருக்கு இத்திரைப்படம் குறித்து ஏதும் தெரியாது. ஜனவரி இறுதியில் இந்தியாவில் வெளியிடப்பட்ட இத்திரைப்படம் எந்தச் சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. ரகுமானுக்கு விருது கிடைத்த செய்திக்குப் பிறகு சற்றே முன்னேற்றம் இருந்தாலும், அமெரிக்காவில் ஏற்பட்ட அலை இங்கே அடிக்கவில்லை. ஏன் இந்த முரண்பாடு?

**புனைவுகளும், புனைசுருட்டுகளும்!**

ஒவ்வொரு கேள்விக்கும் ஆயிரங்களில் தொடங்கி கோடிகள் வரை பரிசளிக்கப்படும் 'கோடீசுவரனாக விரும்புவது யார்?' வினாடி வினா நிகழ்ச்சியை (கோன் பனேகா கரோர்பதி) தொலைக்காட்சியில் பார்த்திருப்போம். சேரியில் பிறந்த, ஒரு கால் சென்டரில் தேநீர் வழங்கும் பணியாளனாகப் பணியாற்றும் ஜமால் மாலிக் எனும் இளைஞன் அந்நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறான். பத்து மில்லியன் வரை ஜெயித்து இருபது மில்லியனுக்கான கேள்விக்காகக் காத்திருக்கிறான். அவன் ஏதேனும் மோசடி செய்திருக்க வேண்டும் எனக் கருதும் நிகழ்ச்சியின் தொகுப்பாளன் அவனை போலீசில் ஒப்படைக்கிறான். போலீசு அவனை அடித்து, துன்புறுத்தி, மின்சாரம் பாய்ச்சி விசாரிக்கிறது. நிகழ்ச்சியில் கேட்கப்பட்ட கேள்விகள் அனைத்தும் தனது வாழ்வில் எதிர்கொண்ட சம்பவங்களோடு தொடர்புடையதால் தான் அப்பதில்களை அறிந்திருப்பதாக அவன் கூறுகிறான். நிகழ்ச்சியில் கேட்கப்பட்ட ஒவ்வொரு கேள்வியும், ஜமாலின் கடந்தகால வாழ்க்கையில் அதனோடு தொடர்புடைய சம்பவங்களும் மாறி மாறி எழுகின்றன.

ஆசியாவிலேயே மிகப்பெரிய சேரிப்பகுதியான மும்பையின் தாராவியில் ஜமாலும், அவனது அண்ணன் சலீமும் வளருகிறார்கள். காவியுடையணிந்த மத வெறியர்களின் தாக்குதலில் அவர்களது தாய் கொல்லப்படுகிறாள். ஏன், எதற்கு என்று பார்வையாளர்கள் விளங்கிக்கொள்ள வழியில்லை. அனாதைகளான சிறுவர்கள் தங்களைப் போலவே நிர்க்கதியாக நிற்கும் லத்திகா என்ற சிறுமியைத் தங்களோடு இணைத்துக் கொள்கிறார்கள். தெருவோரச் சிறார்களை ஊனமாக்கி பிச்சையெடுக்க வைக்கும் கும்பலிடம் சிக்கி, பின்னர் அதிலிருந்து இருவரும் தப்புகிறார்கள். லத்திகா மட்டும் சிக்கிக் கொள்கிறாள். கதியிழந்த சிறார்களாக ரயிலில் பயணிக்கும் இருவரும் டூரிஸ்ட் கைடுகளாகிறார்கள்; திருடுகிறார்கள். லத்திகாவை மறக்காத ஜமால் அவளைத் தேடிச் செல்கிறான். ஜமாலுடன் செல்லும் சலீம், லத்திகாவை விபச்சாரத்தில் ஈடுபடுத்த முயற்சிக்கும் கும்பலின் தலைவன் மம்மோனை சுட்டுக் கொல்கிறான். ஆனால் மறுகணமே லத்திகாவை தனக்கு உரிமையாக்கிக் கொண்டு துப்பாக்கி முனையில் ஜமாலை விரட்டியடிக்கிறான்.

கால் சென்டரில் தேநீர் வழங்கும் ஜமால், சுறுசுறுப்பும், சமயோசிதமும் உடையவனாக விளங்குகிறான். சலீமை மீண்டும் கண்டுபிடிக்கிறான். ஒரு நிழல் உலக தாதாவிடம் தற்பொழுது வேலை செய்வதாக கூறும் சலீம் தன்னை மன்னிக்கக் கோருகிறான். அந்த தாதாவின் வைப்பாட்டியாக லத்திகா இருப்பதையும் ஜமால் கண்டுபிடிக்கிறான். ஜமாலோடு சேர்ந்து தப்பிக்க முயலும் லத்திகாவின் முயற்சி தாதாவின் அடியாட்களால் முறியடிக்கப்படுகிறது. மீண்டும் லத்திகாவை தேடிக் கண்டறிய முடியாத ஜமால், 'கோடீசுவரனாக விரும்புவது யார்?' நிகழ்ச்சியின் மூலம் லத்திகா தன்னைப் பார்க்கக் கூடும் என அந்நிகழ்ச்சியில்

**இந்தியாவில் சேரிகள் இருப்பதோ, இங்கே சிக்னல்களில் சிறுவர்களும் சிறுமிகளும் பிச்சையெடுக்கிறார்கள் என்பதோ இந்த மாபெரும் கலைப்படைப்பின் தூண்டுகோலாக இருக்கவில்லை. மேலை நாடுகளில் ஏற்கெனவே புகழ் பெற்றிருந்த 'கோடீசுவரனாக விரும்புவது யார்?' நிகழ்ச்சிதான் மையமான கலாச்சார இணைப்புப் பாலமாக விளங்குகிறது. அந்த வகையில் இது ஒரு உலகமயப் படம்.**

கலந்து கொள்கிறான். இறுதியில் சலீம் தாதாவைக் கொன்று தியாகம் செய்ய, ஜமாலும், லத்திகாவும் இணைகிறார்கள். 'ஜெய் ஹோ' (வெற்றி உண்டாகட்டும்) என ரகுமான் பாடத் துவங்குகிறார். நாயகனும், நாயகியும் கைகோர்த்து நடக்கிறார்கள். சுபம்.

ஒரு பாட்டிலேயே நமது ஏழை தமிழ்ப்பட ஹீரோக்களெல்லாம் கோடீசுவரர்களாகும் பொழுது இது எம்மாத்திரம் என்கிறீர்களா? ஆஸ்கர் விருதுக்கு பொழிப்புரை வழங்கும் அறிவுஜீவிகளோ, இப்படத்தை வழக்கமான மசாலா எனச் சொல்ல முடியாது என்கிறார்கள். இந்தத் திரைப்படம் சேரி வாழ்க்கையைக் காட்டுகிறது. மதக் கலவரத்தைக் காட்டுகிறது. மும்பையின் தாதாக்களைக் காட்டுகிறது. சிவப்பு விளக்கு விபச்சாரிகளைக் காட்டுகிறது. எனவே இந்தியாவின் யதார்த்தத்தை, வறுமையின் அழகியலோடு காட்டும் திரைப்படம், இது ஒரு சிறுவர் கதை போன்ற புனைவு என வாதிடுகிறார்கள்.




இல்லை, இந்தியா முன்னேறிக் கொண்டிருக்கிறது... நமது சாதனைகளைப் பற்றி இல்லாமல், நமது சேரிகளைப் பற்றி திரைப்படம் எடுப்பதன் மூலம் நமது வறுமையைக் காசாக்குகிறார்கள், இது வறுமையை ரசிக்கும் மேலைநாட்டு வக்கிர மனோபாவம்' என ஒளிரும் உலகமய இந்தியர்கள் கொதித்தார்கள்.

இந்த நாட்டில் சேரிகள் இருப்பது அவமானமில்லை. அங்கே புழுக்களைப் போல மக்கள் வாழ்வது அவமானமில்லை. அறுபதாண்டு ஜனநாயக சோசலிசக் குடியரசில் அவமானம் கொள்வதற்கான அனைத்து சமூக நிலைமைகளை மாற்றாமல் சத்தமின்றி ஏற்றுக் கொள்ளும் தேசபக்தர்கள், அதனை வெளிநாட்டவர் பேசினாலோ, திரைப்படமாக எடுத்தாலோ உடனடியாக இந்தியாவை இழிவுபடுத்துகிறார்கள் என்பது கடைந்தெடுத்த அயோக்கியத்தனம். பிரச்சினை இந்தியாவின் அவமானங்களை சித்தரிப்பதல்ல, அது சித்தரிப்பின் முழுமையும், நேர்மையும் குறித்ததாகும்.

இது தவிர, 'சேரி நாய்' என்ற சொல் சேரி மக்களை இழிவுபடுத்துவதாக உள்ளது, அப்பெயரை நீக்க வேண்டும் என மும்பையிலும், பீகாரிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. இப்படியாக பல வண்ணக் கதம்பமாக இத்திரைப்படத்திற்கான எதிர்வினைகள் இந்தியாவில் எழும்பிய போதும், ஆஸ்கர் விருது கிடைத்த மறுநொடியே எல்லா முணுமுணுப்புகளும், எதிர்ப்புகளும் இருந்த இடம் தெரியாமல் காணாமல் போய் விட்டன. எங்கு பார்த்தாலும், 'ஜெய் ஹோ' மட்டும் ஒலிக்கத் துவங்கியது. இப்பொழுது தேசப்பற்றுக்கு புதிய விளக்கம் தொடங்கியது. பரிசுத்தமான ஆஸ்கர் மேன்மக்களின் கௌரவப் பிரச்சினைகளைக் கழுவிச் சுத்தம் செய்து விட்டதால், ஆஸ்கர் விருது பெற்றுத் தந்த திரைப்படத்தையும், கலைஞர்களையும் விமர்சிப்பது நாட்டுப்பற்றற்ற செயல் என்றாகியது. 'ஜெய் ஹோ' பாடலை யார் தேர்தல் பிரச்சாரத்திற்கு பயன்படுத்துவது என பா.ஜ.கவிற்கும், காங்கிரசுக்கும் ஒரு பெரிய அக்கப்போரே நடந்தது. ரகுமானே கூச்சப்படும் அளவிற்கு அவரை 'சென்னையின் மொசார்ட்' என ஒரு பத்திரிக்கை புகழ்ந்து தள்ளியது.

பிரிட்டிஷ்-அமெரிக்க திரைப்படத் தயாரிப்பு நிறுவனங்களால் முதலீடு செய்யப்பட்டு, டானி பாயல் என்ற பிரிட்டிஷ் இயக்குனரால் எடுக்கப்பட்ட திரைப்படத்தை, இந்தியத் திரைப்படம் என்று கொண்டாடுவது அறிவீனம் மட்டுமல்ல, அமெரிக்க ஆஸ்கருக்கான அடிமை மோகத்தின் வெளிப்பாடாகும். ஆஸ்கர் விருது, அமெரிக்கத் திரைப்படங்களுக்காக, அமெரிக்க குடிமக்களை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்ட கமிட்டியால் தெரிவு செய்யப்படும் திரைப்பட விருது. ஒரு வேளை டானி பாயல் இத்திரைப்படத்தை இயக்கா விட்டால், இந்தியாவில் வெளியிடப்படுவதற்கு முன்பே அமெரிக்காவில் வெளியிட்ட ராபர்ட் முர்டோச்சின் ஃபாக்ஸ் செர்ச் லைட் இத்திரைப்படத்தை தயாரிக்காமல் இருந்திருந்தால், ஒரு மூன்றாம் உலக நாட்டுக்காரன் தயாரித்து வெளியிட்டிருந்தால், இத்திரைப்படத்திற்கு விருது கிடைத்திருக்குமா என சிலர் வாதிடுகிறார்கள். விசயம் யார் தயாரித்தது என்பது மட்டுமல்ல, என்ன சொல்லப்பட்டது, எப்படிச் சொல்லப்பட்டது என்பதும்தான் முக்கியம்.

உதாரணமாக, தாஜ்மகாலை சுற்றி பார்க்க வரும் ஒரு அமெரிக்கத் தம்பதியர் உண்மையான இந்தியாவைக் காண விரும்புவதாக கைடாக வேலை செய்யும் ஜமாலிடம் கூறுகிறார்கள். அவர்களைப் பரந்து விரிந்த யமுனை நதிக்கரையோரம் வட மாநிலத்தவர்கள் நூற்றுக்கணக்கான துணிகளைத் துவைத்துக் காயப் போடப்பட்டிருக்கும் காட்சியைக் காண ஜமால் அழைத்துச் செல்கிறான். அதற்குள் அவர்களது காரின் டயர் முதற்கொண்டு அனைத்துப் பாகங்களையும் சலீம் களவாடி விடுகிறான். திரும்பி வரும் அமெரிக்க தம்பதியினர் அதிர்ச்சி அடைகின்றனர். ஜமாலும் திருடர்களின் கூட்டாளி என ஆவேசமுறும் இந்திய வாகன ஓட்டுனர், அவனைக் கீழே தள்ளி உதைக்கிறான். தங்களது உடைமைகளை இழந்த அந்த நேரத்திலும் ஜமால் அடிபடுவதைக் காணச் சகியாமல், தமது கரங்களால் அணைத்து அவனைக் காப்பாற்றுகின்றனர் அமெரிக்கத் தம்பதியினர். தனது கிழிந்த உதடுகளிலிருந்து கசியும் இரத்தத்தை துடைத்தவாறே, 'உண்மையான இந்தியாவைக் காண வேண்டுமென்றீர்களே, இது தான் உண்மையான இந்தியா!' எனக் கூறுகிறான் ஜமால். 'கவலைப் படாதே, உனக்கு உண்மையான அமெரிக்காவை காட்டுகிறேன்' எனக் கூறி டிப்ஸாக ஒரு நூறு டாலர் நோட்டைத் தருகிறாள் அமெரிக்கப் பெண்.

'உண்மையான அமெரிக்காவை' இராக்கின் பிணக்குவியலிலும், குவாண்டனமோவின் நிர்வாணச் சித்திரவதைகளிலும், ஆப்கானிஸ்தானின் தீராத ரணத்திலும் உலகம் தரிசித்தது. ஆனால், உண்மையான அமெரிக்காவின் மனிதாபிமானமிக்க முகத்திற்கு ஒற்றை வரியில் நுட்பமாக புதிய பொழிப்புரை வரைகிற இந்தக் ஒற்றைக் காட்சிக்காகவே ஒரு ஆஸ்கரென்ன, நூறு ஆஸ்கர் வழங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**கோடீசுவரனான சேரி நாய், ஆஸ்கர் விருது வாங்கிய இந்தியா!**

விகாஸ் ஸ்வரூப் என்ற இந்திய வெளியுறவுத் துறை அதிகாரி வினாடி வினாக்களில் ஆர்வமுடையவர். 'சேரி மக்கள் மொபைல் போன்களைப் பயன்படுத்துகிறார்கள்' என்ற பத்திரிக்கைத் துணுக்கு அவருக்கு ஒரு சுவாரசியமான கற்பனையைத் தோற்றுவித்தது. 'கோடீசுவரனாக விரும்புவது யார்?' என்ற புகழ் பெற்ற நிகழ்ச்சியில் சேரியில் பிறந்த இளைஞனொருவன் வெற்றி பெறுவதாக இலண்டனில் தனது ஓய்வு நேரத்தில் பொழுதுபோக்காக ஒரு கதை எழுதினார். வினாடி வினா நிகழ்ச்சி என்ற பெயரில் 'கோடீசுவரனாக விரும்புவது யார்?' என்ற சூதாட்ட நிகழ்ச்சியை உலகிற்கு அறிமுகம் செய்து வைத்த செலடார் பிலிம்ஸ் என்ற பிரிட்டிஷ் நிறுவனம் இந்தக் கதையைப் பற்றிக் கேள்விப்பட்டு, இக்கதைக்கான உரிமைகளை வாங்கியது. ஐந்து மில்லியன் டாலர் முதலீடு செய்த வார்னர் இன்டிபெண்டன்ட் நிறுவனம் வட அமெரிக்காவிலும், கனடாவிலும் உள்ள இந்தியச் சமூகங்களிலும், கலைப் பட விரும்பிகள் மத்தியிலும் இத்திரைப்படத்தை வினியோகித்து இலாபமீட்டலாம் எனத் திட்டமிட்டது. இப்படிப் பிறந்ததுதான் 'சேரி நாயின்' மீதான அக்கறை.

எனவே, இந்தியாவில் சேரிகள் இருப்பதோ, இங்கே சிக்னல்களில் சிறுவர்களும் சிறுமிகளும் பிச்சையெடுக்கிறார்கள் என்பதோ இந்த மாபெரும் கலைப் படைப்பின் தூண்டுகோலாக இருக்கவில்லை. மேலை நாடுகளில் ஏற்கெனவே புகழ் பெற்றிருந்த 'கோடீசுவரனாக விரும்புவது யார்?' நிகழ்ச்சிதான் மையமான கலாச்சார இணைப்புப் பாலமாக விளங்குகிறது. அந்த வகையில் இது ஒரு உலகமயப் படம்.

பிரச்சினை வெளிநாட்டவரின் பார்வை என்பதல்ல. அமெரிக்காவில் வாழும் மீரா நாயர் மும்பைத் தெருவோரச் சிறார்களின் வாழ்வின் கோலங்களை 'சலாம் பாம்பே' எனும் திரைப்படமாக எடுத்தார். கனடாவில் வாழும் தீபா மேத்தா 'ஃபயர்' மற்றும் '1947 எர்த்' முதலான திரைப்படங்களை இந்தியாவைக் கதைக்களனாக கொண்டு எடுத்தார். இவையெதுவும் தட்டையான சித்திரங்களில், குறியீடுகளால் இந்தியாவை சித்தரிக்க முனையவில்லை. ஆனால், 'ஸ்லம்டாக் மில்லியனர்' தாராவி + தாஜ்மகால் +சிவப்பு விளக்குப் பகுதிகள் + பிச்சையெடுக்கும் குழந்தைகள் + தாதாக்கள் + மதக்கலவரங்கள் + கால்சென்டர் + 'கோடீசுவரனாக விரும்புவது யார்?' + சிகரமாக ஒரு காதல் = இந்தியா என்ற சூத்திரத்தின் அடிப்படையில்தான் எடுக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் உச்சரிப்போடு கதாநாயகன், பெரும்பாலும் ஆங்கிலத்திலும், ஒரிஜினாலிட்டிக்காக அவ்வப்போது இந்தியிலும் விரையும் உரையாடல்கள், ஒட்டாத காதல் கதை, ஊறுகாய் போல தொடப்பட்டுள்ள சேரிகளும், சிவப்பு விளக்குப் பகுதிகளும் எனத் தட்டையான கருத்தமைவுகளில் உருவான இந்த சராசரிப் படம் இந்திய மக்களின் மனதில் ஒட்டவில்லை.

ஆஸ்கர் விழாவில் இத்திரைப்படத்தின் செய்தியாக, 'நம்பிக்கை! இத்திரைப்படம் நம்பிக்கையைப் பேசுகிறது!' எனக் குறிப்பிட்டனர். இதுகாறுமான வாழ்க்கையில் ஜமால் பட்ட காயங்கள், நிகழ்ச்சித் தொகுப்பாளர் ஜமாலை தோற்கடிக்க செய்யும் முயற்சிகள், போலீசு செய்யும் சித்திரவதைகள் அனைத்தையும் தாண்டி நம்பிக்கையினால் ஜமால் வெற்றி பெறுகிறான் என விளக்கவுரை எழுதுகிறார்கள். மூல நாவலில் லத்திகா என்றொரு கதாபாத்திரமே இல்லை. டைட்டானிக் கப்பல் மூழ்கிய அவலத்தைக் காதலில் மூழ்கடித்த ஸ்பீல் பெர்க்கைப் போல, சேரி நாய் கோடீசுவரனான கதையும் காதலையே மைய இழையாகக் கொள்கிறது. என்ன இருந்தாலும் நாயகனுக்கு ஒரு இலட்சியம் அவசியமல்லவா? கேவலம் பணத்துக்காக அவன் கோடீஸ்வரன் நிகழ்ச்சியில் விளையாடினான் என்றா கதை சொல்வது?

உலகப் பொருளாதாரமே அதல பாதாளத்தை நோக்கி சரிந்து கொண்டிருக்கும் இருண்ட சூழலில், திரைப்படத்தின் நாயகன் ஒரு சூதாட்டப் போட்டியில் ஜெயிப்பதை யதார்த்தத்தில் உலக சூதாட்ட முதலாளித்துவத்தினால் தோற்றுக் கொண்டிருக்கும் அமெரிக்க மக்கள் ரசிக்கிறார்கள்.

கடந்த ஆண்டு செப்டம்பரில் ஸ்பீல் பெர்க்கின் படத்தயாரிப்பு நிறுவனம், அம்பானியின் ரிலையன்ஸ் அடா நிறுவனத்துடன் 1.2 பில்லியன் மதிப்புள்ள ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. யூடிவி கம்யூனிகேஷன்ஸ் நிறுவனம், ஃபாக்ஸ் செர்ச்லைட்டுடன் ஒப்பந்தமிட்டுள்ளது. நெட்வொர்க் 18 நிறுவனத்துடன் அமெரிக்காவின் வயாகாம் குழுமம் கூட்டு வைத்துள்ளது. ஹாலிவுட்டில் 50 மில்லியன் செலவழித்து எடுக்க வேண்டிய ஒரு திரைப்படத்தை இங்கே 2 மில்லியன் தொகையில் எடுக்கலாம் என்பதும், அதே வேளையில் உலகளாவிய வலைப்பின்னல் வினியோகத்தில் அதிகபட்சமான லாபம் சுருட்டலாம் என்பதும் புரிந்த பிறகு, 'இந்தியாவின் சக்தியை உலகம் அங்கீகரிப்பதைத்' தவிர வேறென்ன உலகத்திற்கு வழி இருக்கிறது?

ஒரு காட்சியில் லத்திகாவிடம் ஜமால் சொல்லுகிறான். 'நாம் இருவரும் இணைவது விதி!'. இந்தியர்களிடையே விதி என்கிற கருத்தாக்கம் எவ்வளவு வலிமையானது என ஒரு பேட்டியில் விளக்குகிறார் டானி பாய்ல். ஸ்லம்டாக் மில்லியனர் ஆஸ்கர் விருது பெற்றதும் கூட விதிதான், சந்தையின் விதி! உலகிலேயே அதிகமான திரைப்படங்களை தயாரிக்கும் நாட்டின் திரைப்பட நுகர்வு சந்தையில் உறுதியான அடியெடுத்து வைப்பதற்கான விதி.

ஹாலிவுட்டுக்கும் பாலிவுட்டுக்குமான இணைப்பின் அடையாளம் என ஒரு சராசரிப் படத்தைப் போற்றிப் புகழ்வதை சகித்துக் கொள்ள முடியாமல், சென்னையைச் சேர்ந்த திரைப்பட இயக்குனரும், விமர்சகருமான ஹரிஹரன் கசப்போடு தமது கட்டுரையில் குறிப்பிடுகிறார். 'சில ஆண்டுகளுக்கு முன்பு வரை ஆஸ்கர் கமிட்டிகளில் நான் நம்பிக்கை வைத்திருந்தேன். ஆனால் மூன்றாம் உலக நாடுகளில் அழகுப் பொருட்கள் சந்தையை விரிவுபடுத்துவதற்காக இந்திய மாடல்களுக்கு உலக அழகிப் பட்டங்கள் வழங்க வேண்டிய நிர்ப்பந்தங்களுக்கு அழகிப் போட்டி நடுவர்கள் ஆளானதைப் போல, இவர்களும் நிர்ப்பந்தங்களில் சிக்கி கொண்டு விட்டார்கள். வெட்கக்கேடு!' என்கிறார். எனவே, ஆஸ்கர் கொடுத்தேயாக வேண்டும் என முடிவோடு செயல்பட்ட அமெரிக்காவிற்கு, 'எல்லாப் புகழும் அமெரிக்காவுக்கே!' என நேரடியாக நன்றி கூறி விடுவது நேர்மையானது.

● வாணன்

## சிறுகதை:

# 'பால்' திரிந்த வேளை!

''சும்மாவா சொன்னாங்க ஆண அடிச்சு வளர்க்கணும்; பொண்ண புடிச்சு வளர்க்கணும்னு, ஒரு குடும்பம் நடத்துற பயலா இவன்? மணி ஆறாகுது.. இன்னும் தூங்கிட்டு கெடக்கான்...'' மாமியார் மரகதம்மாள் குரல் ஊடுருவ திடுக்கிட்டு எழுந்தான் மூர்த்தி.

அய்யய்யோ இவன வேற ஸ்கூலுக்கு கெளப்பணும்.. சாப்பாடு வேற கட்டணும்.. தலைவலின்னு நேத்து போட்ட மாத்திரை ஆளையே அசத்திடுச்சு... மனதில் பதட்டத்தின் ரேகைகள் கூட ''டேய் எழுந்திரு, எழுந்திரு'' மகன் ராகுலை எழுப்ப கண்களை திறக்காமலே எழுந்தவன், அந்த இடத்திலே ஒண்ணுக்கு போக டவுசரைத் தூக்க.. ''டேய்.. டேய்.. மாடு கண்ணத் தொறயேன்.. '' என்று கத்தியபடி.. பாத்ரூமுக்குள் அவனைத் தள்ளிக் கொண்டு போய் நிறுத்தினான்.

மனைவி முகத்தைப் பார்த்தே சரியில்லை என்று புரிந்து கொண்ட மூர்த்தி அவசர அவசரமாக கேஸ் அடுப்பைப் பற்றவைத்து பால் பாத்திரத்தை வைத்தான்.

ஆமாம்.. இவன் டீயப் போடுறதுக்குள்ள.. நான் ஆபீசுக்கே போய் சேர்ந்துடுவேன். வந்து வாச்சுது பாரு எனக்குன்னு.. ஒரு குடும்பப் பய காலைல எழுந்தமா, வேலையப் பாத்தமான்னு இருக்கணும்.. பொண்டாட்டில்ல வந்து எழுப்ப வேண்டியிருக்கு.

தோ.. ரெடியாயிடுச்சு.. இடைப்பட்ட நேரத்தில் அரையும் குறையுமாக பல் துலக்கியபடி.. ராகுலைத் தேட, அவன் பாத்ரூமிலேயே நின்று கொண்டிருந்தான். எருமை மாடு.. ஒண்ணுக்கு போக சொன்னா அங்கேயே நின்னுக்கிட்டு கெடக்கிறியே.. வா இங்க.. நீங்க கொஞ்சம் அவன் முகத்த கழுவக் கூடாதா? மனைவி சுதாவைப் பார்த்து கேட்டபடி ராகுலை இழுத்து வைத்து அவன் தேம்பத் தேம்ப முகத்தை பாத்திரம் கழுவுவது போல சலிப்புடன் கழுவி எடுத்தான்.

நீ சீக்கிரம் எழுந்து வேலையப் பாக்காம.. கோவம் வேற வருதா.. வேலைக்கு லாயக்கில்ல. வாய்தான் நீளுது.. ஆயி, அப்பன் வளர்ப்பு அப்படி.. சுதா தலைவாரிக் கொண்டே பொரிந்து தள்ளினாள்.

மரகதம்மாளும் சேர்ந்து கொண்டாள்.. எல்லாம் உன் அவசரம். வேற பையன் பாக்கலாம்னா பாத்தவுடனேயே புடிச்சு போச்சுன்ன.. உங்க அப்பாவும் பாய்ஞ்சுகிட்டு முடிச்சாரு ! அந்த வைத்தீஸ்வரன் கோயில் சோசியன் அப்பவே சொன்னான்.. இது கேட்ட நட்சத்திரம்.. ஒத்து வராதுன்னு. அதான் கேட்டவங்கள அடிச்சது.. அவுரு போய் சேர்ந்துட்டாரு .. ! இப்ப குத்துது கொடையுதுன்னா..

எதிர்த்துப் பேசினால் வம்பு அதிகமாகும் என்பதைப் புரிந்து கொண்ட மூர்த்தி.. மாமியாரை ஒரு திராவகப் பார்வை மட்டும் பார்த்துவிட்டு திரும்புவதற்குள் அவன் மனசாட்சியா போலவே சோறும் பொங்கியது. அவசர அவசரமாக அடுப்பை சின்னது செய்துவிட்டு.. டீ ஆற்றி எடுத்து வந்தான்.. இந்தாங்க டீ..

மணி என்னாவுது.. உன் டீய குடிச்சிகிட்டு உட்கார்ந்தா அங்க வேலை போயிடும்.. மொதல்ல டிபனை கொடு.. கெளம்புறேன்... மனைவி அரக்க பறக்கடிக்க.. வேகமாக மதிய உணவைக் கட்டி டிபன் பாக்சு அடியை கைலி தலைப்பால் துடைத்துக் கொடுத்தான்... இட்லி ரெண்டாவது சாப்புட்டு போங்க.. கெஞ்சினான்.. திருப்திதான.. நீயே தின்னுட்டு நிம்மதியா தூங்கு.. மேற்கொண்டு பேச நேரம் அனுமதிக்காததால் வசவியபடியே கிளம்பிப் போனாள் சுதா.

மரகதம்மாளும் சேர்ந்து கோண்டாள்.. எல்லாம் உன் அவசரம். வேற பையன் பாக்கலாம்னா பாத்தவுடனேயே புடிச்சு போச்சுன்ன.. உங்க அப்பாவும் பாய்ஞ்சுகிட்டு முடிச்சாரு! அந்த வைத்தீஸ்வரன் கோயில் சோசியன் அப்பவே சோன்னான்.. இது கேட்ட நட்சத்திரம்.. ஒத்து வராதுன்னு. அதான் கேட்டவங்கள அடிச்சது.. அவுரு போய் சேர்ந்துட்டாரு..! இப்ப குத்துது கோடையுதுன்னா..

சே ஒருநாள் லேட்டா எழுந்திருச்சது எவ்வளவு தப்பா போச்சு.. என்று தன்னைத்தானே நொந்தபடி.. மகனுக்கு அவசர அவசரமாக இட்லியை வாயில் திணித்தபடி.. மாமி ராகுலை ஸ்கூல்ல விட்டு வர்றீங்களா.. நான் தண்ணி தூக்கியாந்துர்றேன்.. மூர்த்தியின் வேண்டுகோளைக் கேட்டு ஆத்திரமானாள் மரகதம்மாள்.

''என்னமோ நடக்குதாம் கதையில.. எலி ரவிக்கை கேட்டுதாம் சபையிலன்னு.. நானே மவ சாப்பிடாம போயிட்டாளேன்னு வேதனையில இருக்கேன். இந்த கால வெய்யில்ல நம்பாள முடியாதுப்பா.. இதுவும் வேற ரோட்ல எங்கிட்ட அடங்காது..'' என்று வெடுக்கென மறுத்தாள்.

வேறு வழியில்லாமல் மகனை ஸ்கூலுக்கு கொண்டுபோய் விட்டுவிட்டு தெருக்குழாயில் தண்ணீர் பிடிக்கும் நினைப்போடு ஓடிவந்தவனை, என்ன மூர்த்தி நேத்து சொர்க்கம் பாத்தியா.. என்று எதிர்வீட்டு மணி ஆரம்பிக்க.. நீ வேற நம்ப பாடே நரகமா இருக்கு! ஒரு நாள் லேட்டா எழுந்திருச்சதுக்கு இன்னிக்கு நான் பட்டபாடு எனக்குதான் தெரியும். இந்தக் கெழம் வேற மவளை நிண்டி விடுது.

என் மாமியார் பரவாயில்ல.. கூட மாட வேல பாக்குது. மவள் புரியாம பேசுனா கூட, அவன் பொழுதுக்கும் வேல செய்யுறான்.. தண்ணி கூட எழுந்திருச்சு குடிக்கக் கூடாதான்னு மவளையே கண்டிக்கும். என் வீட்ல இப்படி.. உனக்கு வாச்சது அப்படி.. என்னா பண்றது. ஆணா பொறந்தா எல்லாத்தையும் அனுபவிச்சுதான் ஆகணும்..

சரி வாரேன்.. மலையாய் குவிந்திருக்கும் துணியும், சமைத்த பாத்திரங்களும் கண்ணில் நிழலாட.. தண்ணீர் குடத்தின் எடை அதை விட குறைவானது போல வேகமாக வந்தான் மூர்த்தி.. களைப்பும், வறட்சியும் ஒருசேர, காலையில் மனைவிக்கு போட்டு அவள் குடிக்காமல் வைத்துச் சென்ற தேநீர் கண்ணில் பட்டது. ஆறிப்போய் அந்நியமாக இருந்த

தேநீரை ஆதரவாக ஊற்றிக் கொண்டான். துணிகளை அலசி எடுத்து நிமிரும்போது இடுப்பு தனியாகக் கழண்டு விழுவது போல் வலி பின்னியெடுத்தது. தஸ், புஸ் என்று நாவில் குழறிய காற்றின் வழி 'அம்மா' என்று தனக்குத்தானே ஆசுவாசப்படுத்திக் கொண்டான்.

மதியம் சாப்பிடவே மணி இரண்டரை ஆனது. சற்று கண்ணயர்ந்த வேளையில் ''கேஸ்.. சார் கேஸ்'' என்று குரல் வர வெடுக்கென விழித்துக் கொண்ட மூர்த்தி ''வர்றேன்'' என்றாவாறு கூடத்தில் படுத்திருந்த மாமியாரை லாவகமாகக் கடந்து போனான். காஸ் சிலிண்டரை வாங்கி வைத்த கையோடு கடிகாரத்தைப் பார்த்தான்.. மணி மூனரை. இனி எங்கே படுப்பது.. போய் மகனை பள்ளிக்கூடத்திலிருந்து அழைத்து வர வேண்டும். மூர்த்தி வேகமாகக் கிளம்பினான்.

''என்ன ராகுலப்பா, ரேசன்ல இந்த அம்பது ரூவா சாமான்லாம் வாங்கிட்டீங்களா?'' பையனை அழைத்துப் போக வந்திருந்த ராஜன் விசாரிக்க, மூர்த்தி சலிப்போடு '' எங்க வாங்கறது.. மொதல் வாரம் போனா 'அப்புறம் வா'ங்குறான். கடைசி வாரம் போனா இல்லேங்குறான். நமக்கிருக்குற வேலைல சரியா போக முடியாது.. இன்னிக்கு கூட போகலாம்னா.. மிளகா, மல்லி வேற காய வச்சிருக்கேன். கொழம்புப் பொடியே இல்ல.. அத மொதல்ல அரைச்சிட்டு வரணும்.. இன்னொரு பையனிடம் பேசிக்கொண்டே விளையாடிக்கொண்டு வந்த ராகுலைக் கண்டதும் ''டேய் இங்க வாடா..'' அவசரமாய் கையைப் பிடித்து இழுத்தான். கண்கள் பையன் மேல் இருந்தாலும் மனம் அடுத்த வேலையில் மூழ்கியிருந்தது.

மிளகாய்த்தூள் அரைத்து வருவதற்குள் காத்திருப்பும் புழுக்கமும் இன்னொருமுறை குளிக்கலாம் போலிருந்தது.. இந்தக் களைப்புக்கு யாராவது ஒரு காபியோடு வந்து கையில் கொடுத்தால் அப்படியே கொஞ்சம் ஓய்வெடுக்கலாம் போல உடல் ஏங்கியது.. ''மணி காபியா போட்டிருக்க.. ஆறாகுதேன்னு கேட்டேன்..'' மாமியார் குரல், நினைப்பில் தீ மூட்ட.. அடுப்படிக்கு நகர்ந்தான்.

ஏய் காப்பி குடிச்சிட்டு.. புக்க எடுத்து வச்சு படி.. நான் காயற துணிய எடுத்துட்டு வந்துடறேன்.. இந்தாங்க.. மாமியாருக்கு காபி டம்ளரை தந்துவிட்டு அடுத்த வேலைக்கு நகர்ந்தான் மூர்த்தி.

மூர்த்தி ! ஏம்பா ராத்திரிக்கு என்ன செய்யப் போற!.. சாப்பாடா? டிபனா?.. இடுப்பொடிய வேலை பார்த்துவிட்டு சற்றுநேரம் வேலைகளை மறந்து தலை சீவிக் கொண்டிருந்தவனை மரகதம்மாளின் பேச்சு எரிச்சலூட்டியது. பீறிட்டு வந்த கோபத்தை அடக்கிக் கொண்டவன் நையாண்டி தோரணையில் ஏன்! என்ன வேணும் உங்களுக்கு? என்று நேர்படவே கேட்டான்.



எனக்கு ஒண்ணுமில்ல.. பொழுதுக்கும் சோறு, சோறுன்னு மூஞ்சில அடிச்ச மாதிரி இருக்கும்பா உன் வீட்டுக்காரி.. காலைலயே வேற மொணவிகிட்டு போனா.. அவளுக்கு பூரின்னா புடிக்கும்.. பேசாம, பூரியே போட்டுடறேன்..

அவளுக்கு புடிக்குமோ, உனக்கு புடிக்குமோ! என்று வாய்க்குள்ளேயே முணகிக் கொண்டவன்.. வெங்காயத்தையும் அரிவாள்மனையையும் எரிச்சலோடு கொண்டுவந்து வைத்தான். ''மர கழண்டு போச்சு.. சே!'' என்று மூர்த்தி சலித்துக்கூற.. வெடுக்கென ஆனந்தம் டி.வி. தொடரில் மூழ்கியிருந்த மாமியார் திரும்பினாள். சுதாரித்துக் கொண்ட மூர்த்தி ''வாங்கி ஒரு மாசம் கூட ஆகல தேங்கா துருவி கழண்டுகிச்சு..!'' என்றான் மாமியாரைப் பார்த்தவாறு.. தேங்காய் துருவியையும், மருமகன் கண்களையும் மாற்றி மாற்றி பார்த்தபடி மரகதம்மாள் சந்தேகப் பார்வையுடன் டி.வி. பக்கம் முகத்தைத் திருப்பியபடியே ''வாங்கறப்பவே பாத்து வாங்கலேன்னா இப்படித்தான்'' என்றாள் தன் பங்குக்கு. ''பாக்குறப்ப எல்லாம் நல்லாத்தான் தெரியுது.. பழகப் பழகத்தானே தெரியுது.. சுத்த வேஸ்ட்டுன்னு..'' மூர்த்தியும் விடுவதாயில்லை. மரகதம்மாளும் ஏதோ கூற வாயெடுக்க.. அலுவலகப் பையைக் கழட்டிய களைப்புடன்.. சுதா வீட்டிற்குள் நுழைந்தாள்.

மனைவி வந்ததும் அரிவாள் மனையைப் படுக்க வைத்தபடி ஒரு டம்ளர் தண்ணீரோடு பின் தொடர்ந்தான் மூர்த்தி.. என்ன வெங்காயம் வாட வருது.. அதே கையோட தண்ணி மொண்டியா.. கைய கழுவிட்டு வேற எடு.. அய்யோ!.. என்று தலையில் தட்டிக் கொண்டாள்.

அப்பாடா இந்த பஸ்ல வர்றதுக்குள்ள உடம்பே விண்டு போவுது.. என்று அவள் முடிப்பதற்குள் கூடத்தில் டி.வி.க்கு நேராக ஈஸி சேரை தயாராக வைத்தான் மூர்த்தி. டி.வி.யின் ஆனந்தத்தில் அவளும் பங்கெடுத்துக் கொண்டாள். பார்த்துக் கொண்டே இருந்தவளுக்கு கண் எரிச்சல் தந்தது. சுற்றும் முற்றும் பார்த்தவள் ''அறிவில்ல இப்பதான் அலுத்துப் போயி வந்து உட்கார்ந்துருக்கேன்.. பக்கத்துல உக்காந்து வெங்காயம் நறுக்குறியே.. கண் எரியுதுல்ல.. இதைக் கூட சொல்லணுமா.. எடு .. அந்தப் பக்கம்.. போ உள்ளாற.. சத்தமாகக் கத்தினாள்.

அதானா.. நான் கூட ரொம்ப நேரம் டி.வி. பாக்குறோமே, அதான் கண் எரியுதோன்னு பார்த்தேன்.. ஏம்பா அந்த வெங்காயத்த தண்ணியில போட்டு நறுக்கக் கூடாது.. மாமியாரும் சேர்ந்து கொண்டாள். டி.வி. பார்க்கும்போது குறுக்கே மிக்சி போட்டால் வேறு மனைவிக்கு கோபம் வரும் என்பது தெரிந்ததால், துருவியவைகளை அரைக்காமல், முதலில் தயார்செய்து வைத்திருந்த பூரி மாவை வட்டவட்டமாக பூரிக்கட்டையால் தேய்க்கத் தொடங்கினான். கூடத்தில் உட்கார்ந்தாலாவது கொஞ்சம் காற்றோட்டம்

வாய்த்திருக்கும்.. ஆறுக்கு மூணு அடுப்படியில் புழுங்கித் தொலைத்தது, முதுகுத் தண்டில் வலி ஊர்ந்தது. அவனைப் பார்த்து பரிதாபப்பட்ட மாதிரி பூரிமாவு அவன் இழுத்த இழுப்புக்கு கொஞ்சம் இணங்கி வந்தது.

என்ன ரெடியா? மொதல்ல அவனுக்கு வையு.. மகனுக்கு கேட்கும் சாக்கில் அடுப்படி நிலவரத்தை ஆராய்ந்தாள் சுதா. தோ குருமா.. ரெடியாயிடுச்சு.. ராகுல் தட்டில் ஆவி பறந்தது. பூரியும், குருமாவும் அப்படியே எனக்கும் வச்சிடேன்?.. தோ எடுத்துட்டு வர்றேன்.. மனைவிக்கு கருகாமல் எடுக்க வேண்டுமே என்ற பயத்துடன் கொதிக்கும் எண்ணெயிடம் இரக்கம் வேண்டியவனைப் போல பார்த்தான் மூர்த்தி.

இந்தாங்க.. சுதாவுக்கு பூரி வைத்த வேகத்தில் அடுப்படிக்கு ஓடினான். ''தண்ணி உங்க அப்பன் வைப்பானா? தண்ணி வக்கிற பழக்கமே கிடையாது.. வளர்த்திருக்காங்க பாரு.. சுதா முன்பு பதட்டத்துடன் வந்து டம்ளரை வைத்தான். சுடச்சுட நாலு பூரியை அமைதியாக விழுங்கியவள், ''ஊம் இது என்ன குருமாவா சரவண பவன்ல வெக்கறானே அது எப்படி இருக்கு? அவன் மட்டும் என்ன வானத்துலேர்ந்து வர்ற பொருளை வச்சா செய்யுறான்.. உனக்குந்தான் எல்லாப் பொருளும் வாங்கித் தர்றேன்.. ஒரு டேஸ்ட் இல்ல. நீ எல்லாம் டிபனுக்கு லாயக்கில்ல... வேஸ்டு... பேசாம சோறு பொங்க வேண்டியதுதான்.. அதுக்குத்தான் லாயக்கு.. எங்க சோறு இருக்கா? அதையாவது தின்னு தொலைக்கலாம்.. சுதாவின் கோபம் பூரி போடுகையில் கையில் தெறித்த எண்ணெயை விட மூர்த்தியின் மேல் தனலாக விழுந்தது.

அய்ந்தாறு பூரி தின்ற பிறகு வழக்கம் போல அவள் இப்படி ஆரம்பிப்பாள் என்று தெரிந்து, ஏற்கெனவே அவன் கொஞ்சம் சோறு செய்திருந்தது நல்லதாகிப் போனது. ஏதோ வேண்டா வெறுப்பாகச் சாப்பிட்டதைப் போல முழுச் சோற்றையும் சாப்பிட்டாள் சுதா.. சாப்பிட்டு முடித்து அடுத்து வெற்றிலை பாக்கைப் போடுபவள் போல.. டி.வி.க்கு நேராகப் போய் 'அரசி' ராதிகாவின் வசனத்திற்கு ஏற்ற மாதிரி வாயை அசைத்துக் கொண்டு கிடந்தாள். ஒரு இடத்தில் ராதிகா தேசப்பற்றோடு வசனம் பேச தன்னையறியாமல் கொட்டாவி விட்டபடி படுக்கைக்குப் போனாள்.

மாமியாரும், மகனும் கூட படுத்து விட்ட கூடத்தில் 'அரசி ராதிகா' தனியாகப் பேசிக் கொண்டிருந்தாள். டி.வி.யைக் கூட யாரும் அணைக்கவில்லை. அடுப்படியில் எந்த சுவாரசியமும் இல்லாமல் ஒரு பாத்திரம் விடாமல் துலக்கி வைத்தான் மூர்த்தி.. பொத்தென்று விழுந்து படுத்தால் தேவலாம் என்று நினைத்தான். மனைவிக்கு கால் அமுக்காவிடில் அதன் பாதிப்பு மறுநாள் பேச்சில் வரும் என்பதால்.. சுதாவின் கால்களைப் பக்குவமாகப் பிடித்துவிட்டான். இதமாக இருக்க.. அப்பா அப்படித்தான் இந்தக் காலையும் புடி.. என்று புரண்டு படுத்தாள் சுதா.. தூக்கத்தை விடுத்து அமுக்கிவிடச் சொல்வதிலேயே குறியாக இருந்தாள் .. ஏய்! அதே இடத்துலேயே அமுக்குறீயே.. ஒருநாள் சொன்னா தெரியாதா.. இந்தப் பாதத்தைப்

**மூர்த்தியின் அலறலைக் கேட்டு பதட்டத்துடன் கணவன் அருகே வந்தாள் சுதா. கையில் கொண்டு வந்த பால் டம்ளரை தள்ளி வைத்துவிட்டு, கணவனின் தோளை உலுக்கியபடி என்னங்க.. என்னங்க.. என்று எழுப்பினாள். வெடுக்கென்று தூக்கத்தில் இருந்து விழித்த மூர்த்தி ஒருவாறு பிரமை பிடித்தவன் போல மனைவியை உற்றுப் பார்த்தான்.**

புடியேன்.. தானா அறிவா யோசிக்க மாட்டியா!.. கண்களைப் பிசைந்த தூக்கத்தைக் கலைத்தபடி அவள் சொன்னபடியெல்லாம் கைகளை அழுந்தினான்.

அப்படித்தான்.. ரெண்டு நாளா அந்தப் பையன் டவுசர்ல பட்டன் இல்லாம.. ஊக்க மாட்டி வுடறியே ஒழிய.. சும்மா இருக்குற நேரத்துல அதை தச்சி வைக்கக் கூடாது.. இல்ல டெய்லர்கிட்ட தரக்கூடாது.. எல்லாம் உனக்கு சொல்லணும்.. என்ன மூளையோ.. சுதா பொரிந்து தள்ள.. அழுகை பீறிட்டது மூர்த்திக்கு.. காலைலேர்ந்து படுக்குற வரைக்கும் உடம்பு நோவுது.. ஒரு நேரம் ஓய்வில்ல.. ஆள் வைக்காமல் அவ்ளோ வேலை பாக்குறேன்.. உங்களுக்கு இரக்கமே இல்லையா.. சும்மா இருக்குறப்பன்னு சொல்றீங்களே.. எப்போ சும்மா இருக்குறேன் சொல்லுங்க.. மறுமொழி பேசியதுதான் தாமதம், சுதாவுக்கு சூடு ஏறியது. ''ஓகோ! அப்ப நான்தான் சும்மா இருந்தனா.. இதுல எனக்கு இரக்கம் வேற இல்லாம வேல வாங்குறனா!.. திமிரு அதிகந்தான் ஆயிடுச்சு.. வாய்க்கொழுப்ப கொறச்சா சரியா போயிடும்.. விடு கால..'' என்று கடுப்போடு ஓங்கி ஒரு உதை உதைத்தாள்.

அந்த உதை நெஞ்சில் நங்கென்று விழ.. நிலை குலைந்த மூர்த்தி 'ஆ' என்று அலறியே விட்டான்.

மூர்த்தியின் அலறலைக் கேட்டு பதட்டத்துடன் கணவன் அருகே வந்தாள் சுதா. கையில் கொண்டு வந்த பால் டம்ளரை தள்ளி வைத்துவிட்டு, கணவனின் தோளை உலுக்கியபடி என்னங்க.. என்னங்க.. என்று எழுப்பினாள். வெடுக்கென்று தூக்கத்தில் இருந்து விழித்த மூர்த்தி ஒருவாறு பிரமை பிடித்தவன் போல மனைவியை உற்றுப் பார்த்தான். கண்களைக் கசக்கியபடி மீண்டும் இமைகளை உதறி ஏதோ எல்லாம் தலைகீழாய் மாறிப்போனது போல அதிர்ச்சியடைந்தவன் சுற்றுமுற்றும் பார்த்தபடி மனைவியை வெறித்தான். ''ஏங்க, என்னங்க ஆச்சு.. ஏன் அலறுனீங்க? தூக்கத்துல ஒரே சத்தமா கத்துனீங்க.. ஏதாவது கெட்ட கனவா.. என்றபடி ஆதரவாக அவன் கைகளைப் பிடிக்க, இவ்வளவு நேரம் நடந்ததெல்லாம் கனவுதான் என்ற புரிதல் மூர்த்திக்கு வந்தது. இருந்தாலும் இன்னும் இயல்பு நிலைக்குத் திரும்பாமல் அவன் கண்களில் பீதி உறைந்திருந்தது. சரி, சரி எதாவது பயந்தா கொணமா இருக்கும்.. நான் வேலைய முடிச்சுட்டு வர்றதுக்குள்ள தூங்கிட்டீங்க. இந்தாங்க இந்தப் பாலைக் குடிங்க.. என்று டம்ளரை எடுத்தவள், ''அய்யய்ய, பால் திரிஞ்சிடுச்சு.. இருங்க வேற ஆத்தி எடுத்துட்டு வர்றேன்'' என்று அவனிடம் ஆறுதலாகப் பேச அவனோ ஏதோ யோசித்தவன் போல ''பரவாயில்ல.. கொடு..! கொடு'' என்று அவள் முகத்தையே வெறித்தபடி டம்ளரை வாங்கப் போனான்.

அவனுடைய நடவடிக்கை விசித்திரமாகப்பட, லேசான சிரிப்புடன், ''என்ன கனவு கண்டதுல ஆளே மாறிட்டீங்களா.. நல்லா கத்துனீங்க. இருங்க வேற கொண்டாறேன்'', என்றபடி நகர்ந்தாள். மனைவி சென்றதையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் மூர்த்தி. அப்பாடா நல்லவேளை கனவு என்பது போல விழித்தான்.

● **துரை. சண்முகம்**

# பரகாலஜீயர் மடத்தில் பாலியல் வக்கிரங்கள்!

தில்லைக் கோவிலை அரசு மேற்கொண்டதை அடுத்து அதிர்ச்சியடைந்த இந்து மதவெறி அமைப்புக்கள் அரசு நிர்வாகத்தால் அந்தக் கோவில் சீரழியும் என அரற்றினார்கள். அதையே தினமணி தலையங்கம் எழுதி வழிமொழிந்தது.

உண்மையில் தமிழ்நாட்டில் உள்ள கோவில்கள் பார்ப்பன - மேல்சாதியினரிடத்தில் இருந்தபோது எவ்வளவு கொள்ளையடித்திருக்கிறார்கள் என்பது நீதிக்கட்சி காலத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டு அரசுடைமையாக்கப்பட்டன. இதெல்லாம் பழங்கதையென்றால் இப்போதைய நிலவரம் என்ன?

சங்கரமடத்தில் கொலை முதல் காமக்களியாட்டம் வரை எல்லாம் நடந்திருக்கின்றன. திருவாடுதுறை ஆதீனத்தில் இளையவர் பெரியவரைத் தீர்த்துக்கட்ட போட்ட திட்டம், தில்லைக் கோவிலின் ஆண்டு வருமானம் வெறும் முப்பதாயிரம் ரூபாய் எனக் கணக்கு காட்டும் தீட்சிதர்களின் கொள்ளை.. இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

இந்தப் பட்டியலில் சமீபத்திய வரவு திருவரங்கத்தில் (ஸ்ரீரங்கம்) இருக்கும் பரகால ஜீயர் மடம். இந்த மடத்தில் நடக்கும் கூத்துக்கள் பற்றி குமுதம் ரிப்போர்ட்டர் 29.01.09 இதழில் அதன் நிருபர் ஷானு விரிவாகப் பதிவு செய்திருக்கின்றார்.

திருவரங்கத்தில் இது போன்று பல ஜீயர் மடங்கள் இருக்கின்றன. இவற்றுக்கு ஏராளமான சொத்துக்களும், அந்த சொத்துக்களை மடத்தின் அதிகாரபீடத்தில் உள்ளவர்கள் பினாமிகள் மூலம் தனியார் வசம் விற்பதும், அதில் ஏராளமான ஊழலும், இதற்கு உதவ மறுக்கும் சாமியார்களை ஊழல் செய்யும் சாமியார்கள் வெளியே தெரியாமல் கொலை செய்வதும் இங்கே சகஜம். வைணவத் தலமான திருவரங்கம் இந்திய அளவில் புகழ் பெற்றிருப்பதால் சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருவதும் அவர்கள் இந்த மடங்களுக்கு தான தர்மம் செய்வதும், அது பின்னர் ஸ்வாகா செய்யப்படுவதும் இங்கு வாடிக்கைதான்.


பெருமாளைப் பாடும் பாகவதர்கள் வந்தால் தங்குவதற்காக அந்தக்கால பணக்காரர்கள் சிலர் கட்டிய மடம்தான் இந்த பரகால ஜீயர் மடம். மடத்திற்கு திருச்சியைச் சுற்றி பல ஏக்கர் நிலங்கள் உள்ளன. இந்த வருமானத்தைக் கொண்டு கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு அன்னதானம் செய்வதும், மடத்தில் உள்ள சாமிக்கு பூஜை செய்வதும் நடைமுறையாம். இம்மடத்தின் சொத்து மதிப்பு அறுபது கோடிக்கு அதிகமாம்.

ஒரிசாவிலிருந்து வந்த பார்ப்பனரான பத்ரி நாரயண ராமானுஜதாசன் ஆரம்பத்தில் இம்மடத்திற்கு சமையல்காரராக வந்தவர். பின்னர் மடத்தின் இன்றைய ஜீயரான லக்ஷ்மண நாராயண ஜீயரின் பல வீனங்களை அறிந்து கொண்டு அதற்கான தேவைகளைச் செய்து கொடுத்து, அவரை மடக்கி 'பவர் ஆஃப் அட்டர்னி' வாங்கிக் கொண்டு அடுத்த ஜீயராகப் போகின்றவர் என்ற தகுதியில் சொத்துக்களை அனுபவித்து வருகிறார். சைவ ஆதீனங்களைப் போல வைணவ ஜீயர்கள் பிரம்மச்சாரிகள் கிடையாது. எல்லா ஜீயர்களும் பேஷாக ஒன்றுக்கு இரண்டாகக்கூட திருமணம் செய்து கொண்டு பிள்ளை குட்டிகளைப் பெற்றெடுத்து சுபமாக வாழ்க்கை நடத்தலாம். இது ரோமன் கத்தோலிக்க பாதிரியார்கள் திருமணம் செய்யமாட்டார்கள், புராட்டஸ்டண்டு பாதிரியார்கள் திருமணம் செய்யலாம் என்பதோடு ஒப்பிடத்தக்கது.

மற்றபடி பாதிரியார்களும், ஆதீனங்களும் தத்தமது பாலியல் தேவைகளைக் கள்ளத்தனமாக அனுபவிப்பது வேறு விசயம். ஆனால் ஜீயர்களுக்கு இப்படி வசதி இருப்பதால் மடத்திற்கு வரும் பக்தைகளைப் பணத்தால், வசதியால் மடக்கிப் பெண்டாளுவது திருவரங்கத்துக்கே தெரிந்த விசயம். அப்படித்தான் திருச்செங்கோட்டைச் சேர்ந்த கல்லூரி மாணவியான செல்வி என்ற பெண் தன் தோழியுடன் இந்த மடத்திற்கு வந்தார். எப்படியோ அந்தப் பெண்ணை வசியம் செய்து கொண்ட பத்ரி அவளது பெற்றோருக்கு தெரியாமல் மறைத்தும் வைத்திருக்கின்றார். இத்தனைக்கும் இந்த பத்ரிக்கு ஒரிசாவைச் சேர்ந்த கோதாராணி என்ற மனைவியும் உண்டு.

ஆனால் நாளொன்றுக்கு ஒரு மாது என்று அனுபவிக்கும் வசதி கொண்ட பத்ரி மனைவியை எல்லாம் ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. 83 வயதான ஜீயரும், கோதாராணியும் அங்கே ஆயுள் கைதிகளைப் போல காலந்தள்ளுகிறார்கள். அறுபது கோடி சொத்து என்பதால் பத்ரிக்கு அதிகாரிகள், அரசியல்வாதிகள் என எல்லா மட்டங்களிலும் செல்வாக்கு உண்டு.

இந்நிலையில் செல்வியின் பெற்றோர் தமது மகள் காணாமல் போனது குறித்தும், அவள் பத்ரியின் கட்டுப்பாட்டில் இருப்பதை வைத்தும் திருவரங்கம் காவல் நிலையத்தில் அழுதவாறே புகார் கொடுத்தனர். அதனால் செல்வியின் பெற்றோருடன் அந்த மடத்திற்கு சென்ற போலீசாரை பத்ரி திமிருடன் எதிர்த்தார். இது இந்துத் துறவியின் மேல் தொடுக்கப்பட்ட தாக்குதல், இந்துப் பீடத்தின் மீது தாக்குதல், இந்து மதம், அதன் சம்பிரதாயங்கள் மீது தாக்குதல் எனச் சாமியாடியிருக்கின்றார். உயர்மட்ட அதிகாரிகளுக்கும் போன் போட்டு இந்தியிலும், ஆங்கிலத்திலும் புகார் செய்திருக்கின்றார்.



ஜீயரை வைகுண்டம் அனுப்பிவிட்டு 'கோபிய'ரோடு மடத்தை அனுபவிக்கும் பத்ரி.

ஈழத்தின் மீதான இந்தியாவின்
மேலாதிக்கப் போருக்கு
பதிலடி கொடுப்போம்!
தேர்தலைப் புறக்கணிப்போம்!

ஈழத்தமிழ் மக்களின்
குலையறுக்கும் காங்கிரசு - தி.மு.க...
தலையறுக்கும் பா.ஜ.க. - அ.தி.மு.க...

ஈழத்தமிழர் பிணத்தைக் காட்டி
பதவி வேட்டையாடும்
பச்சோந்திகளுக்குப்
பாடம் புகட்டுவோம்!

போலி ஜனநாயகத்
தேர்தலைப் புறக்கணிப்போம்!
புதிய ஜனநாயகப் புரட்சிக்கு
அணிதிரள்வோம்!

# மே 1
2009

## பேரணி
## பொதுக்கூட்டம்
திருவள்ளுவர் திடல், தஞ்சை

**மக்கள் கலை இலக்கியக் கழகம்**
**விவசாயிகள் விடுதலை முன்னணி**
**புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி**
**புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி**
**பெண்கள் விடுதலை முன்னணி**

இதனால் பதறிய போலீசு அவரிடம் பக்குவமாக எடுத்துச் சொல்லி செல்வியை மீட்டு வந்தனர். செல்வியோ தான் மேஜர் என்றும், தான் பத்ரி சாமியாருடன்தான் வாழப் போவதாகவும் பேச, செல்வியின் தந்தை வயது கொண்ட பத்ரியோ, சட்டப்படி தான் செல்வியைத் திருமணம் செய்வதில் என்ன தவறு எனப் போலீசிடம் சட்டம் பேசியிருக்கின்றார். எனவே இந்தப் பிரச்சினையைப் போலீசார் திருவரங்கம் மகளிர் காவல் நிலையத்திற்கு தள்ளி விட்டனர். அதன்பிறகு அங்கு நடந்த பஞ்சாயத்தில் செல்வி கவுன்சிலிங் செய்யப்பட்டு பெற்றோருடன் அனுப்பப்பட்டார்.

ஒரு செல்வி போனால் என்ன இன்னும் ஓராயிரம் செல்விகள் கிடைப்பார்கள் என்பதனாலோ என்னவோ பத்ரி அலட்டிக் கொள்ளாமல் மடத்திற்கு திரும்பினார். இவ்வளவுக்கும் இந்தத் திமிரெடுத்த ஒரியாப் பார்ப்பானுக்கு பிளட் கேன்சராம். அதனால் செல்வி கோவிலுக்குச் சென்று அங்கே படுத்துக் கிடக்கும் பெருமாளிடம் தன் வாழ்க்கையில் பாதியைப் பத்ரிக்கு கொடுக்குமாறு வேண்டிக்கொள்ள அதைப் பெருமாளும் அங்கீகரித்து விட்டதாகவும் இந்தப் பத்ரி காவல்நிலையத்தில் பேசியிருக்கிறான் என்றால் என்னத்தைச் சொல்ல?

தற்போது இந்த மடத்தின் தொண்டுக்கிழமான லக்ஷ்மண நாராயண ஜீயரைக் காணவில்லையாம். எனவே அடுத்த ஜீயர் நான்தான் என பத்ரி தன்னைத் தானே நியமித்துக் கொண்டார். உண்மையில் பெரிய ஜீயரைப் பத்ரி கொன்று விட்டதாகவும், அவரை அடுத்த ஜீயராக்க அனுமதிக்கக் கூடாது என்றும் ஒரு வைணவ ஐயங்கார் மதுரை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கிறார். மடத்தின் அதிபர் பதவியைக் கைப்பற்றுவதில் இந்த ஆன்மீகவாதிகள் கொலை வரைக்கும் போவார்கள் என்பது இங்கேயும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

**திருவரங்கத்தானைப் பார்ப்பதற்கு பாரததேசம் முழுவதிலுமிருந்து வரும் பக்தர்களுக்கு இந்த ஜீயர்களின் உண்மைக் கதைகளை முத்து காமிக்ஸ் போல படக்கதையாகப் பல்வேறு மொழிகளில் வெளியிட்டால் அது நிச்சயம் இந்துமதத்திற்கு செய்யப்படும் பேருதவியாக இருக்குமே!**

இரத்தப் புற்றுநோயினால் சாகப்போகின்ற பார்ப்பன ஐயங்கார் ஜீயருக்கே இவ்வளவு கொழுப்பு இருக்கின்றது எனில் நோயில்லாமல் ஆரோக்கியமாக இருக்கும் ஜீயர்களை நினைத்தால் திகிலாக உள்ளது. ஒரு தில்லைக் கோவிலை அரசுடைமையாக்கியதைப் போல எல்லா ஜீயர், ஆதீனங்களையும் அரசு கைப்பற்றி மடத்தலைவர்களுக்கு மடத்திலேயே ஏதாவது எடுபிடி வேலைகள் கொடுப்பதுதான் தமிழ்நாட்டு மக்களின் சொத்துக்களைக் காப்பாற்றுவதற்கு ஒரே வழி!

மற்றபடி பெண்டாளும் ஒரு ஃபிராடு சாமியாரைக் கைது செய்யப் போனால் அது இந்துமதத்திற்கு ஆபத்து வருகிறது, இந்துமத சம்பிரதாயங்களின் மீதான தாக்குதல் என்றால் இதைவிட இந்து மதத்தை நாம் கேவலப்படுத்தத் தேவையில்லை. திருவரங்கத்தானைப் பார்ப்பதற்கு பாரததேசம் முழுவதிலுமிருந்து வரும் பக்தர்களுக்கு இந்த ஜீயர்களின் உண்மைக் கதைகளை முத்து காமிக்ஸ் போல படக்கதையாகப் பல்வேறு மொழிகளில் வெளியிட்டால் அது நிச்சயம் இந்துமதத்திற்கு செய்யப்படும் பேருதவியாக இருக்குமே!

● இராசவேல்

# புரட்சிக்கு சேகுவேரா! பொறுக்கித் தின்ன ஜெயலலிதா!!

நாங்க சே குவேராவைச் சொன்னாலும்
ஜெயலலிதா பின்னால் நின்னாலும்
இலக்கு ஒண்ணுதான் தோழர்.

முதலாளித்துவப் போதையில்
மூழ்கிக் கிடக்கும் மக்களை
அந்தப் பாதையிலேயே போய்தான்
அப்படியே புடிக்கணும்!

தோழர்... மக்கள் இன்னும் தயாராக இல்லை
அப்புறம் பாருங்க... நேரா புரட்சிதான்!
அது வரைக்கும்?
போயசு தோட்டம்தான்!

கேட்டவர் அதிர்ச்சியடைய
'டோட்டலாய்' விளக்கினார் தோழர்:

யாருடைய காலில் விழுந்தாலும் – சி.பி.எம்.
தன் கொள்கையை மட்டும் இழக்காது.

மக்கள் விரோதிகள் எவரும் இனி
மார்க்சிஸ்டுகளை விலக்கி விட்டு
அரசியல் நடத்த முடியாது!

அந்தப் புரட்சித் தலைவியே தடுத்தாலும்
'அம்மா' சபதம் முடிக்காமல் 'பொலிட் பீரோ' அடங்காது.
அப்புறம் எப்போது புரட்சி?

அது இருக்கட்டும் தோழரே,
சி.பி.எம். வரலாற்று ஸ்டேட்டஜியே வேற:

அன்று நேருவை அடையாளம் கண்டோம்
அவரிடம் சோசலிச வாடையை வளர்த்தோம்.

காங்கிரசுக்கு உள்ளே இருந்தே
முற்போக்கு சக்திகளை மோப்பம் பிடித்தோம்.
அப்படியே படிப்படியாக தனிக்கடையை விரிச்சோம்.

அப்புறமா... கேரளா, திரிபுரா, மேற்கு வங்கம்னு
ஆட்சியைப் பிடிச்சோம்.
அடுத்தது புரட்சி?

பின்னே ஆயுதம், வன்முறை இல்லாமல்
அனைவருமே சமமாகி சோசலிசம் படைக்க
நம்ம நம்பூதிரிபாடு ஆட்சியிலதான்
நாட்டிலேயே முதன்முதலா லாட்டரி சீட்டு அடிச்சோம்!

அல்லாவை வென்றெடுத்து
மத நல்லிணக்கம் நிலைநாட்ட
முசுலீம் லீக் கூட்டணி முடிச்சோம்

இந்துக்களிடமும் வர்க்கத் தீயை மூட்டிவிட
சபரிமலையில் மகரஜோதி பிடிச்சோம்!
காசு சேர்த்து நிலத்தை வாங்கி
பண்ணையார்கள் ஆதிக்கம் ஒழிச்சோம்

போர்க்குணத்துடன் போலீசை பயிற்றுவித்து
போய்... நக்சல்பாரிகளைக் கடிச்சோம்...

இப்படி... கச்சிதமாக கம்யூனிசத்தை முடிச்சோம்!
சரி புரட்சி எப்போது?

அட! டாடாவையே வென்றெடுத்தோம்
நந்திகிராமத்தில் நம்ம கட்டுப்பாட்டில் நுழைச்சோம்!
பாட்டாளிவர்க்க ஒற்றுமையைக் காக்க
விவசாயிகள் மண்டையை உடைச்சோம்.

பெண்களென்னும் பேதம் பார்க்காமல்
புடவையைப் பிடித்து கிழிச்சோம்.

வர்க்கப் பகைமையை ஒழிக்கத்தான்
சிங்கூர் நந்திகிராமில்
விவசாயி, தொழிலாளி வர்க்கத்தையே ஒழிச்சோம்!

இதுவா புரட்சி!
இது மட்டுமா! சாதி ஆதிக்கத்தை ஒழிக்க
உத்தபுரம் சுவரை நாங்கதான் இடிச்சோம்.
சிறுதாவூர் தலித் நில பிரச்சனைக்கும்
நாங்கதான் கொடி பிடிச்சோம்
இப்ப, செயல்தந்திர அரசியல்படி
அம்மா தோட்டத்திலேயே அந்தப் பிரச்சனையைப்
புதைச்சோம்.

நாங்க சே குவேராவைச் சொன்னாலும், ஜெயலலிதா பின்னால் நின்னாலும், இலக்கு ஒண்ணுதான் தோழர். முதலாளித்துவப் போதையில் மூழ்கிக் கிடக்கும் மக்களை அந்தப் பாதையிலேயே போய்தான் அப்படியே புடிக்கணும்!




போர் என்றால் நாலுபேர்
சாகத்தான் செய்வார்கள் என்று
இழவெடுத்த புரட்சித்தலைவி – இப்போது
போர்நிறுத்தம் வேண்டுமென்று
உண்ணாவிரதம் இருந்தது கண்டு
உண்டியலுக்கு வெளியே காணிக்கையாய் கிடந்தோம்!

''ஊரை அடித்து உலையில் போட்ட பானையோ!–
இன்னும்
யாரை மிதிக்கக் காத்திருக்கும் யானையோ'' என்று
அம்பிகையைப் பார்த்தவுடன் அந்தக்கால நினைவு
வந்தபோதும்,
பாதம் பணிந்த ஓ. பன்னீரும், பஜனை குழுவோரும்
பசியெடுத்த அம்மாவின் பக்கத்தில் நில்லாமல்
ஒரு காதம் விலகி வேண்டி நின்ற போதும்.

ஈழத்தமிழருக்காக ஈரம் கசிந்து
ஓதம் காத்த அந்தச் சுவரோரம்
அஞ்சாமல் ஒதுங்கிய எங்கள் போர்த்தந்திரம் சும்மாவா?

இதிலென்ன புரட்சி?

சமரச சுத்த சன்மார்க்க சபை கலைந்து – எங்கள்
சமரச சித்தாந்த சன்னிதியின் தீக்கதிரில் நாக்குழறி
எச்சு ஊறி எங்கள் எச்சூரி பின்னால் திரளுகையில்
என்ன ஒரு கேள்வி இது!
எத்தனை முறைதான் ஓதுவது!

சவுக்கடியும், சாணிப்பாலும் கொடுத்து
கீழத்தஞ்சையில் கம்யூனிஸ்டு கட்சியை
ஒழிக்கப் பார்த்தான் காங்கிரசு! கடைசியில் என்னாச்சு?
நம்ம துணையில்லாமல்
அவனால் நாடாள முடிந்ததா?

நள்ளிரவில் எழுப்பி விட்டு
நம் அரசு ஊழியர் வர்க்கத்தை
சிறையில் தள்ளினாளே ஜெயலலிதா
இப்போது என்ன ஆச்சு?

வலது, இடதாக தா. பாண்டியனையும், வரதராசனையும்
ஜெயலலிதா வளைத்துப் பிடிப்பதைப் பார்த்து
தோட்டத்து சசிகலாவே வாட்டத்தில் பொருமுகிறாள்.

நாம இல்லாமல்
யாராவது இனி அரசியல் நடத்த முடியுமா?

போதும்... எப்போதுதான் புரட்சி?
வந்தது கோபம் தோழருக்கு

அட! என்னங்க
இவ்வளவு தூரம் விவரம் சொல்கிறேன்
இன்னும் விளங்காமல்
எங்களிடம் வந்து புரட்சி, புரட்சின்னா...?
சுத்த... புரியாத ஆளா நீங்கள்!?

— துரை. சண்முகம்

# தீட்சிதப் பார்ப்பனர்களின் திமிரை அடக்கிய தில்லைப் போராட்டம்!

***பிப்ரவரி 25-ஆம் தேதி சிதம்பரத்தில் நடந்த தில்லைப் போராட்டத்தின் வெற்றிப் பொதுக்கூட்டத்தில் தோழர் மருதையன் ஆற்றிய உரை இங்கே சுருக்கி வெளியிடப்படுகிறது.***

எல்லாம் வல்ல தில்லை நடராசப் பெருமான் எம் கனவில் வந்து ''என் அடியான், ஆறுமுகசாமியை திருச்சிற்றம்பல மேடையேற்றித் திருவாசகம் பாடச் செய்'' என்று ஆணையிட்டார் பாட வைத்தோம். பிறகு, ''தீட்சிதர்களின் கோரப் பிடியிலிருந்து என்னை விடுவிக்க ஒரு வழக்குப் போடச் செய்'' என்றார். போட வைத்தோம். தன்னை விடுவிக்கச் சொன்னார், விடுவித்து விட்டோம்.

நாத்திகனின் கனவில் கடவுள் எப்படி வர முடியும் என்கிற கேள்வி நம்மில் பலருக்கு இருக்கலாம். கனவு வரையறையற்றது. ஜெயலலிதாவின் கனவில் பிரதமர் நாற்காலி வந்து போகலாமென்றால் என் கனவில் தில்லை நடராசன் வரக் கூடாதா?

''நம்பிக்கை உள்ளவனுக்குத்தானே நடராசன், உன் கனவிலே எப்படி நடராசன் வர முடியும்?'' என்று தீட்சிதன் கேட்கலாம். நான் நம்பிக்கையில்லாதவன் என்பது வேறு பிரச்சினை. நடராசன் நினைத்திருக்கிறார் நாங்கள் நம்பத்தக்கவர்கள் என்று. ஆறுமுகசாமி கூட எங்களை நம்பியிருக்கிறார். அதற்கென்ன செய்ய முடியும்?

கடந்த வெள்ளிக்கிழமை சுப்பிரமணியசாமியை இங்கே கொண்டு வந்து, விசேட பூஜை நடத்தி, முகமெல்லாம் பல்லாக அவரை ஐகோர்ட்டுக்கு அனுப்பி வைத்தனர் தீட்சிதர்கள். ''அனுப்பாதே சாமியை, அவனுக்கு முட்டையடி காத்திருக்கிறது'' என்று உன் சாமி உன் கனவில் வந்து சொல்லவில்லையே. உனக்கு இறைவன் மேல் நம்பிக்கை இருந்தால் அந்த சாமியிடமல்லவா போயிருக்க வேண்டும். ஏன் சுப்பிரமணியசாமியிடம் போகிறாய்? ஏன் போயஸ்தோட்டத்து மாமியிடம் போகிறாய்?

ஊரைக்கூட்டி உண்ணாவிரதம் நடத்துகிறார்கள். யாரெல்லாம் இக்கோயிலில் திருடித் தின்றிருக்கின்றானோ, எவனெல்லாம் இதில் ஆதாயம் அடைந்திருக்கிறானோ, அவர்களெல்லாம் உண்ணாவிரதப் பந்தலிலே இருந்தார்கள். தீட்சிதர்கள் 5,6 மொட்டை நோட்டீசும் அடித்திருக்கிறார்கள். எல்லா நோட்டீசிலும் இருக்கும் ஒரு முக்கிய விசயம், ''அறநிலையத்துறை கோயிலை எடுத்து விட்டது. இனிமேல் ஆலயத்தில் வழிபாடு ஒழுங்காக நடக்காது. நடராசப் பெருமானுக்கு சர்க்கரைப் பொங்கல்தான் பிடிக்கும். ஆனால் ஒரு ரூபாய் அரிசியில் தாளித்துக் காட்டி விடுவார்கள்'' - அறநிலையத்துறை எடுத்தால் நடராசப் பெருமானுக்கு கஷ்டமாம்.

**தேசத்தின் புனிதம், கோயிலின் புனிதம், நீதிமன்றத்தின் புனிதம் இவை ஒவ்வொன்றுக்குப் பின்னாலும் தெளிவான வர்க்கநலன் இருக்கின்றது. தீட்சிதன் அதைத் தெளிவாகச் சொல்லிவிட்டான். ''என்னைச் செருப்பால் அடித்திருக்கலாம், வயிற்றில் அடித்து விட்டீர்களே'' என்று.**

அடுத்த கஷ்டம் பக்தர்களுக்காம். நீங்களெல்லாம் நினைத்தபடி சுதந்திரமாக வந்து சாமி கும்பிடுவீர்கள். இனி கியூவில் நின்று கும்பிட வேண்டும். என்கிறார்கள். கியூவில் நின்றால் என்ன நட்டம்? தீட்சிதர்கள் என்ன சொல்கிறார்கள்? சில்லறை இருந்தாலும் நீ முதலில் பார்க்க முடியாது. இப்போது 500, 1000-த்துக்கு நடக்கும் ஸ்பெசல் தரிசனம், 5000, 10,000 கொடுத்தால் கருவறைக்குள்ளேயே கொண்டு போய் காட்டுவது போன்ற சிறப்புச் சலுகைகள் தள்ளுபடிகள் எதுவும் இனி நடக்காது. அதுதான் பிரச்சினை.

இவர்கள் போட்டிருக்கும் நோட்டீஸ் எதிலும் ''கோயிலை அரசு எடுத்ததனால் தீட்சிதர்களாகிய எங்களுக்கு நட்டம்'' என்று ஒரு வரி கூட இல்லை. நோட்டீசில் கடவுளுக்கு ஆபத்து, பக்தனுக்கு பாதிப்பு என்று பேசுபவன், கோர்ட்டுக்கு வந்து 'எனக்கு ஆபத்து' என்று பேசுகிறான். அறநிலையத்துறை எடுத்தனால் என்ன ஆகிவிட்டது. இந்த 40 ஏக்கர் கோயிலை இடித்துவிட்டு பொதுக்கழிப்பிடமா கட்டி விட்டான்? உண்டியலை வைத்ததுதான் பிரச்சினை. அப்படியே பதறித் துடித்துப் போனார்கள் தீட்சிதர்கள். தீட்சிதர்களின் வக்கீல் கேட்கிறார். உண்டியல் வைக்க வேண்டுமென்று கோர்ட் ஆர்டர் இருக்கிறதா? விட்டால் உண்டியலுக்குப் பூட்டு போடவேண்டும் என்று ஆர்டர் உள்ளதா என்று கூட கேட்பார்கள்.

ஒரு தீட்சிதர் சொன்னாராம் எங்கள் தோழரிடம், ''எங்க மேல ஏதாவது கோபமிருந்தால் செருப்பால் அடித்திருக்கலாம். இப்படி வயித்துல அடிச்சுட்டீங்களே'' என்று.

இதுதான் உண்மை. வயிற்றில்தான் இருக்கிறது ஆன்மீகம். ஆன்மா மனதில் இருக்கிறது. அங்கே இருக்கிறது இங்கே இருக்கிறது என்று எவ்வளவு பீலா விடுகிறார்கள். அதை வைத்து எத்தனை சாமியார்கள், புத்தகங்கள், டிவி சானல்கள்.. கடைசியில் பார்த்தால் ஆன்மா வயிற்றில் இருக்கிறது.

ஆக ஆன்மீகம் என்பது ஒரு பிழைப்பு. வயிற்றுக்குத்தான் இந்தக் கோயில்.

ஆனால் எங்களுக்கு ஆன்மா வயிற்றில் இல்லை. அப்படி இருந்தால் இப்படி பட்டினியாக இரவு 11 மணிக்கு கூட்டம் கேட்கத் தேவையில்லை. சொந்தக் காசை செலவு செய்து கொண்டு திருநெல்வேலியிலிருந்தும் தூத்துக்குடியிலிருந்தும் கூட்டம் கேட்பதற்கு வரத் தேவை

யில்லை. சிவனடியாரோடு சேர்ந்து அடி பட்டு கடலூர் மத்திய சிறைக்கு செல்ல வும் தேவையில்லை.

எதாவது சேய்து கோயிலைத் திரும்பப் பெற்றுவிட வேண்டும் என்ற ஆத்திரம் உள்ளதே தவிர அதை உறுதி செய்யும் ஆதாரம் எதுவும் அவர்களிடம் இல்லை. அதனால்தான் நீதிமன்றத்தில் 'இந்தக் கோயில் எங்களுடையதில்லை என்று நீ நிரூபித்துக் காட்டு' என்று நம்மி டம் கேட்கிறான். இந்தக் கேலிக்கூத்துக்கு அரசாங்கமும் சேர்ந்து வாதம் பண்ணிக் கொண்டிருக்கிறது. இப்படி 20 ஆண்டு களாய்த் தூங்கும் வழக்கைத் தட்டி எழுப் பியிருக்கிறோம்.

கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். அரசாங்கம் எடுத்த எதுவுமே உருப்பட் டதாக வரலாறு கிடையாது என்று தின மணி தலையங்கம் எழுதுகிறது. தனியார் மயத்தை ஆன்மீகத்துக்குப் பொருத்தி எழுதுவது என்பது இதுதான். தனியார் துறை என்ன செய்யும் என்று அமெரிக் காவில் தெரிந்து விட்டது. நாடே திவா லாகி விட்டது.

இனிமேல் கோயில் பணிகள் டெண் டர் விடப்பட்டு அமைச்சர், எம்.எல்.ஏ, காண்டிராக்டர், உள்ளூர் குட்டி அரசியல் வாதி எல்லோரும் தின்றது போக மீதி யில்தான் வேலை நடக்கும் என்று தீட்சி தர்கள் நோட்டீஸ் அடிக்கிறார்கள். இது உண்மை என்றே கொண்டாலும் அவன் சொல்வது என்ன? இப்படி 4 பேர் தின் னக் கூடாது. நூறு சதவீதமும் நானே தின்ன வேண்டும் என்கிறார்கள்.

இது மன்னன் இரண்ய வர்மன் கட்டிய கோயிலாம். அது அவன் உழைத்து சேர்த்த பணமா? மன்னன் அரசுத் துறையா, தனியார் துறையா? கோயி லுக்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் சொந்தமென்றால் அது யார் அப்பன் வீட்டு சொத்து? மக்களுடைய விருப்ப மில்லாமல் கசையடியால், வாள்முறை யில் மிரட்டி அபகரிக்கப்பட்ட பணத் தால் மிரட்டி அபகரிக்கப்பட்ட தானியத் தால் எழுப்பப்பட்டவைதான் எல்லாக் கோயில்களும். இதன் மீது உழைக்கும் மக்கள் உரிமை கொண்டாட வேண்டும்.

உனக்கு என்ன வேலை தெரியும் மணி ஆட்டுவதைத் தவிர. உனக்கு இந்தக் கோயிலிலே பாரம்பரிய உரிமை உண்டென்றால் ஒரு வாதத்திற்காக அதை ஒத்துக் கொள்வோம். இந்தக் கோயி லுக்கு விறகு கொண்டு வந்தவன், பாலும் மோரும் கொண்டு வந்தவன், பூக்களைக் கொண்டு வந்தவன், கோயிலைச் சுத்தம் செய்தவன், பெரிய மணியை அடித்தவன் இவர்களுக்கெல்லாம் கோயிலில் பாரம் பரிய உரிமை கிடையாதா? தீட்சிதனுக்கு மட்டும்தானா?

இந்தப் பாரம்பரிய உரிமை என்ற வாதத்திற்கு சட்டரீதியாக மட்டும பதில் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. ஏதோ ஒரு ஆதாரத்தைக் காட்டிவிட்டால் கோயிலைக் கொடுத்துவிட வேண்டுமா? அப்படிப் பார்த்தால் தலைமுறை தலை முறையாக உழுது பயிரிடுபவனுக்கு நிலம் சொந்தமா இல்லையா? காமராசர் தப்பாக ஒன்றைச் சொன்னார். உழுபவ னுக்கு நிலம் சொந்தமென்றால் வெளுப் பவனுக்கு வேட்டி சொந்தமா என்றார். மணி ஆட்டுபவனுக்கு கோயில் சொந்த மென்றால் உழுபவனுக்கு ஏன் நிலம் சொந்தமாக இருக்கக் கூடாது என்று நாம் திருப்பிக் கேட்போம்.

சட்டம் மட்டுமல்ல, உழைக்கும் மக் களின் தரப்பில் நின்று கொண்டு இந்த நியாயத்தைப் பார்க்க வேண்டும்; பேச வேண்டும். ஏனென்றால் இந்த நீதிமன் றம் அவனுக்காக வேலை செய்வதற் கென்றே உருவாக்கப்பட்டது. அரசாங்க மும் அப்படித்தான். திமுக அரசு தமிழில் பாடவும் கோயிலை அரசுக் கட்டுப்பாட் டில் கொண்டு வரவும் ஆணை பிறப்பித் திருக்கிறது என்பது உண்மை. இந்தக் கதையில் மற்றொரு பாதி இருக்கிறது. இரண்டு காலும் இல்லாத ஒரு பிராணி யைத் தோளில் தூக்கிக் கொண்டு ஓடி நூறுமீட்டர் ஓட்டப்பந்தயத்தில் ஜெயிக்க வைப்பது போல இந்த அரசை ஜெயிக்க வைத்திருக்கிறோம்.

தீட்சிதர்களிடம் பணம் இருக்கலாம். பெரிய அதிகாரிகள் அவர்கள் கையில் இருக்கலாம். ஆனால் மக்கள் அவர்கள் பக்கம் இல்லை. அதனால்தான் சுனா சாமியிடமும், மாமியிடமும் போகிறார் கள். இவர்களெல்லாம் ஒரே சாதி என் பது ஒரு விசயம். இந்த இரண்டு பேரை யும் தேர்ந்தெடுத்ததற்கு முக்கியக் கார ணமும் உள்ளது. தொழிலில் தீட்சிதர் களுடன் போட்டியிடும் அளவுக்கு இவர் கள் சம தகுதி உடையவர்கள்.

டான்சி நில வழக்கின் முடிவு என்ன? நிலத்தை வாங்கியது தவறு. அதற்கு தண் டனை என்ன? அதைத் திருப்பிக் கொடுத் துவிடுவது. இதுதான் நடந்தது. அதே போல தீட்சிதர்களிடம் நகைக்களவு பற் றிக் கேட்டால், ''தோடு காணோமா, சங் கிலி காணோமா?.. சரி. வெச்சுட்டோம்'' என்கிறார்கள். எப்படிய்யா எடுக்கலாம்? என்று கேட்டால் 'அதான் வச்சிட்டோம்ல' என்பதுதான் பதில். ஜெயலலிதாவின் நியாயமும் தீட்சிதர் நியாயமும் எப்படிச் சரியாகச் சேருகிறது பாருங்கள்.




அடுத்தது சு.சாமி. அவர் யாரென் றால், தில்லானா மோகனாம்பாள் படத் தில் வைத்தி பாத்திரத்தில் அவர்தான் நடித்திருக்கிறார். அதுதான் அவர் தொழில்.

நீங்கள் செய்யும் செலவுகளுக்கு ஏது பணம் என்று ஒரு நிருபர் சு.சாமியைக் கேட்கிறார். ''ஒரு பிராமணன் யாரிடம் வேண்டுமானாலும் கை நீட்டிக் காசு வாங்கலாம். அதற்கு சாத்திரத்தில் இட மிருக்கிறது'' என்று பதில் சொல்கிறார் சு.சாமி. இவன் தீட்சிதனுக்கு வராமல் வேறு எவன் வருவான்?

இப்படி ஒரு முக்கூட்டு சேர்ந்திருக் கிறது. இந்தக் கூட்டணி இந்தப் பிரச்சி னையை ஒரு புதிய பரிமாணத்துக்கு கொண்டு சென்றிருக்கிறது.




இன்று 3 பிரச்சினைகள் பத்திரிகைகளிலே விவாதிக்கப்படுகின்றன. 1. தில்லை 2. ஈழம், அந்தப் படுகொலைக்கு இந்தியா துணைநிற்பது 3. பிப் 19 அன்று உயர்நீதி மன்றத்தில் போலீசு நடத்திய வெறியாட்டம்.

மேற்கூறிய மூன்று விசயங்களும் கூட ஒன்றோடொன்று தொடர்புள்ளவை. அந்தத் தொடர்பைப் புரிந்து கொள்வதன் மூலம்தான் இந்தப் பார்ப்பனக் கும்பலைப் பற்றி, அவர்கள் செல்வாக்கு செலுத்த முடிகின்ற இந்திய அரசைப் பற்றி, எந்தத் தரகு முதலாளிகளின் நலனுக்காக இந்த அரசு வேலை செய்கிறதோ அந்த அரசைப் பற்றி ஒருங்கிணைந்த முறையிலே நாம் புரிந்து கொள்ள முடியும்.

ஈழப்பிரச்சினைக்கும் தில்லைப் பிரச்சினைக்கும் பொதுவானது என்ன? ஈழத் தமிழ் மக்கள் மரபு வழிப்பட்ட தங்கள் தாயகத்தில் தாங்கள் வாழ அனுமதிக்கப்பட வேண்டும் என்று கோருகிறார்கள். விரும்பினால் தனி ஈழமாகப் பிரிந்து போகும் உரிமை வேண்டும் என்று கேட்கிறார்கள். இங்கே தில்லையிலே நமக்கு என்ன கோரிக்கை? இது தமிழ் மண்ணிலே கட்டப்பட்ட கோயில். இந்த நடராசப் பெருமானும் தீட்சிதனும் தின்கிற சோறு தமிழ் விவசாயிகள் உழைத்து வருகின்ற சோறு. எனவே இதனைத் தமிழ் மக்களின் உடைமையாக்க வேண்டும் என்று கோருகிறோம். இதுதான் ஒற்றுமை.

இவற்றுக்கு எதிராக அவர்கள் வைக்கின்ற வாதங்கள் என்ன? ''உன்னுடைய உரிமையெல்லாம் தூக்கி ஓரத்தில் வை. இது மரபுக்கு எதிரானது, வேதத்துக்கு எதிரானது, கோயிலை அரசு எடுப்பதும், தமிழில் பாடுவதும் மதத்துக்கு எதிரானது, மதப்புனிதத்துக்கு எதிரானது'' என்கிறார்கள்.

ஈழப்பிரச்சினையில் இலங்கை அரசும் பிரணாப் முகர்ஜியும் கூறுவது என்ன? அது இலங்கையின் ஒருமைப்பாடு குறித்த பிரச்சினை. அந்த நாட்டின் இறையாண்மை குறித்த பிரச்சினை. இறையாண்மை மிகவும் புனிதமானது. ஈழத்து மக்கள் அனைவரையும் உயிரோடு கொளுத்தினாலும் அதில் நாம் தலையிட முடியாது என்கிறார்கள். நீதிமன்றப் பிரச்சினையில் என்ன சொல்கிறார்கள்? புனிதமான இந்த நீதிமன்றத்திற்குள் புனிதமான நீதிபதிகளின் முன்னாலேயே முட்டை வீச்சா என்று நீதிமன்றப் புனிதத்தைக் கண்டு அப்படியே நடுங்குகிறார்கள்.

இவர்களுடைய புனிதத்தின் யோக்கியதை என்ன? கோயிலின் புனிதம், வேதாகமத்தின் புனிதத்தின் யோக்கியதை என்ன? அதைத் தமிழ் பாடச் செல்லும்போது கண்ணால் பார்த்தோம். நாம் ஆன்மீக சேவை செய்வதற்காக இருக்கிறோம். நாம் இப்படி காலித்தனம் செய்யக் கூடாது என்று அவன் நினைத்தானா? இவன் கையால் திருநீறு வாங்கினாலே பாவம் என்று தில்லைவாழ் மக்கள் நடுங்கும் அளவுக்கு இருக்கிறது தீட்சிதர்களின் புனிதம்.

நீதிமன்றத்தின் புனிதம் குறித்து நான் விளக்கத் தேவையில்லை. முட்டை வீசிவிட்டார்கள் வீசிவிட்டார்கள் என்கிறார்களே, நீதிமன்றத்தின் உள்ளே ரூபாய் நோட்டை வீசிக்கொண்டேயிருக்கிறார்கள், நீதிபதிக்கு கீழே வாங்குகிறார்கள், உள்ளே, வெளியே எங்கும் வாங்குகிறார்கள்; நீதிபதி வாங்குகிறான். 'வாங்கிறியே சொத்துக் கணக்கு கொடு' என்று கேட்டால் அதைத் தருவதில்லை. கேட்டால் புனிதமாம். இந்த யோக்கிய சிகாமணிகள் இருக்கின்ற இடம் நீதியின் கருவறையாம், புனிதமாம். அங்கே முட்டை அடித்து புனிதத்தைக் கெடுத்து விட்டார்களாம்.

இறையாண்மை புனிதம் என்கிறார் பிரணாப். 1983-லே ஈழத்து இளைஞர்களுக்கு ஆயுதமும் பயிற்சியும் அளித்து அனுப்பி வைத்தது நீதானே? அன்று இலங்கைக்கு இறையாண்மை கிடையாதா? ராஜீவ் ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள் என்ன சொல்கின்றன? திரிகோணமலையிலே வேறு யாருக்கும் துறைமுகத்தைக் கொடுக்கக்கூடாது, எனக்குத் தெரியாமல் யாரிடமும் ஆயுதம் வாங்கக் கூடாது. என்னுடைய அனுமதி இல்லாமல் உன் கடற்கரையிலே கப்பல் நிறுத்தக் கூடாது. இவை அனைத்துக்கும் சிகரம் வைத்தாற் போன்று இந்தப் படுகொலைக்கு தேவையான ஆயுதங்களை, இராணுவ தொழில்நுட்ப வல்லுநர்களை சப்ளை செய்து கொண்டு, அந்த வகையிலே அந்த நாட்டின் உள் விவகாரத்தில் தலையிட்டுக் கொண்டு, ''கொலையை நிறுத்து தமிழ் மக்களின் ஜனநாயக உரிமையை அங்கீகரி'' என்று நாம் கேட்டால் ''அது இறையாண்மையில் தலையிடுவது அதை நாங்கள் செய்யவே முடியாது'' என்கிறான்.

தேசத்தின் புனிதம், கோயிலின் புனிதம், நீதிமன்றத்தின் புனிதம் இவை ஒவ்வொன்றுக்குப் பின்னாலும் தெளிவான

**இன்றைக்கு நீதிமன்றத்திலே நாம் பெற்றிருக்கும் வெற்றி என்பது வெறும் வாதத்திறமையினாலே பெற்றிருக்கும் வெற்றி அல்ல. மாறாக, ''சமஸ்கிருதம் புனிதம் அல்ல, மந்திரம் புனிதம் அல்ல, தீட்சிதன் புனிதம் அல்ல, இது அவன் கோயில் அல்ல'' என்று மக்கள் மத்தியிலே நாங்கள் நிலை நாட்டியதனாலே கிடைத்த வெற்றி.**

வர்க்கநலன் இருக்கின்றது. தீட்சிதன் அதைத் தெளிவாகச் சொல்லிவிட்டான். ''என்னைச் செருப்பால் அடித்திருக்க லாம், வயிற்றில் அடித்து விட்டீர்களே'' என்று.

ஈழத்திலே இந்தப் படுகொலைக்கு இந்திய இராணுவம் துணைநிற்கக் கார ணம் என்ன? காரணம் டாடாவுக்கு அங்கே தேயிலைத் தோட்டம் இருக்கி றது, அம்பானிக்கு எண்ணெய், மகிந்தி ராவுக்கு கார் சந்தை, பிர்லாவுக்கு சிமெண்ட் ஆலை, ஏர்டெல் முதலாளி மித்தல் ஒரு மாதம் முன்னர்தான் தொலைபேசி சேவை தொடங்கியிருக்கி றான், இந்திய அரசுக்கு இன்னும் ஏராள மாக அங்கே இருக்கிறது. உனக்கு அதெல்லாம் முக்கியம். இவர்களுடைய நலனுக்காக பெரும்பான்மை சிங்கள இனவெறி அரசின் தயவு தேவை - அது சிறுபான்மை தமிழர்களைப் படுகொலை செய்தாலும்.

இந்த நீதிமன்றத்திலே எவ்வளவோ கேவலங்கள் அரங்கேறியிருக்கின்றன. அதையெல்லாம் புனிதம் கெட்டுவிட்ட தென்று சொல்லவில்லை. முட்டை வீசி யதைச் சொல்கிறார்கள். இந்துவும் தின மணியும் தலையங்கம் எழுதுகின்றன. நீதி மன்றத்தில் நடந்த போலீசு வெறியாட்டத் தினால் புனிதம் கெட்டுவிட்டது என்று யாரும் பேசுவதில்லை. சுனா சாமி முகத் தில் முட்டை வழிந்தால் புனிதம் கெட்டு விட்டது. நீதிபதியின் முகத்திலும், வக்கீல்களின் முகத்திலும் ரத்தும் வழிந் தால் அது சட்டம் ஒழுங்குப் பிரச்சினை.

சு.சாமியின் கருத்தை கருத்தால் சந் திக்க வேண்டுமாம். முட்டையால் சந்திக் கக் கூடாதாம். ஈழத்தமிழ் மக்கள், எதற் காகப் போராடுகிறார்கள்? இது எங்கள் தாயகம். இங்கே நாங்கள் சிங்களர்களு டன் சேர்ந்திருப்பதா தனிநாடாகப் பிரிந்து போவதா என்பதை ஒரு இனம் என்ற முறையில் நாங்கள் தீர்மானிப் போம் என்கிறார்கள். இது அவர்களின் வாழ்வுரிமை, கருத்துரிமை. ''பெரும் பான்மைத் தமிழர்கள் என் பக்கம்தான் இருக்கிறார்கள். புலிகள் பக்கம் இல்லை'' என்கிறான் ராஜபக்சே. சரி. ஒரு வாக்கெ டுப்பு நடத்து. தமிழ் மக்கள் முடிவு செய் யட்டும். ஆனால் ஈழமக்கள் தம் கருத்தை தெரிவிக்க முடியாத வண்ணம் - அவர் கள் மீது முட்டை வீசப்படவில்லை - குண்டு வீசப்படுகிறது.

அன்று தமிழ் பாடச் சென்ற ஆறுமுக சாமி கையொடித்து வீழ்த்தப்பட்டபோது பறிக்கப்பட்டது அவரது வழிபாட்டு ரிமை. இதுவும் அரசியல் சட்டம் உத்திர




வாதம் செய்திருக்கும் அடிப்படை உரிமைதானே! எந்தப் பத்திரிகை நாய் கள் தலையங்கம் எழுதியிருக்கிறார்கள். அடிப்படை உரிமை, புனிதம், இறை யாண்மை என்பதெல்லாம் வெறும் பித்த லாட்டம். இதையெல்லாம் நாம் புரிந்து கொள்ளாதவரையில்தான் அவர்கள் ஆட முடியும்.

இன்றைக்கு நீதிமன்றத்திலே நாம் பெற்றிருக்கும் வெற்றி என்பது வெறும் வாதத்திறமையினாலே பெற்றிருக்கும் வெற்றி அல்ல. மாறாக, ''சமஸ்கிருதம் புனிதம் அல்ல, மந்திரம் புனிதம் அல்ல, தீட்சிதன் புனிதம் அல்ல, இது அவன் கோயில் அல்ல'' என்று மக்கள் மத்தி யிலே நாங்கள் நிலைநாட்டியதனாலே கிடைத்த வெற்றி. மக்கள் புரிந்து கொண்டு விட்டதனால்தான் தீட்சிதர் களை ஆதரிக்க யாருமில்லை. அரசாங் கமும் கோர்ட்டும்தான் இருக்கின்றன.


அரசாங்கம் இன்று போட்டிருக்கும் ஆணை ஒரு அரை ஆணை. தனியொரு அரசாணை மூலம் முழுமையாக இந்தக் கோயிலை அரசு தன் கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டும். தீட்சிதர்கள் மீதான கிரிமினல் புகார்கள் விசாரிக்கப் பட்டு அவர்கள் சிறை வைக்கப்படவேண் டும். நந்தன் நுழைந்த தெற்கு வாயிலைத் தகர்த்தெறிய வேண்டும்.

''அவர் தெற்கு வாயில் வழியாகத் தான் நுழைந்தாரா?'' என்று கேள்வி எழுப்பப்படுகிறது. தீட்சிதன் கைலாசத்தி லிருந்தான் வந்தான் என்றால் நந்தன் தெற் குவாயில் வழியாகத்தான் நுழைந்தான் என்று நாங்கள் நம்புகிறோம். இதை நிரூ பிக்கத் தேவையில்லை. அத்வானியே சொல்லியிருக்கிறார், ''இராமன் இங்கே பிறந்தார் என்பது எங்கள் நம்பிக்கை. அதைக் கோர்ட் தீர்மானிக்க முடியாது'' என்று. எந்த நம்பிக்கை பெரியது, பெரும் பான்மையின் நம்பிக்கையா, தீட்சினின் நம்பிக்கையா என்பதை நீதிமன்றம் முடிவு செய்யுமாறு நாங்கள் நிர்ப்பந்திப் போம். கண்ணில் விரல் விட்டு ஆட்டு வோம். நீ பேசும் இந்து ஒற்றுமையை இரண்டாகப் பிளந்து காட்டுவோம். அப் போது நீதிமன்றத்தைச் சொடக்கு போட்டு கூப்பிடுவோம். வாய்தா வாங்க மாட்டோம்.

அரசாங்கத்தை வைத்தே சுவரை இடிக்கச் செய்யலாம். ஆனால் இன்னாரு முறை இந்த அரசைச் சுமந்து கொண்டு ஓட எங்களால் முடியாது. அதே நேரத் தில் சுவரை என்றைக்கு அகற்றுவோம் என்பதை நானே சொல்லிவிடவும் முடி யாது. எப்படிச் சொல்ல முடியும்?

''என் அருமை அடியான், திருநா ளைப் போவான் நுழைந்த தெற்குத் திரு வாயிலை அடைத்து நந்தி போல் சுவரெ முப்பியிருக்கிறார்கள் இந்தத் தீட்சிதர்கள். தோழர்களே, அந்தச் சுவரை அகற்றுங் கள்!'' என்று தில்லை நடராசன் எம் கன வில் வந்து கூறக் கூடும். அய்யனின் ஆணையைத் தட்ட முடியாமல் நாங்க ளும் அப்பரின் உழவாரப்படையை, அதைவிடச் சற்று நீளமான ஒரு உழவா ரப்படையை, ஏந்த வேண்டியிருக்கும். உழவாரப்பணி உண்டா இல்லையா என் பதைத் தில்லைவாழ் அந்தணர்களும், அவர்களைக் கீறல் படாமல் பாதுகாக்க எண்ணும் இந்த அரசும் முடிவு செய்து கொள்ளட்டும். நாங்கள் தில்லை நடரா சன் திருவருளுக்குக் காத்திருக்கிறோம். திருச்சிற்றம்பலம். நன்றி.

● மருதையன்




# புனிதமும் வக்கிரமும்: திருச்சபை நாணயத்தின் இருபக்கங்கள்!

இந்தியாவின் கிறித்தவப் பாதிரியார்கள், கன்னியாஸ்திரிகள் எண்ணிக்கையில் அறுபது சதவீதத்தை அளிக்கும் கேரளாவில் அண்மையில் வெளிவந்த ஒரு புத்தகம் கிறித்தவ உலகில் ஒரு பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கின்றது. ''ஆமென் - ஒரு கன்னியாஸ்திரியின் தன் வரலாறு'' என்ற அந்த நூல், 33 ஆண்டுகள் கன்னியாஸ்திரியாக இருந்து பின்னர் சபையிலிருந்து விலகிய ஜெஸ்மி என்ற 53 வயது சகோதரியால் எழுதப்பட்டது.

காங்கரகேஷன் ஆஃப் மதர் ஆஃப் கார்மெல் எனும் கன்னியாஸ்திரி சபையில் சகோதரியாகப் பணியாற்றிய ஜெஸ்மி, ஆங்கில இலக்கியத்தில் முனைவர் பட்டம் பெற்று, கடைசியாக திருச்சூரில் இருக்கும் பிரபலமான விமலா கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றினார். 35 இலட்சம் உறுப்பினர்களுடன் இயங்கும் இந்தியாவின் மிகப்பெரிய, பணக்கார கத்தோலிக்க சர்ச்சான ஸிரோ மலபார் சர்ச்சால்தான் விமலா கல்லூரி நடத்தப்படுகின்றது. இச்சபையில் இருக்கும் முறைகேடுகளை எதிர்த்துக் குரல் கொடுத்ததால் ஜெஸ்மிக்கு பைத்தியகார பட்டம் சூட்டி தனிமைப்படுத்த நினைத்த தலைமைப் பாதிரியார்களின் சதியை முறியடிக்கும் வண்ணம் அவர் இந்த சுய வரலாற்று நூலை எழுதியிருக்கின்றார்.

இந்நூலில் சகோதரிகளிடம் நிலவும் ஓரினச்சேர்க்கை, முக்கியமாக தலைமைப் பொறுப்பிலிருக்கும் சகோதரிகள் புதிய இளைய சகோதரிகளைத் தமது ஓரினப் பாலியல் இச்சைக்கு மிரட்டிப் பணியவைப்பது, ஆண் பாதிரியார்களும் புதிய சகோதரிகளைத் தமது அதிகார வலிமையால் பாலியல் வன்முறை செய்வது, இவற்றை எதிர்த்து வரும் குரல்களை சர்ச்சின் கௌரவம்தான் முக்கியமானது என்று புறந்தள்ளுவது என அனைத்தையும், தன் சொந்த அனுவபங்களோடு ஜெஸ்மி பகிர்ந்து கொள்கிறார். மேலும் பண விசயங்களில் நடக்கும் முறைகேடுகளையும், ஊழல்களையும் சேர்த்தே அம்பலப்படுத்துகின்றார். பத்திரிகைகள் பலவும் இந்நூலில் உள்ள செக்ஸ் பிரச்சினைகளை மட்டும் செய்தியாக்கி இருக்கின்றன. வெளிவந்த ஒரே மாதத்தில் மூன்று பதிப்புக்களைக் கண்ட இந்நூல் கேரளத்தில் ஒரு பெரும் விவாதத்தைக் கிளப்பியிருக்கின்றது.

ஆனால் இந்த அதிர்ச்சி அலைக்கு முரணாக 2008 அக்டோபர் மாதம் கேரள கிறித்தவ உலகமே பெரும் கொண்டாட்டத்தில் மூழ்கியிருந்தது. காரணம் 1946-ஆம் ஆண்டு மரணமடைந்திருந்த அல்போன்சா என்ற கேரள கன்னியாஸ்திரிக்கு போப்பாண்டவர் புனிதர் என்ற பட்டத்தைக் கொடுத்ததுதான். வாட்டிகனில் வழங்கப்பட்ட இந்த பட்டமளிப்பு விழாவில் கேரளாவிலிருந்து பேராயர்கள், ஆயர்கள், பாதிரியார்கள், கன்னியாஸ்திரிகள், பக்தர்கள் எனப் பலரும் நூற்றுக்கணக்கில் கலந்து கொண்டனர். கேரள மார்க்சிஸ்டு அரசு தன்னை மதச்சார்பற்ற இடதுசாரி முன்னணி என அழைத்துக் கொள்ளும் அரசு இந்த விழாவிற்கென ஒரு அமைச்சரையே அனுப்பி வைத்ததென்றால் இதன் முக்கியத்துவத்தை அறியலாம். கேரளாவில் கிறித்தவ மக்களின் விகிதம் அதாவது ஓட்டு அதிகமென்பதுதான் மார்க்சிஸ்டுகளின் இந்த 'முற்போக்கு' நடவடிக்கை உணர்த்தும் செய்தி.



புனிதராக்கப்பட்ட அல்போன்சா

அல்போன்சாவின் கல்லறை இருக்கும் பரனங்கானம் என்ற ஊர் இன்று அகில இந்திய சுற்றுலாத்தலமாக மாறி விட்டது. கடவுளின் தேசமென்று அழைக்கப்படும் கேரளாவில் முதல் இந்தியக் கிறித்தவர் ஒருவருக்கு கிடைத்திருக்கும் புனிதர் பட்டம் கொண்டாடப்படுவது அதிசயமில்லை.

அல்போன்சா எனும் அந்த எளிய பெண்மணி 1910-இல் ஒரு சாதாரணக் குடும்பத்தில் பிறந்து கன்னியாஸ்திரியாக மாறி அதிகமும் கல்விப்பணி புரிந்து பின்னர் வெகுகாலம் நோய்வாய்ப்பட்டு 1946-இல் இறக்கின்றார். 1953-ஆம் ஆண்டு அல்போன்சாவை 'தேவனின் சேவகி' என்று வாட்டிகன் ஏற்கின்றது. கேரளாவில் அவரைப் புனிதராக்கும் முயற்சிகள் தொடங்குகின்றன. புனிதர் பட்டம் பெற வேண்டுமென்றால் அந்த நபர் இரண்டு அற்புதங்களை செய்திருக்க வேண்டுமாம். அப்படி அற்புதங்கள் செய்ததாக 1984-இல் போப் இரண்டாம் ஜான் பால் அறிவித்துவிட்டு 1986-ஆம் ஆண்டு கோட்டயத்திற்கு வந்த போது அல்போன்சாவை ஆசிர்வதிக்கப்பட்டவர் என அறிவிக்கின்றார். இறுதியில் 2008-இல் போப் பதினாறாம் பெனடிக்ட் அல்போன்சாவை புனிதர் என அறிவிக்கின்றார். இதுதான் ஒரு இந்தியர் முதன் முதலாகப் புனிதர் பட்டம் பெற்ற கதை.

இப்படி இந்தப் புனிதர் பட்டம் பெற வேண்டுமானால் சம்பந்தப்பட்ட சபையின் பிஷப், ஒரு கமிட்டி அமைத்து ஆய்வு செய்து பின்னர் மேல்கமிட்டி அதைப் புலனாய்வு செய்து அதன் பிறகு வாட்டிகன் சோதித்தறிந்து, இரண்டு அற்புதங்களைப் பற்றி ஒரு மருத்துவர் குழு ஆராய்ந்து உறுதி செய்து, இறுதியில் போப் முடிவெடுத்து அறிவிக்க வேண்டும். நமது நீதிமன்றங்களில் ஒரு சிவில் வழக்கு பத்தாண்டுகளாக இழுக்கப்படுவதற்கு ஒப்பானது இது என்றாலும், அந்த அளவுக்கு புனிதர் பட்டத்திற்கு

மவுசு இருக்கிறது என்பதால்தான் இந்த ஜோடனைகள்.

புனிதர் பட்டம் பெற்ற அல்போன்சாவும், திருச்சபையின் பாலியல் உள்ளிட்ட முறைகேடுகளை அம்பலப்படுத்திய ஜெஸ்மியும் ஸிரோ மலபார் சர்ச்சைச் சேர்ந்தவர்கள்தான். சென்ற ஆண்டு மகிழ்ச்சியில் திளைத்த இந்த சர்ச் இந்த ஆண்டு மருண்டு போயிருக்கின்றது. திருச்சபையின் செய்தித் தொடர்பாளர் அருட்தந்தை பால் தேலக்காட் கூட இந்தியா டுடே பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இந்தப் பாலியல் முறைகேடுகள் இருப்பதை ஒத்துக்கொண்டு, அதைச் சரி செய்ய முடியுமெனவும் கூறியிருக்கிறார். இதிலிருந்து திருச்சபையே இதை மூடி மறைக்க முடியவில்லை என்பது தெளிவு. ஆனால் ஜெஸ்மியை மனநோயாளி என முத்திரை குத்த நடந்த முயற்சி குறித்து தேலக்காட் அலட்டிக் கொள்ளவில்லை. அது அவரது மன ஆரோக்கியம் குறித்த பிரச்சினை எனச் சமாளிக்கிறார்.

இதே தேலக்காட் இந்திய கத்தோலிக்க பிஷப் கவுன்சிலின் தலைவரான 82 வயது கார்டினல் வர்கி விதயாதிலின் சுய சரிதையை எழுதியிருக்கின்றார். அதில் திருச்சபையில் கன்னியாஸ்திரிகள் அச்சத்துடன் வாழ்வதாகவும், பலர் பாதிரியார்களின் எடுபிடி சேவகர்களாகக் காலம் கழிப்பதாகவும் விதயாதில் குறிப்பிட்டிருக்கிறார். அதே சமயம் திருச்சபையின் கவுரவத்தை விட்டுக்கொடுக்காமல், தப்பு செய்பவர்களின் முயற்சிக்கு சபை ஒருபோதும் உதவாது என்றும் தெரிவித்திருக்கிறார். எல்லாம் திருச்சபையின் முடைநாற்றம் முச்சந்திக்கு வந்தபின்பு தவிர்க்க இயலாமல் தெரிவிக்கப்படும் பாவ மன்னிப்புக்கள்.

தேவனை நம்பும் எளிய மக்கள் தமது தவறுகளை திரைத் தடுப்புக்கு அப்பால் உள்ள பாதிரியார்களிடம் கூறி மன்னிப்பைப் பெற்றுக் கொள்கின்றார்கள். இங்கே ஒரு மனிதனின் தவறு அவனது சுயவிமரிசனம் மற்றும் மற்றவர்களின் விமரிசனத்திற்கு உட்பட்டு திருத்தப்படுவதில்லை. அதற்கு மாறாக அவனது தவறுகள் பொதுவான காரணங்களினால் மன்னிக்கப்பட்டு, அதாவது தவறை தேவனின்

**மற்றவர்களின் பாவங்களுக்கு தேவனின் பிரதிநிதியாய் இருந்து மன்னிப்பை வழங்கும் ஒரு பாதிரியார் தனது பாவம் என்பது தேவனால் அங்கீகரிக்கப் பட்டது என்று காட்ட முயல்வதன் மூலம் கடவுள் என்பவரே கற்பனையானவர் என்பதைத் தெள்ளத் தெளிவாக உணர்ந்து கொள்கின்றார்.**

பிரதிநிதியிடம் கூறியதற்காகவே குற்றவாளி என்ற நிலையிலிருந்து விடுவிக்கப்படுகின்றான். இம்மை, மறுமை, பாவம், புண்ணியம், சொர்க்கம், நரகம், சாத்தான்கள், பரிசுத்த ஆவி என்று கற்பனையாகக் கட்டியமைக்கப்பட்ட மதிப்பீடுகள் நிகழ்காலத்தின் நெறிமுறையை மதத்தின் நம்பிக்கை என்ற பெயரால் வடிவமைக்கின்றன. இந்தக் கற்பனையான விடுவித்தலில் எளிய தவறுகள் செய்யும் சாதாரண மக்களுக்குப் பெரிய பிரச்சினை எதுவும் இல்லை.

ஆனால் வார்த்தைக்கு வார்த்தை கடவுள் அமெரிக்காவை ஆசிர்வதிப்பார் என்று பேசும் அமெரிக்க அதிபர்களுக்கு ஈராக்கிலும், ஆப்கானிலும் அப்பாவி மக்கள் அமெரிக்கத் துருப்புக்களால் கொல்லப்படுவது தெரியும். போபாலில் பல ஆயிரம் பேரைக் கொன்ற ஆண்டர்சனோ, பங்குதாரர்களை ஏமாற்றிய என்ரானின் தலைவரோ தேவாலயம் சென்று பாவமன்னிப்பு பெறுவார்களா என்ன? தொழில் வேறு மதம் வேறு என்பதோடு, அவர்களைப் பொறுத்தவரை மதம் என்பது மக்களை நயம்பட ஏமாற்றுவதற்கான தந்திரம்தான்.

பகுத்தறிவால் நாத்திகரானவர்களை அறிந்திருப்போம். ஆனால் பூசாரிகள் அத்தனைபேரும் நாத்திகர்கள்தான் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? கருவறைக்குள்ளிருக்கும் சாமியின் உருவத்தைத் தாங்கியிருக்கும் கல் வெறுமனே கல்தான் என்பதை மற்றவர்களை விட பூசாரி நன்கறிவான். அதனால்தான் சபரிமலையின் தலைமைப் பூசாரி சுத்தபத்தமாக இருப்பதற்காக விலைமாதர்களிடம் செல்வதும், தில்லை வாழ் தீட்சிதர்கள் நள்ளிரவில் நடராசப் பெருமானின் சன்னிதியில் டாஸ்மார்க் பாரை நடத்துவதும் சாதரணமாகியிருக்கின்றது. இந்த விதி பாதிரியார்களுக்கும் பொருந்தும்.

அமெரிக்காவில் மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாதிரியார்கள் சிறுவர்களிடம் பாலியல் முறைகேடுகள் செய்ததாக வழக்கு நடக்கின்றது. இதில் பாஸ்டனைச் சேர்ந்த பாதிரியார் ஒருவருக்கு குற்றம் நிரூபிக்கப்பட்டு எட்டாண்டு சிறைத் தண்டனையே கிடைத்திருக்கின்றது. இந்தப் பாலியல் முறைகேடுகளுக்காக மட்டும் அமெரிக்க திருச்சபை சுமார் பத்தாயிரம் கோடி ரூபாயை அபராதமாகவும், நிவாரணமாகவும் கட்டியிருக்கின்றது. அமெரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போப் இதற்காகவே மன்னிப்பு கேட்டிருக்கிறார். அமெரிக்க கிறித்தவ சபைகளில் நிலவும் இந்த 'ஒழுக்கம்' எல்லா நாடுகளிலும் நீக்கமற நிறைந்திருக்கின்றது என்பதைத் தனியாக விளக்கத் தேவையில்லை.

ஒரு மனிதனின் தவறு என்பது அவனது சமூகத்தாலும், சமூக நடவடிக்கைகளாலும் தான் திருத்த முடியும். ஒரு கணவனால் கொடுமைக்குள்ளாக்கப்படும் இசுலாமியப் பெண்ணொருத்தியின் தீர்வுக்கு குர்ஆனையும், ஹதீசையும் புரட்டுவதால் என்ன பயன்? பாதிக்கப்பட்ட அந்தப் பெண்ணின்



**சுற்றுலாத் தலமாகும் கேரளாவின் பரனங்கானம்: அல்போன்சா கல்லறையை வணங்கும் பக்தர்கள்!**



தனது சுயசரிதை நூலுடன் ஜெஸ்மி.

உணர்வுகளைக் கணக்கில் கொண்டா மதத்தின் தீர்வுகள் முடிவு செய்யப்படுகின்றன?

எல்லா மதங்களும் மனித சமூகத்தின் தவறுகளைப் பாவம், புண்ணியம் என்ற மத நம்பிக்கையின் மூலம்தான் அணுகுகின்றன. 21-ஆம் நூற்றாண்டின் மனிதகுலப் பிரச்சினைகளுக்கு மிகப் பழைய நூற்றாண்டின் புண்ணிய நூல்களில் தீர்வுகள் தேடப்படுகின்றன. உண்மையில் மதத்தை வைத்து ஆதாயம் தேடும் ஆளும் வர்க்கத்தின் பல பிரச்சினைகள் இத்தகைய மத நூல்கள் மூலம் கேள்வியின்றி தீர்க்கப்படுகின்றன.

ஜெஸ்மி தனது சுயவரலாற்றில் ஒரு பாதிரியார் எல்லா கன்னியாஸ்திரிகளையும் கட்டித்தழுவி முத்தம் கொடுப்பதைக் குறிப்பிட்டு, தான் மட்டும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தாகவும் அதற்கு அந்தப் பாதிரியார் முத்தம் கொடுப்பதை நியாயப்படுத்தும் வாசகத்தை பைபிளிலிருந்து படித்துக் காண்பித்ததாகத் தெரிவிக்கின்றார். பச்சையான பாலியல் இச்சைகளையும், வன்முறைகளையும் கூட பைபிளின் பெயரால் நியாயப்படுத்த முடியும் என்றால் கன்யாஸ்திரிகளுக்கு விடுதலை என்பது எப்படி சாத்தியம்?

மற்றவர்களின் பாவங்களுக்கு தேவனின் பிரதிநிதியாய் இருந்து மன்னிப்பை வழங்கும் ஒரு பாதிரியார் தனது பாவம் என்பது தேவனால் அங்கீகரிக்கப்பட்டது என்று காட்ட முயல்வதன் மூலம் கடவுள் என்பவரே கற்பனையானவர் என்பதைத் தெள்ளத் தெளிவாக உணர்ந்து கொள்கின்றார். ஏசுவின் மேல் நம்பிக்கை கொள்ளும் ஒரு ஏழை அல்ல; ஏசுவின் தரகர்களாக வலம் வந்து பாவ புண்ணியங்களைத் தீர்மானிக்கும் இந்தப் பாதிரியார்கள்தான் அபாயகரமானவர்கள். இந்த அபாயம் பக்தர்களின் கேள்விக்கிடமற்ற நம்பிக்கை தரும் துணிச்சலிலிருந்து எழுகின்றது.

எல்லா மதங்களும் தமக்கு வேண்டிய நம்பிக்கைகளைக் கண்டிப்பான கண்மூடித்தனமான முறையில்தான் ஒரு கட்டளையைப் போலவே பக்தர்களிடம் கோருகின்றன. எந்தக் காரணத்தைக் கொண்டும் ஒரு மத நம்பிக்கையில் ஐயமோ, சந்தேகமோ, நம்பிக்கையின்மையோ வரக்கூடாது என்பதால்தான் மதப் பூசாரிகளின் அட்டூழியங்கள் அதற்குரிய பொருளில் பார்க்கப்படுவதில்லை. நடிகைகளோடு கூடிக்குலாவியும், சங்கர ராமனை ஆள் வைத்துக் கொன்றவர் என்றாலும் ஜகத்குரு என உலாவரும் சங்கராச்சாரியை பெரும்பான்மையான பார்ப்பன மேல்சாதியினர் இன்னமும் புனிதவானாக நம்புகின்றார்கள் என்றால் இந்தப் பக்தர்களின் விமரிசனமற்ற நம்பிக்கைதான் நமது விமரிசனத்திற்குரியது.

ரோமாபுரிப் பேரரசின் அடிமைகளை விடுதலை செய்வதற்கு முயன்ற ஏசுநாதரின் பெருமை அவர் செய்த அற்புதங்களின் பெயரால்தான் வியந்தோதப் படுகின்றது. இன்றும் தினகரன் முதல் பல நற்செய்தியாளர்களும், சாய்பாபா, கல்கி, பிரேமானந்தா முதலான இந்துச் சாமியார்களும் அற்புதங்கள் மூலம்தான் தமது ஆன்மீகச் சந்தையை உருவாக்குகின்றனர்.

ஏசுநாதர் முடவர்களை நடக்க வைத்து, குருடர்களைப் பார்க்க வைத்து, தொழுநோயாளிகளைக் குணப்படுத்தி, அப்பங்களைப் பல்லாயிரமாகப் பெருக வைத்து அற்புதங்களைச் செய்தார் என்பதுதான் இன்றும் கிறித்தவத்தின் அடிப்படை நம்பிக்கையாக இருக்கின்றது. உண்மையில் ஏசுநாதர் அவர் காலத்தில் இப்படி சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட பிரிவினரின் மேல் அன்பு காட்டினார் என்பதைத் தாண்டி அவர் எந்த அற்புதங்களும் செய்யவில்லை. அப்படி யாரும் செய்யவும் முடியாது. இன்றைக்கு கிறித்தவ நற்செய்திக் கூட்டங்களில் அந்த அற்புதங்களுக்கான சாட்சிகள் செட்டப் செய்யப்பட்டு மேடையேற்றப்படுகின்றனர்.

இப்படித்தான் மதத்தின் மூடநம்பிக்கை நசிந்து போகாமல் காப்பாற்றப்படுகின்றது. அந்த அற்புதங்கள் உண்மை என்றால் இன்று கிறித்தவ மிசினரிகள் நடத்தும் எண்ணிலடங்கா மருத்துவமனைகளுக்கு என்ன காரணம்? அதற்குப் பதில் தேவ செய்தியாளர்களை வைத்து எல்லா நோயாளிகளையும் சடுதியில் குணமாக்கி விடலாமே? மேலும் ஏகாதிபத்தியங்களின் ஆக்கிரமிப்புப் போரினால் உறுப்புக்களை இழக்கும் ஈராக், ஆப்கான் நாடுகளைச் சேர்ந்த அப்பாவிகளுக்கும் அந்த உறுப்புக்களை மீண்டும் தருவிக்கலாமே?

இப்படி கலப்படமில்லாத பொய்மையின் வலிமை கொண்டுதான் மதங்களின் சிறப்புக்கள் முழுமுதல் உண்மை போல இறைக்கப்படுகின்றன. இதையே நவீன இந்து சமய சாமியார்கள் யோகம், தியானம் என்று எல்லா வளங்களையும் தரும்

உடனடி லாட்டரிகளைப் போல அள்ளித் தெளித்து தமது ஆன்மீக சாம்ராஜ்ஜியங் களை விரிவாக்குகின்றனர்.

அல்போன்சாவின் புனிதர் பட்டத்தின் கதையைக் கூட எடுத்துக் கொள்வோம். அவர் இறந்த பிறகு அவரது கல்லறை யில் பிரார்த்தனை செய்த இரண்டு பேருக்கு அற்புதங்கள் நடந்திருக்கின்ற தாம். அதில் ஒரு கேரள தம்பதியினர் பிறவியிலேயே ஊனமுற்ற தமது மகன் அல்போன்சாவின் அருளால் ஊனம் நீங்கி நடப்பதைத் தெரிவித்தார்களாம். இதை ஒரு மருத்துவர் குழு ஆராய்ந்து உண்மையென உறுதி செய்து வாட்டிக னுக்கு அறிக்கை அளிக்கப்பட்டு ஏற்கப் பட்டதாம். இந்த மருத்துவர் குழுவில் இருக்கும் மருத்துவர்களும் கேள்விக்கிட மற்ற நம்பிக்கை கொண்டு திருச்சபையை மதிக்கும் பக்தர்கள் என்பதுதான் உண்மை.

அன்னை தெரசாவுக்கும் இப்படித் தான் இரண்டு அற்புதங்கள் ஜோடிக்கப் பட்டு புனிதர் பட்டம் கொடுக்கப்பட்டது. கிறித்தவ மதத்திற்காகத் தொண்டூழியம் செய்பவர்களை - அவர்கள் மட்டுமின்றி யாரும் ஏன் போப்பும் கூட செய்ய முடி யாத - அற்புதங்கள் எனும் மோசடி கொண்டுதான் அளவிட வேண்டுமா? அல்போன்சா தனது வாழ்வை ஆசிரியப் பணிக்கு அர்ப்பணித்து விட்டு வெகுநாட் கள் நோய்வாய்ப்பட்டு இளம் வயதி லேயே இறந்து விட்டார். இதைத் தவிர அந்த அப்பாவி கன்னியாஸ்திரியின் கல் லறைக்குச் சென்று பிரார்த்தித்தால் அற் புதங்கள் நிகழும் என்று ஜோடிக்க வேண் டிய அவசியமென்ன?

மேற்குலகில் கிறித்தவத்தின் நம் பிக்கை வெகுவாக வடிந்திருக்கும் நிலை யில் மூன்றாம் உலக நாடுகளிலிருக்கும் மந்தைகளைத்தான் தேவனின் செய்தி யால் மாற்ற முடியும் என்ற ஒரே காரணத் தால்தான் அல்போன்சாவுக்கு புனிதர் பட்டம் வழங்கப்பட்டிருக்கின்றது. டெண் டுல்கர் சதமடித்தாலோ, ரஜினி பஞ்ச் டய லாக் பேசினாலோ முழு நாடே கொண் டாடும் சூழலில் ஒரு முதல் இந்தியருக்கு அளிக்கப்பட்ட புனிதர் பட்டமும் அப்ப டித்தான் கொண்டாடப்படுகின்றது. மேலும் பாதிரியார்களையும், கன்னி யாஸ்திரிகளையும் அள்ளி வழங்கும் கேரளத்தின் சேவையைக் கணக்கில் கொண்டும் இந்தப் புனித மோசடி கச்சி தமாக நடந்திருக்கின்றது.

இலட்சக்கணக்கான பாதிரியார்கள் மற்றும் கன்னியாஸ்திரிகள் வாழும் உல கில் இப்படி ஒரு சிலர் மட்டும்தான் அற்புதங்களைச் செய்ய முடியுமென்றால் மற்றவர்களெல்லாம் பாவிகளா இல்லை சாத்தானின் அவதாரங்களா? நோய் வாய்ப்பட்டு பலமாதங்கள் துயருற்ற அல்போன்சாவை அவர் காலத்திய பாதி ரிகள் அற்புதம் செய்து குணமாக்கியிருக் கலாமே, என் அப்படி நடக்கவில்லை? ஆக மதநம்பிக்கையைப் பரப்புவதி லேயே இத்தகைய பச்சையான மோசடி களும் ஊழலும் இருக்கும்போது, கன்னி யாஸ்திரிகள் மீதான பாலியல் வன்மு றையை மட்டும் தனிச்சிறப்பான மோசடி என்று எப்படிக் கூற முடியும்?

எனவேதான் திருச்சபையில் இருக் கும் ஆன்மீக ஊழல்களும், லவுதீக ஊழல்களும் ஒரு நாணயத்தின் இரு பக் கங்கள் என்பதை வலியுறுத்திச் சொல்கின் றோம். அற்புதங்கள் என்பது எப்படியும் நிகழாத ஒன்று என உறுதியாகத் தெரிந் திருக்கும் ஒரு பாதிரி, சபையில் சேரும் இளம் கன்னியாஸ்திரியை பாலியல் வன் முறை செய்வது ஒன்றும் தெய்வக் குற்ற மில்லை என ஏன் நினைக்க மாட்டான்? தெய்வமே இல்லை என்றாகும்போது தெய்வக்குற்றம் மட்டும் எப்படி இருக்க முடியும்?

பேசாத அம்மன் சிலையை வெறும் கல்லென்று தெரிந்து கொண்டு கைகளால் கழுவி அபிஷேகம் செய்யும் ஒரு பூசாரி கோவிலுக்கு வரும் ஒரு பெண்ணைப் பாலியல் வன்முறை செய்வது அவனு டைய தனிப்பட்ட தவறு மட்டுமில்லை, தவறையே தனது ஆன்மாவாகக் கொண்ட மதத்தின் தவறாகவும் இருக் கிறது. மதத்தின் ஆன்மாவே தவறுகளின் மேல் கட்டப்பட்டிருக்கின்றது என்பதை

**இலட்சக்கணக்கான பாதிரியார்கள் மற்றும் கன்னியாஸ்திரிகள் வாழும் உலகில் இப்படி ஒரு சிலர் மட்டும்தான் அற்புதங்களைச் செய்ய முடியுமென்றால் மற்றவர்களெல்லாம் பாவிகளா இல்லை சாத்தானின் அவதாரங்களா?**

ஒத்துக்கொள்ளாத வரைக்கும் வாழ்க்கை யில் நடக்கும் தவறுகளை மட்டும் வெட் டியெடுத்து திருத்திவிட முடியாது.

ஜெஸ்மி தனது முப்பது வருட கன் னியாஸ்திரி வாழ்க்கையைத் துறந்து விட்டு, அதன் காரணங்களையும் வெளி உலகிற்கு தெரிவித்து விட்டார். இல்லை யேல் அவர் ஒரு மனநோயாளி என ஒரு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப் பார். இப்போதும் கூட அவர் கிறித்தவ மதத்திலிருந்து வெளியேறவில்லை. இவ ரது பிரச்சினை கிளப்பிய புயலில் அரண் டுபோன திருச்சபையும் இந்தப் பாலியல் முறைகேடுகளைச் சரி செய்யும் நுட் பத்தை அமல்படுத்தப் போவதாகப் பேசு கின்றது. ஏற்கனெவே சகோதரி அபயா கொலை வழக்கில் 2 பாதிரியார்களும் 1 கன்னியாஸ்திரியும் கைது செய்யப்பட் டிருக்கின்றனர். மூத்த கன்னியாஸ்திரிக ளின் கொடுமை தாங்காமல் சகோதரி அனூப் மேரி தற்கொலை செய்து கொண் டார். இவையெல்லாம் கேரளாவில் அம்பலத்திற்கு வந்த திருச்சபையின் குற் றங்கள்.

மதம் மற்றும் திருச்சபையின் முறைப் படியே ஆண் பாதிரிகளுக்கு உரிய தகு தியும், பதவியும் பெண் கன்னியாஸ்திரி களுக்கு கிடையாது. இப்படி வழக்கத்தி லேயே ஆணாதிக்கம் கோலோச்சும் ஒரு நிறுவனத்தில் சேரும் இளம்பெண்ணுக்கு என்ன பாதுகாப்பு இருக்க முடியும்? ஜெஸ்மி தன்மீது நிகழ்த்தப்பட்ட பாலி யல் வன்முறை குறித்து ஒரு மதர் சுப்பீரி யரிடம் முறையிட்ட போது அந்த தலை மைச் சகோதரி சொன்னாராம் ''இந்தக் குற்றச்சாட்டை விட சர்ச்சின் கவுரவம் முக்கியமானது என்பதால், இவற்றைக் கண்டுகொள்ளாமல் கர்த்தருக்கு பணி யாற்றுவதுதான் முக்கியம்''

புதிய கலாச்சாரம் பத்திரிகையை பல இளம் பாதிரியார்களும், கன்னியாஸ்தி ரிகளும் தவறாமல் படிக்கிறார்கள் என்ற நல்ல விசயம் எங்களுக்குத் தெரியும் என் பதால், அவர்களிடம் ஒரு கேள்வியை - உங்கள் மதத்தால் சாத்தானென்று கருதப் படுகிறோம் என்றாலும் - கேட்க விரும் புகின்றோம். ''நீங்கள் எப்போது சபையை விட்டு வெளியேறி உண்மை யான மக்கள் பணி ஆற்றப் போகின்றீர் கள்?''

சர்ச்சின் கவுரவம் பெரியதா, அல்லது உங்களின் மனச்சாட்சி பெரியதா? முடிவு செய்யுங்கள்.

● இளநம்பி



# கறுப்பர்களுக்கு இனவெறி கற்பித்த வெள்ளையினக் கனவான்கள்!

*நாஜிகள் நடத்திய யூதப் படுகொலைக்கு அடுத்து மிகக்கொடிய இனப்படுகொலை 1994-இல் ருவாண்டாவில் நடைபெற்ற துட்சி இனப்படுகொலை. ஹூட்டு இனவெறி அரசு மற்றும் இராணுவத்தின் துணையோடு சிறுபான்மையினரான துட்சி இன மக்கள் சுமார் 10 இலட்சம் பேர் படுகொலை செய்யப்படுவதை உலகம் அன்று கைகட்டி நின்று வேடிக்கை பார்த்தது. ஹூட்டு இனவெறி இராணுவத்துக்கு பிரான்சும், துட்சி கிளர்ச்சிப் படைக்கு அமெரிக்காவும் ஆதரவாக நின்றன.*

*பின்னர் துட்சி இனக் கிளர்ச்சிப் படை வென்று ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி விட்டது. இன்று பெரும்பான்மை ஹூட்டு இன மக்கள் அருகாமை நாடான காங்கோவின் அகதி முகாம்களில் உழல்கிறார்கள். அமெரிக்காவின் ஆசி பெற்ற ருவாண்டாவின் துட்சி இன அரசு இன்று ஆப்பிரிக்காவின் இஸ்ரேலாக மாறிவருகிறது. அமெரிக்க ஆசியுடன், காங்கோ முதலான அண்டை நாடுகளை மிரட்டும் அமெரிக்க அடியாளாக வளர்ந்து வருகிறது.*

*ஏகாதிபத்திய எதிர்ப்பில்லாத தேசியமும், ஏகாதிபத்தியத்தால் தூண்டி வளர்க்கப்படும் இனவுணர்வும், இனப்பகைமை எனும் மீள முடியாத நச்சுச் சுழலில்தான் மக்களை இழுத்து விடுகின்றன. தேசியம், இனவுணர்வு ஆகியவற்றை வர்க்கம் சாராததாகவும் வர்க்கத்துக்கு அப்பாற்பட்டதாகவும் கருதுவோர்க்கு ருவாண்டாவின் வரலாறு ஒரு மறுப்புரை. ஈழத்தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள இனவெறி அரசு நடத்திவரும் படுகொலை உச்சத்தில் இருக்கும் இன்றைய சூழலில், ருவாண்டா இனப்படுகொலையின் பின்புலத்தை விளக்கும் தோழர் கலையரசனின் இக்கட்டுரையை பொருத்தம் கருதி வெளியிடுகிறோம்.*

*தோழர் கலையரசன் மார்க்சிய சிந்தனையாளர். நெதர்லாந்தில் வசிக்கும் புலம் பெயர்ந்த ஈழத்தமிழர். வினவு இணைய தளத்தில் ஆப்பிரிக்கா பற்றி (ஆப்பிரிக்கர்கள் கண்டுபிடித்த இருண்ட ஐரோப்பா) அவர் எழுதி வரும் தொடரின் ஒரு பகுதியாக வெளிந்தது இக்கட்டுரை. தொடரை வாசிக்க:* www.vinavu.com

•••

ருவாண்டா, 1994-ஆம் ஆண்டு, நவீன உலகை உலுக்கிய இன அழிப்பு நடவடிக்கை, ஒரு வானொலி அறிவிப்புடன் ஆரம்பமாகியது: 'ஹூட்டு சகோதரர்களே! எம்மை இதுவரை அடிமைகளாக அடக்கி ஆண்டு வந்த துட்சி கரப்பான் பூச்சிகளை அழிக்கும் காலம் வந்துவிட்டது.' இனவாத வெறுப்பைக் கக்கும் அந்த அறிவிப்பைச் செய்த 'மில் கொலின்ஸ் சுதந்திர வானொலி', ஹூட்டு பாசிச சக்திகளால் நடத்தப்பட்ட தனியார் வானொலி என நம்பப்படுகின்றது. ருவாண்டாவில் நீண்ட காலமாகவே ஹூட்டு இனவெறி அரசியல் நடத்தி வந்த, பாசிச 'குடியரசு பாதுகாப்புக் கூட்டணி' (CDR) கட்சியுடன், ஆளும்கட்சி தலைமையிலான Interahamwe என்ற துணைப்படையும் சேர்ந்து கொண்டு சிறுபான்மை துட்சி இன மக்களை நரபலி வேட்டையாடிக் கொன்று குவித்தனர். ருவாண்டாவின் தேசிய இராணுவம் பெரும்பான்மை ஹூட்டு இனத்தவரின் ஆதிக்கத்தில் இருந்ததால், இனப்படுகொலையில் இராணுவத்தின் நேரடிப் பங்களிப்பை மறுக்க முடியாது.

**ஏகாதிபத்திய எதிர்ப்பில்லாத தேசியமும், ஏகாதிபத்தியத்தால் தூண்டி வளர்க்கப்படும் இனவுணர்வும், இனப்பகைமை எனும் மீள முடியாத நச்சுச் சுழலில்தான் மக்களை இழுத்து விடுகின்றன. தேசியம், இனவுணர்வு ஆகியவற்றை வர்க்கம் சாராததாகவும் வர்க்கத்துக்கு அப்பாற்பட்டதாகவும் கருதுவோர்க்கு ருவாண்டாவின் வரலாறு ஒரு மறுப்புரை.**

ருவாண்டாவின் பெரும்பான்மை இனமான ஹூட்டுக்களுக்கும், சிறுபான்மை இனமான துட்சிகளுக்கும் இடையிலான பகைமை, கசப்புணர்வு நீண்டகாலமாக நீருபூத்த நெருப்பாக அடங்கிக் கிடந்தது. ருவாண்டா, பெல்ஜியத்திடம் இருந்து சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து, துட்சி சிறுபான்மையினருக்கு எதிரான இனக்கலவரங்களையும், துட்சி கிளர்ச்சியாளர்களின் அரசுக்கு எதிரான ஆயுதமேந்திய போராட்டத்தையும் சந்தித்துள்ளது.


1994-இல் பதவியில் இருந்த ஜனாதிபதி 'ஹபியாரிமனா' வெளிநாட்டு அழுத்தம் காரணமாக, அமைதிப் பேச்சுவார்த்தைக்கும், அதிகாரப் பரவலாக்கத்திற்கும் சம்மதித்திருந்தார். இதனால் ஹபியாரிமனா ஒரு ஹூட்டு இன மிதவாதியாக, இன்னும் சொன்னால் 'ஹூட்டு இனத் துரோகியாக', பாசிச சக்திகளால் கணிக்கப்பட்டிருக்க வாய்ப்புண்டு. இருப்பினும் 1994-ஆம் ஆண்டு, ஏப்ரல் 6-ஆம் தேதி, தான்சானியாவில் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு நாடு திரும்பிக் கொண்டிருந்த ஜனாதிபதியின் விமானத்தை சுட்டு வீழ்த்திய ஏவுகணையை ஏவியது யார் என்ற மர்மம் இன்று வரை விலகவில்லை.

ஹூட்டு பாசிஸ்டுகள் சுட்டு வீழ்த்தி இருக்கலாம் என்று அப்போது நம்பப்பட்டாலும், இன்றைய ருவான்டா அதிபர்

‘போல் ககாமே’யின் துட்சி கொரில்லாக்களினது வேலை என்று பிரான்சு குற்றஞ் சாட்டியது. (விமானி ஒரு பிரெஞ்சுக்காரர் என்பதால் பிரெஞ்சு நீதிமன்றம் விசாரணை நடத்தியது.)

எது எப்படி இருந்த போதிலும், ஜனாதிபதி ஹபியாரிமனாவின் மரணத்திற்குப் பின்னர் நாட்டில் அராஜகம் தலைவிரித்தாடியது. ‘துட்சி கிளர்ச்சியாளர்கள் எமது ஜனாதிபதியைப் படுகொலை செய்துவிட்டார்கள்’ என்ற செய்தி ஹூட்டு மக்கள் மத்தியில் காட்டுத்தீ போலப் பரவியது. விரைவில் அதுவே முழு துட்சி இனத்தவருக்கும் எதிரான துவேசமாக உருவெடுத்தது.

நாடு முழுவதும் வீதித்தடைகள் போடப்பட்டன. ஹூட்டு ஆயுததாரிகளின் வீதித்தடைச் சோதனையின் போது மறிக்கப்பட்ட வாகனங்களில் இருந்து துட்சி இனத்தைச் சேர்ந்தவர்களைத் தனியாகப் பிரித்தெடுத்தனர். அடையாள அட்டையில், ‘இனம்: துட்சி’ என்று குறிப்பிட்டிருப்பதே அவர்களைக் காட்டிக் கொடுக்க போதுமானதாக இருந்தது. (அடையாள அட்டையில் இனத்தைக் குறிப்பிடும் வழக்கம் பெல்ஜிய காலனிய ஆட்சியாளர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது) பெண்கள், குழந்தைகள் என்று வேறுபடுத்தாது துட்சி என்ற காரணத்திற்காகவே கொலை செய்யப்பட்டனர். துப்பாக்கிச் சன்னங்களை வீணாக்குவது செலவு என்று, அரிவாளால் வெட்டிக் கொல்லப்பட்டனர்.



குடியிருப்புகளுக்கு சென்று துட்சிகளைக் கொலை செய்த படையினர், சுடப்பட்ட துப்பாக்கிக் குண்டுகளுக்கான செலவை அவர்களே பொறுப்பெடுக்க வேண்டும் என்று மரணத்திலும் கணக்குப் பார்த்தனர். சாதாரண மக்களும் கொலை வெறியாட்டத்தில் பங்கு பெறுமாறு ஊக்குவிக்கப்பட்டனர். ஒரு கொலையைச் செய்தவனுக்கு, இன்னும் இன்னும் கொலை செய்ய வேண்டும் என்ற வெறி ஏறியது. கொலை செய்யப்பட்டவர்கள் துட்சி இனத்தவர்கள் மட்டுமல்ல. இன நல்லிணக்கத்தை விரும்பிய, மிதவாத ஹூட்டுகளும் கொல்லப்பட்டனர். உலகம் மறுபக்கம் பார்த்துக் கொண்டிருக்கையில், சில மாதங்களுக்குள் எட்டு லட்சம் முதல் ஒரு மில்லியன் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

‘இரண்டாம் உலகப்போரில் நடந்த யூத இனஅழிப்பிற்குப் பின்னர், இன்று உலகம் ஆப்பிரிக்காவின் மாபெரும் இனப்படுகொலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறது’ என்று நெஞ்சை நெகிழ வைக்கும் உருக்கமான காட்சிகளை விவரித்துக் கொண்டிருந்த சர்வதேச தொலைக்காட்சிகளால் உலகின் மனச்சாட்சியை உலுக்க முடியவில்லை. சோவியத் ஒன்றிய வீழ்ச்சிக்குப் பின்னர் உலகின் ஒரேயொரு வல்லரசாகத் திகழ்ந்த அமெரிக்கா, தன்னால் எதுவும் செய்ய முடியாது என்று கையை விரித்தது. ‘குழந்தை வல்லரசான’ ஐரோப்பிய ஒன்றியம் வாய்ச்சொல்லில் மட்டுமே தான் கெட்டிக்காரன் என்று காட்டிக் கொண்டிருந்தது.

இவ்வாறு இனப்படுகொலையைத் தொடராது தடுக்க வழி இருந்த போதும், சந்தர்ப்பத்தைத் தவற விட்ட காரணம் என்ன? அரசியலில் நண்பர்கள் கிடையாது. நிரந்தர நலன்கள் மட்டுமே உள்ளன. பிரான்சு அன்று ருவாண்டாவை ஆட்சி செய்த ஹூட்டு இராணுவத்திற்கு பயிற்சி அளித்து, ஆயுதங்கள் கொடுத்து வந்தது. அதே போல துட்சி கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்கா ஆதரவளித்து வந்தது. அவரவருக்கு தமது ஆட்கள் வெல்ல வேண்டும் என்ற எதிர்பார்ப்பே மேலோங்கி இருந்தது.

சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர், அமெரிக்காவின் கவனம் ஐரோப்பிய வல்லரசுகளின் மீது திரும்பியது. ஆப்பிரிக்காவில் நவ-காலனிய அரசியலில் மும்முரமாக ஈடுபட்டிருந்த பிரான்சு அதன் கண்ணில் துருத்திக் கொண்டிருந்தது. ருவாண்டாவில் துட்சிகளின் கிளர்ச்சி, பிரான்சின் ஆதிக்கத்தைத் துடைத்தெறியும் பதிலிப் போராக அமெரிக்காவால் கருதப்பட்டது.

துட்சிகளின் கொரில்லா இராணுவமான ‘ருவான்டா தேசாபிமான இராணுவம்’. (RPF) அயல் நாடான (ஆங்கிலம் பேசும்) உகண்டாவில் தளம் அமைத்திருந்ததும், RPF படைத் தளபதி (இன்றைய ஜனாதிபதி) போல் ககாமே உள்பட பல தலைவர்கள் உகண்டாவில் ஆங்கில மொழி வழிக் கல்வி கற்றிருந்தும், அமெரிக்கா இலகுவாக ஊடுருவ வாய்ப்பாக அமைந்தது. உகண்டாவின் இன்றைய ஜனாதிபதி முசவேனி, ஆட்சியைக் கைப்பற்ற நடத்திய ஆயுதப் போராட்டத்தில், RPF போராளிகள் பங்கு பெற்று இருந்தனர்.

முசவேனி, ககாமே ஆகியோரை ‘ஆப்பிரிக்காவின் நம்பிக்கை தரும் இளம் தலைமுறையைச் சேர்ந்த தலைவர்கள், மக்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்குவார்கள்’ என்று அமெரிக்க ஊடகங்கள் புகழ் பாடிக் கொண்டிருந்தன. ஒருவேளை ருவாண்டாவில் ககாமே ஆட்சிக்கு வந்த பின்னர், அரச கரும மொழியாகவும், கல்வியிலும் பிரெஞ்சை ஒதுக்கி விட்டு ஆங்கிலத்தை நடைமுறைக்கு கொண்டு வந்ததைச் சாதனையாகக் கூறலாம்.

•••

ருவாண்டாவில் இருப்பது இனப் பிரச்சினையா? ருவாண்டா மக்கள், காலங்காலமாக ஹூட்டு, துட்சி என்ற இன அடிப்படையில் பிரிந்து வாழ்ந்து வந்தனரா? இது ஆயிரம் வருடகால இனப்பகையா? நாம் முதலாளிய ஊடகங்கள் சொல்வதை நம்பினால், மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கு ‘ஆம்’ என்று பதில் வரும். ஆனால் இந்தக் கருத்தியல் எவ்வளவு தூரம் சரி என்று, எந்த சமூக விஞ்ஞானியும் ஆராயவில்லை, அல்லது

அவர்களது முடிவுகள் பாரபட்சமின்றி இருப்பின் பிரசுரிக்கப்படுவதில்லை. முதலில் ‘இனம்’ (Ethnicity, Race எதுவாக இருந்தாலும்) என்ற சொல்லே ஒரு ஐரோப்பியக் கண்டுபிடிப்பாகும்.

ருவாண்டாவின் இனப்பிரச்சினை, ஆச்சரியப்படத்தக்க வகையில் இலங்கை இனப்பிரச்சினையுடன் பெரும்பாலும் ஒத்திருப்பதை, நீங்கள் இந்தக் கட்டுரையை வாசிக்கும் போது புரிந்து கொள்வீர்கள். இது ஒன்றும் தற்செயல் அல்ல. காலனிய எஜமானர்களின் பிரித்தாளும் கொள்கை, எங்கேயும் ஒரே மாதிரித்தான் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆங்கிலேயர்கள் எவ்வாறு இலங்கையில் வாழ்ந்த சிங்கள, தமிழ் மொழி பேசும் மக்களுக்கிடையில் இனப் பகையைத் தோற்றுவித்து, இனவாதப் படுகொலைகளுக்கு வழிவகுத்தார்களோ, அதே வேலையை பெல்ஜியர்கள் ருவாண்டாவில் செய்தனர்.

19-ஆம் நூற்றாண்டின் இறுதியில், உலகின் மிக நீண்ட நதியான நைலின் நதி மூலத்தை தேடிச் சென்ற ஐரோப்பியர் சிலர் ருவாண்டாவைக் ‘கண்டுபிடித்தனர்’. அவர்களைத் தொடர்ந்து கிறித்தவ மதம் பரப்புவோரும் அந்தப் பிரதேச மக்களைக் கத்தோலிக்கர்களாக மாற்றும் பணியில் ஈடுபட்டனர். இவர்கள் எல்லோருக்கும் ருவாண்டாவில் எதிர்பாராத ஆச்சரியங்கள் காத்திருந்தன.

இன்றைய ருவாண்டா, புரூண்டி, மற்றும் உகண்டாவின் தென் பகுதி, கொங்கோவின் கிழக்குப்பகுதி என்பனவற்றை உள்ளடக்கிய, ஒரே அதிகார மையத்தைக் கொண்ட மன்னரின் ஆட்சிப் பிரதேசமாக இருந்தது. மன்னரின் கீழ் நூற்றுக்கணக்கான சிற்றரசர்கள் மாகாணங்களை நிர்வகித்து வந்தனர். சுருக்கமாகச் சொன்னால், ஐரோப்பாவில் இருந்த அதே நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பு முறை ருவாண்டாவிலும் காணப்பட்டது. ஆயிரம் வருடங்களாக மக்கள் விவசாயம் செய்யும் அறிவைப் பெற்றிருந்தனர். அழகிய மலைநாடான ருவாண்டாவில், ஒவ்வொரு குன்றும் ஒரு குடும்பத்திற்கு சொந்தமான விவசாய நிலமாக இருந்தது.

ருவாண்டாவில் துவா (அல்லது) பிக்மீ என்றழைக்கப்படும் பழங்குடியினரும் வாழ்ந்து வருகின்றனர். பிற ஆப்பிரிக்க மக்களிடமிருந்து வேறுபடுத்தி அறியக்கூடிய தோற்ற அமைப்பைக் கொண்ட (குள்ளமானவர்கள், பழுப்பு நிறத்தவர்கள்) துவா மக்கள் இன்றும் கூட புராதான வேடுவர் சமூகமாகத்தான் வாழ்கின்றனர். யாருக்கும் தீங்கு செய்யாத, தானுண்டு, தனது வேலையுண்டு என வாழ்ந்து வரும் துவா மக்களை, ருவாண்டா அரசர்கள் அடிமைகளாக வைத்திருந்தனர். அரசன் மட்டுமல்ல, நிலப்பிரபுக்களும் துட்சி இனத்தை சேர்ந்தவர்களாக அதிகாரம் செலுத்தினர்.

அதற்கு மாறாக பெரும்பான்மை ஹூட்டு இன மக்கள் நாட்டுப்புறங்களில் பண்ணையடிமைகளாக, குத்தகை விவசாயிகளாக இருந்தனர். இந்த உண்மையே ஹூட்டு-துட்சி இனப் பிரிவினையை நிரூபிக்கப் போதுமானதல்ல. ஏனெனில் ‘நாகரிக காலத்தை’ சேர்ந்த நாம் இனம் பற்றி புரிந்து வைத்திருப்பதற்கும், அன்றைய மக்களின் சிந்தனைக்கும் இடையில் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. தனது சொந்த விவசாய நிலங்களில் அதிக விளைச்சலைப் பெறக் கூடியதாகப் பயிரிட்டு, தனது செல்வத்தைப் பெருக்கிக் கொள்ளும் ஹூட்டு ஒருவர் நிலப்பிரபுவாக வர முடிந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் அதிகாரத்தில் இருப்பது யாராக இருந்தாலும் துட்சி என அழைக்கப்படலாயினர்.

**‘இரண்டாம் உலகப்போரில் நடந்த யூத இனஅழிப்பிற்குப் பின்னர், இன்று உலகம் ஆப்பிரிக்காவின் மாபெரும் இனப்படுகொலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறது’ என்று நெஞ்சை நெகிழ வைக்கும் உருக்கமான காட்சிகளை விவரித்துக் கொண்டிருந்த சர்வதேச தொலைக்காட்சிகளால் உலகின் மனச்சாட்சியை உலுக்க முடியவில்லை.**

துட்சிகளின் மூதாதையர் எத்தியோப்பியாவில் இருந்து வந்தவர்கள் என்ற கருத்து நிலவுகின்றது. இரு பக்க இனவாதிகள் மத்தியிலும், ஐரோப்பிய காலனியாதிக்கவாதிகள் மத்தியிலும் இது போன்ற கருத்துகள் பிரபலமானவை. (‘துட்சிகளை எத்தியோப்பியாவிற்கு திருப்பி அனுப்புவோம்’ என்பது ஹூட்டு இனவாதிகளின் முழக்கங்களில் ஒன்று.) எத்தியோப்பியர், அல்லது சோமாலியர்கள் போல (இவர்களைப் பிற ஆப்பிரிக்கர்களிடம் இருந்து எளிதாகப் பிரித்தறிய முடியும்) பெரும்பாலான துட்சிகள் தோன்றுவதை மறுப்பதற்கில்லை. துட்சிகள் என்றால் உயரமானவர்கள், ஒடுங்கிய முகம், மெல்லிய உடல்வாகு கொண்டவர்கள்; ஹூட்டுகள் பருமனானவர்கள், வட்டமான முகம் கொண்டவர்கள், என்றெல்லாம் பிரித்துப் பார்ப்பது எல்லோருக்கும் பொருந்தாது. இருப்பினும் இனப்படுகொலை செய்யும் இனவாதிகளுக்கு அந்த வெளித் தோற்றமே போதுமானதாக இருந்தது.

ருவாண்டாவின் எழுதப்படாத செவி வழி வரலாற்றின் படி, கி.பி. 700-ஆம் ஆண்டளவில் வருகை தந்த ஹூட்டுகள், மரங்களை வெட்டி, நிலங்களைப் பண்படுத்தி விவசாயம் செய்து வந்துள்ளனர். பல்வேறு வகையான பழ மரங்களை நட்டு, உணவுப்பயிர்களைப் பயிரிட்டு, அதன் பலனை அனுபவித்து வந்தனர். இயற்கையோடு ஒன்றி வாழ்ந்த துவா வேடர்களைப் போலன்றி, குடிசைகளைக் கட்டி, கிராமங்களில் வாழ்ந்தனர். சமுதாயம் வளர்ச்சி அடைந்த போது ‘முவாமி’ என அழைக்கப்படும் மன்னனின் அதிகார மையமாக பரிணமித்தது. ஆயிரம் வருடங்களுக்கு முன்பே மத்திய ஆப்பிரிக்க இராச்சியமான, ருவாண்டா முழுவதும், ஒரே மொழி, ஒரே மதம், ஒரே கலாச்சாரம் நிலவியது.

ஹூட்டு நாகரீகம் தொடங்கி முன்னூறு வருடங்களுக்குப் பின்னர், வடக்கே இருந்து மாடுகளை மேய்த்துக் கொண்டு வந்தனர், துட்சிகள் என்ற வந்தேறுகுடிகள். இது இந்தியாவில் ஆரியரின் வருகையுடன் ஒப்பு நோக்கத்தக்கது. துட்சிகள் சமுதாயத்தில் மாடுகள் வைத்திருப்பது செல்வச் செழிப்பின் அடையாளம். ஒருவர் எத்தனை மாடுகள் வைத்திருக்கிறார் என்பதை வைத்துதான், அவர் பணக்காரரா இல்லையா என்பது தீர்மானிக்கப்பட்டது. இந்தக் கலாச்சாரம் இன்றும் கூட (துட்சி இனக்குடும்பத்தை சேர்ந்த) கென்யாவின் மாசாய் இன மக்கள் மத்தியில் நிலவுகின்றது. தமது மாடுகளுக்கு மேய்ச்சல் நிலம் தேடியே துட்சிகள், ருவாண்டாவிற்கு வந்தனர்.

அதனால் அங்கே விவசாயம் செய்து வந்த ஹூட்டுகளுடன் நிலத்திற்கான போட்டி, பொருளாதார முரண்பாடுகளை (கவனிக்கவும்: இன முரண்பாடுகள் அல்ல) தோற்றுவித்தது. வேறுபாடான பொருளாதார நலன்கள் இருந்த போதிலும், காலப்போக்கில் துட்சிகள், தம்மை விட நாகரீகத்தில் மேலோங்கியிருந்த ஹூட்டுகளின் மொழியையும்,

மதத்தையும் மட்டுமல்ல கலாச்சாரத்தையும் தமதாக்கிக் கொண்டனர். முரண் நகையாக அதுவே துட்சி இன மேலாதிக்கத்திற்கு ஆதாரமாக அமைந்தது.

அதிகார வெறி கொண்ட துட்சிகள் விரைவில் ருவாண்டாவின் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றினர். ஹூட்டுகள் விவசாயத்தையே பெரியதாக மதித்ததால், அவர்களைத் தமது ஆட்சிக்கு கீழ்ப்படிய வைப்பது, புதிய ஆட்சியாளருக்கு இலகுவாக அமைந்தது. ஹூட்டுகள் உழைக்கும் வர்க்கமாகவும், துட்சிகள் ஆளும் வர்க்கமாகவும் மாறியது அப்போது தான்.

தேச நிர்வாகத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. துட்சிகள் ஆரம்பத்திலேயே மேலிருந்து கீழே வரும் அதிகாரப் படிநிலைச் சமூகமாக வாழ்ந்தவர்கள். அதனால்தான் 20-ஆம் நூற்றாண்டிலும், அதிகார வர்க்கம் முழுவதும் துட்சிகளைக் கொண்டிருந்தது. தேசப் பாதுகாப்பும் அவர்கள் வசமே இருந்தது. விவசாயம் சார்ந்த உற்பத்தி உறவுகளில் பண்ணையடிமை முறையைப் புகுத்தினர். துட்சி பண்ணையார்களின் மாடுகளுக்கு மேய்ச்சல் நிலம் தேவைப்பட்டபோது, ஹூட்டு விவசாயிகளிடம் நிலங்களைப் பெற்றுக்கொண்டு, பண்டமாற்றாக சில மாடுகளைக் கொடுத்தனர். ஹூட்டு விவசாயிகள் மாடுகளைப் பராமரித்தாலும், பிறக்கும் கன்றுக்குட்டிகளை மட்டும் துட்சி உரிமையாளருக்கு கொடுத்து விட வேண்டும். நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் உற்பத்தியின் பலன்களை அனுபவிப்பது நிலப்பிரபுவாகத்தானே இருக்க முடியும்?

19-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய வல்லரசுகள் ஆப்பிரிக்காவைப் பங்கு போட்ட போது, ஜெர்மனிக்கு கிடைத்த துண்டுகளில் ருவாண்டாவும் ஒன்று. ஏற்கனவே இராச்சியத்தின் பகுதிகள் பிரிட்டனுக்கும் (உகண்டா), பெல்ஜியத்திற்கும் (கொங்கோ) தாரை வார்க்கப்பட்டது பற்றியோ, தன் நாடு தற்போது ஜெர்மன் ஏகாதிபத்தியத்திற்குள் அடங்குகின்றது என்பதையோ ருவாண்டா மன்னன் அறிந்திருக்கவில்லை.

இருப்பினும் தான்சானியாவில் இருந்து ருவாண்டா விவகாரங்களை கவனித்துக் கொண்ட ஜெர்மன் ஆளுநர், அரசாட்சியில் தலையிடவில்லை. முதலாம் உலக யுத்தத்தில் ஜெர்மனியை தோற்கடித்த பெல்ஜியம், ருவாண்டாவைத் தனது காலனியாக்கியது. 'பெல்ஜியத்தால் பாதுகாக்கப்படும் பிரதேசம்' என்று ஐ.நா. மன்றத்தின் முன்னோடியான 'தேசங்களின் கூட்டிணைவு' தீர்மானித்தது. காலனிக்கும், பாதுகாப்புப் பிரதேசத்திற்கும் இடையில் அதிக வித்தியாசம் இருக்கவில்லை.



பெல்ஜியம் தனது முப்பது வருட காலனிய ஆட்சிக்காலத்தில் ஐரோப்பிய மயப்பட்ட கல்வியையும், நிர்வாகத்தையும் அறிமுகப்படுத்தியது. அப்போதுதான் இனவாதக் கருத்துக்கள் துட்சி, ஹூட்டு இன மக்கள் மத்தியில் விதைக்கப்பட்டன.

துட்சி நிலப்பிரபுக்களின் அதிகாரம் செலுத்தும் திறமையைக் கண்டு வியந்த ஐரோப்பியர்கள், துட்சிகள் 'சாதாரண ஆப்பிரிக்கர்களாக' இருக்க முடியாது என முடிவு செய்தனர். அந்த எண்ணத்தில் உதித்ததுதான் இன்றைய இனவாதக் கோட்பாடுகள். பாப்பரசரின் பிரதிநிதியான வணக்கத்திற்குரிய 'லெயோன் கிளாஸ்', மிஷனரி பாடசாலைகள் மூலம் இனவாதக் கருத்துக்களையும் போதித்து வந்தார். ஆரம்ப காலங்களில் துட்சி இனப் பிள்ளைகளுக்கு மட்டுமே ஐரோப்பியபாணி கல்வி போதிக்கப்பட்டது. 'துட்சிகள் ஆளப் பிறந்தவர்கள்', 'இனரீதியாக ஹூட்டுக்களை விட சிறந்தவர்கள்', போன்ற இனவாதக் கருத்துக்கள், பாடசாலை சென்ற பிஞ்சுமனங்களில் விதைக்கப்பட்டன. புதிய மத்திய தர வர்க்கமாக உருவாகிய, கல்வி கற்ற துட்சிகளை அரச கருமங்களை முன்னெடுக்கவும், மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்ட புதிய நிர்வாக அலகுகளில் அதிகாரிகளாகவும் நாடு முழுவதும் நியமிக்கப்பட்டனர்.

அதே நேரம், இன்னொரு பக்கத்தில் பெல்ஜியர்கள் சிறிய அளவு ஹூட்டு நடுத்தர வர்க்கத்தையும் உருவாக்கத் தவறவில்லை. இருப்பினும் ருவாண்டா சுதந்திரம் பெற்ற நேரம், பெரும்பாலான அரச பதவிகளில் துட்சிகளே வீற்றிருந்தனர்.

1958-இல் எடுத்த கணக்கெடுப்பின்படி, மொத்த சனத்தொகையில் 14 வீதமான துட்சிகள், பல்கலைக்கழகங்களில் மூன்றில் இரண்டு பங்கு மாணவர்களாக இருந்தனர். சுதந்திரத்திற்குப் பின்னர் நடந்த பொதுத் தேர்தலில், பெரும்பான்மை ஹூட்டு மக்களின் வாக்குகளால் வெற்றி பெற்ற அரசாங்கம் தரப்படுத்தலைக் கொண்டு வந்து, இனப்பிரச்சினைக்கு வழி சமைத்தது. மெல்ல மெல்ல அதிகாரம் துட்சிகளின் கைகளில் இருந்து பறிக்கப்பட்டது.

பேரினவாத அரசாங்கம், ஹூட்டுகளுக்கு அதிக சலுகைகள் வழங்கி, பெரும்பான்மை வாக்குவங்கியைத் தக்கவைத்துக் கொண்டது. துட்சியினத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள், இனப்பிரச்சினையைத் தீர்க்குமாறு அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதும், ஹூட்டு இனவாத சக்திகளின் எதிர்ப்பின் காரணமாக ஒப்பந்தங்களை முறிப்பதும் நடந்தேறின. ஒவ்வொரு தடவையும் துட்சிகள் அகிம்சை வழியில் எதிர்ப்புக் காட்டிய போதெல்லாம், இனக்கலவரங்கள் தூண்டி விடப்பட்டன. இதனால் பெருமளவு துட்சி மக்கள் அகதிகளாக அயல் நாடுகளில் புகலிடம் கோரினர். துட்சிகள் ஆயுதமேந்திய போராட்டத்தின் மூலமே தமது உரிமைகளைப் பெற முடியும் என இளைஞர்கள் நம்பினர். ஹூட்டு பேரினவாத அரசிற்கெதிராக ஆரம்பிக்கப்பட்ட துட்சி விடுதலை இயக்கம் (RPF) கொரில்லாத் தாக்குதல்களை நடத்தியது.

இதையெல்லாம் எங்கேயோ கேட்ட மாதிரி இல்லையா? ஆமாம், ருவாண்டா - இலங்கை, துட்சிகள் - தமிழர்கள், ஹூட்டுகள் - சிங்களவர்கள்,

பெல்ஜியம்-பிரிட்டன், இந்தச் சொற்களை மாற்றிப் போட்டுப் பாருங்கள். வரலாறு ஒரே மாதிரியாகத் தோன்றும்.

1994-ஆம் ஆண்டு, துட்சியின மக்கள் வகைதொகையின்றி கொன்று குவிக்கப்பட்டாலும், துட்சிகளின் விடுதலைப் படையான RPF கொரில்லாக்களின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. தலைநகர் கிகாலியை கிளர்ச்சிப்படை கைப்பற்றியதும், ஹூட்டு மக்களும் அரச படையினரும் கொங்கோவிற்குள் புகலிடம் கோரினர். இதனால் யுத்தம் அயல்நாடான கொங்கோவிற்கும் பரவியது.

RPF இயக்கத்தில் துட்சி இன மேலாண்மைக் கருத்துக்களை கொண்ட போல் ககாமே போன்ற தலைவர்களின் ஆதிக்கம் நிலவுகின்றது. அதுவே புதிய அரசின் கொள்கையைத் தீர்மானிக்கின்றது. இன அழிப்புக் குற்றத்தில் ஈடுபட்ட மாஜி இராணுவ வீரர்களைத் தேடுவதாகக் காரணம் காட்டி, இரண்டு தடவை ருவாண்டாவின் புதிய (துட்சி) இராணுவம் கொங்கோவிற்குள் படையெடுத்தது. அது சர்வதேச கண்டனங்களையும் தோற்றுவித்தது. இருப்பினும் பலமான அமெரிக்க வல்லரசின் ஆதரவு காரணமாக, கொங்கோவில் நிலைகொண்டிருந்த ஐ.நா. சமாதானப்படை சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. (ஐ.நா. படை அதிகாரிகள் துட்சி இராணுவத்துடன் ஒத்துழைத்ததாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன)

'பெரும்பான்மை ஹூட்டு இன மக்கள் கொங்கோ அகதி முகாம்களில் வசித்துக் கொண்டிருக்கையில், ருவாண்டாவில் தங்கி விட்ட சிறுபான்மை துட்சிகளை மட்டுமே பிரதிநிதித்துவப் படுத்தும் RPF அரசாங்கம் நீதி நெறிமுறைக்கு உட்பட்டதா?' என்ற கேள்வி சர்வதேச அரங்கில் முன் வைக்கப்பட்டது. ஆனால் சிறுபான்மையினரின் அரசாங்கம் கடந்த பத்தாண்டுகளாக நிலைத்து நிற்பதுடன், சர்வதேச அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது.

சில வருடங்களுக்குப் பின்னர், கணிசமான அளவு ஹூட்டுகள் தயக்கத்துடன் தாயகம் திரும்பினர். RPF-ம் இன அழிப்பில் ஈடுபட்டது என்பதும், துட்சி ஆயுததாரிகள் ஹூட்டு மக்களைக் கொன்றுள்ளனர் என்ற குற்றச்சாட்டும், மறுக்க முடியாத உண்மைகள்.

ருவாண்டாவில் துட்சியின ஆதிக்கம் நிலைநாட்டப்பட்ட பின்னர், RPF அரசுக்கு ஹூட்டுக்களை வேட்டையாட வேண்டிய தேவை இருக்கவில்லை. ஜனாதிபதி போல் ககாமேயின் கவனம் பின்னர் தனது இனத்திற்குள் இருக்கும் எதிரிகளை நோக்கித் திரும்பியது. 'இன அழிப்பில் ஈடுபட்ட கொலைகாரர்கள்' என்பதுதான் தீர்த்துக் கட்டப்படும் அனைத்து எதிரிகள் மீதும் வைக்கப்படும் குற்றச்சாட்டு. கொங்கோவைத் தளமாகக் கொண்ட, ஹூட்டுக்களின் புதிய கொரில்லா இயக்கம் ஒன்று அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருவதாக அண்மைக்காலமாக கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நவீன ருவாண்டாவின் வரலாற்றில் ஏகாதிபத்திய தலையீடு பல்வேறு நோக்கங்களுக்காக வெளிப்பட்டுள்ளது. இதற்காக ஏகாதிபத்தியம் தனது பிரஜைகளின் உயிரையும், தேசத்தின் நன்மதிப்பையும் கூட விலையாகக் கொடுத்துள்ளது.

**மத்திய ஆப்பிரிக்காவில் இன்னொரு இஸ்ரேலை உருவாக்குவது தான் அமெரிக்காவின் நோக்கமும். இஸ்ரேல் 'யூத இனப் படுகோலையை தேசிய அரசியல் சித்தாந்தமாக' கடைபிடிப்பதைப் போல, இன்றைய ருவாண்டாவில் துட்சி இனப்படுகோலை பற்றிய நினைவுகூரல் தவிர்க்கவியலாத அம்சமாகி விட்டது. இனப்படுகோலைக்கு பலியானவர்களின் ஞாபகச் சின்னங்கள் பற்றி ஒவ்வோரு பிரஜையும் அறிந்திருக்க வேண்டும்.**

காலனிய ஆதிக்கம் காலாவதியாகி, நவ-காலனிய காலகட்டம் ஆரம்பித்த நேரம், பெல்ஜியம் ருவாண்டாவை பிரான்சிற்கு தத்துக்கொடுத்து விட்டிருந்தது. அந்நியக் கடன் வழங்குவதில் முதன்மையான நாடான பிரான்சின் வற்புறுத்தலுக்கு இணங்கித்தான், ருவாண்டாவின் ஹூட்டு அரசும், RPF இயக்கமும் பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டன. சமாதானத்தை நிலைநாட்ட ஐ.நா. சமாதானப்படை (MINUAR) வந்தது. ஒப்பந்தம் மீறப்பட்டு, மீண்டும் யுத்தம் மூண்ட பின்னர், ஜனாதிபதி ஹபியாரிமனா கொல்லப்பட்டதற்கு பழிவாங்கும் முகமாக, ஐ.நா. சமாதானப்படையில் பணியாற்றிய பத்து பெல்ஜிய வீரர்கள் ஹூட்டு தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர். இந்த சம்பவத்திற்குப் பிறகு ஐ.நா. படைகள் முற்றாக விலக்கிக் கொள்ளப்பட்டன.

இனப்படுகொலைக்கு தலைமை தாங்கிய, ஹூட்டு துணைப்படையான Interahamwe-க்கு பிரான்ஸ் இராணுவப் பயிற்சி வழங்கி வந்தது. இதனால் 'பிரான்சிற்கும் இன அழிப்பில் பங்குண்டு என்ற குற்றச்சாட்டை இன்றைய ருவாண்டா (துட்சி) அரசு பன்னாட்டு ஊடகவியலாளரின் முன்னால் (டிசம்பர் 2008) சமர்ப்பித்தது. அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள, காலஞ்சென்ற பிரெஞ்சு ஜனாதிபதி மித்தரோன் உட்பட பல பெரிய தலைகள் இன அழிப்புக் குற்றத்திற்காக சர்வதேச நீதிமன்றத்திற்கு முன்னால் நிறுத்தப்படுவது சாத்தியமானதல்ல.

இருப்பினும் இஸ்ரேலைப் போல, ருவாண்டாவும் அமெரிக்காவின் செல்லப்பிள்ளையாகி வருவதை இது எடுத்துக் காட்டுகின்றது. மத்திய ஆப்பிரிக்காவில் இன்னொரு இஸ்ரேலை உருவாக்குவது தான் அமெரிக்காவின் நோக்கமும். இஸ்ரேல் 'யூத இனப் படுகொலையை தேசிய அரசியல் சித்தாந்தமாக' கடைபிடிப்பதைப் போல, இன்றைய ருவாண்டாவில் துட்சி இனப் படுகொலை பற்றிய நினைவுகூரல் தவிர்க்கவியலாத அம்சமாகி விட்டது. இனப்படுகொலைக்கு பலியானவர்களின் ஞாபகச் சின்னங்கள் பற்றி ஒவ்வொரு பிரஜையும் அறிந்திருக்க வேண்டும்.

ருவாண்டாவும் இஸ்ரேலைப் போலவே சர்வதேச கண்டனங்களைப் பொருட்படுத்தாது அயல்நாடுகள் மீது படையெடுக்க முடிகின்றது. கொங்கோவில் கபிலாவின் தேசியவாத அரசு, சீனாவுடன் வர்த்தக ஒப்பந்தங்களைப் போட்ட கையோடு, கிழக்கெல்லையில் படையெடுத்த ருவாண்டா இராணுவத்துடன் நீண்ட போருக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பேரழிவை ஏற்படுத்திய யுத்தம் கொங்கோவை அமெரிக்காவின் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட வைத்தது.

அமெரிக்க இராணுவ ஆலோசகர்கள் ருவாண்டா இராணுவத்தை, ஆப்பிரிக்காவின் தலைசிறந்த நவீன இராணுவமாக்க பாடுபடுகின்றனர். வருங்காலத்தில் ஒரு குட்டி நாடான ருவாண்டா, தன்னைச் சுற்றியிருக்கும் பலவீனமான பெரிய நாடுகளைப் பயமுறுத்தப் போகின்றது.

● கலையரசன்

PUTHIYA KALACHARAM
(Tamil Monthly)

REGISTERED WITH THE REGISTRAR OF
NEWSPAPERS FOR INDIA UNDER No: 48047/87

Regd. No: TN / CCN / 434 / 09-11

புதிய
நூல்கள்,
ஒலி/ஒளி
குறுந்தகடுகள்
























கீழைக்காற்று
044-2841 2367
புதிய கலாச்சாரம்
044-2371 8706